சி.வி.ராமன் பிள்ளை

எஸ். குப்தன் நாயர்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

சி.வி. ராமன் பிள்ளை

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்தகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

சி.வி. ராமன் பிள்ளை

மூலம்: எஸ். குப்தன் நாயர்
தமிழாக்கம்: ஏ.ஆர். ராஜாமணி

சாகித்திய அக்காதெமி

C.V. Raman Pillai - Tamil Translation by A.R. Rajamani of S. Guptan Nair's monograph. Sahitya Akademi, New Delhi. 1999. Rs.25.

முதல் பதிப்பு :1999
ISBN : 81-260-0634-X

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி - 110 001.

விற்பனை :

'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி - 110 001.

'குணா பில்டிங்', 304-305, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பை - 400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

விலை ரூ.25.

Printed by :
Gee Bee Graphics
40/3, Mint Subbarayulu Naidu St.,
Madras - 600 021. Ph : 595 09 14

நூலாசிரியரின் குறிப்பு

பெரியவர் திரு.சி.வி.ராமன் பிள்ளை அவர்களைப் பற்றிய இந்த வரலாறு, வெகுகாலத்திற்கு முன்பே வெளியாகி இருக்கவேண்டும். அவரது 125-வது பிறந்த தினம் வந்த 1983-ல் இந்த நூல் வெளியாவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், ஆண்டுகள் பல உருண்டோடியும் இந்த வரலாறு உரிய முறையில் முழுவடிவம் பெற இயலாத நிலவரம் நீடித்தது. இதற்காக, நான் ஒருவன் மட்டுமே பழிக்கப்பட வேண்டியவன் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

திரு.ராமன் பிள்ளை அவர்களின் பிரமிக்கத்தக்க, ஆழ்ந்தகன்ற மேதாவிலாசத்தையும், புத்திக்கூர்மையையும் பற்றி மலையாளிகள் அல்லாத பிறருக்கு அறிமுகப்படுத்துவதென்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இதற்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக, அவர் மேற்கொண்ட கதைக் கருக்கள் அனைத்துமே திருவிதாங்கூர் வரலாற்று எல்லைக்குட்பட்டதாக-ஒரு குறுகிய வட்டத்தைச் சுற்றியே சுழலும் போக்கைக் கொண்டிருந்தன. எனவே, மலையாளிகள் அல்லாத பிற மக்களுக்கு, இவற்றைப் பற்றி அறிந்து கொள்வதில் அதிக நாட்டம் இல்லாமல் போயிற்று. மேலும், அவரது நாவல்களில் இடம் பெற்றிருந்த வரலாற்று நுட்பம் மிகுந்த வர்ணனைகள் வாசகர்களை வசீகரப்படுத்தும்படியான சொல் ஜாலங்கள் நிறைந்ததாக இல்லாமல், கனமான கதைக் கருவுடன் ஒன்றிய விதத்தில் அறிவார்த்தமானதாக இருந்தன. இவை தவிர, அவர் தனது படைப்புகளில் கையாண்ட மொழியாக்கமும், உத்திகளும் அசாதாரணமாகவும், எளிதில் பிறமொழிகளில் மொழியாக்கம் செய்ய இயலாதவாறு கடினமாகவும் இருந்தன. இந்த அடிப்படைக் காரணங்களினால் தான், அவரது நாவல்களில்,

'மார்த்தாண்ட வர்மா' என்கிற தலைப்பில் அரைகுறை மொழிபெயர்ப்பாக ஆங்கிலத்தில் வெளிவந்த இரண்டொன்றைத் தவிர, வேறு எதுவுமே வெளி உலகிற்கு கிடைக்க வாய்ப்பில்லாமல் போயிற்று. இதன் காரணமாகவே உலகளாவிய, தரமான இலக்கியப் படைப்பாளிகளின் அணியில், முதல் வரிசையில் எண்ணத் தக்க சிந்தனையாளராகத் திகழ்ந்த திரு. சி.வி. ராமன் பிள்ளை அவர்களின் படைப் பிலக்கியங்கள் அனைத்தையும் மலையாள மொழி தெரிந்த ஒரு சிறுபகுதி மக்களால் மட்டுமே அறிந்து கொள்ளவும், அனுபவிக்கவும் முடிந்தது.

ஆகவே, நான் இந்த நூலின் வாயிலாக, இந்தியாவின் பரந்துபட்ட அனைத்து மாநில வாசகர்களும் திரு.ராமன் பிள்ளை அவர்களின் படைப்பிலக்கியத் திறனையும், பெருமையையும் உணர்ந்து கொள்ளும் விதத்தில் அவற்றை வெளிப்படுத்த உண்மையான -ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளேன். என்னுடைய இந்தப் பணி சிறக்கும் வகையில், புகழார்ந்த புலமையாளரும், பிரபல கவிஞருமான டாக்டர் கே. அய்யப்ப பணிக்கர் அவர்கள், இந்த நூலின் கையெழுத்துப் படிவங்களை மிகுந்த சிரத்தையுடன் பரிசீலித்து, உரிய, மதிப்பரிய ஆலோசனைகளையும் வழங்கி உதவினார். அவருக்கு என் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவனந்தபுரம் எஸ். குப்தன் நாயர்
31.12.1991

முகவுரை

உலகப் புகழ்பெற்ற சர். வால்டர் ஸ்காட்டின் படைப்புகள் அடங்கலாக சர்வதேசப் பிரசித்திமிக்க வரலாற்று நூல்களின் மீது காலத்தின் கோலத்தால், அடர்த்தியான தூசு படிந்துள்ளது. சரித்திரம், திரும்பும் என்பார்கள் அறிஞர்கள். இது, உண்மையே. ஆனால், வரலாற்றுப் புதினங்களோ மிகச் சுலபமாக மேன்மேலும் திரும்பும் தன்மையும், வல்லமையும் கொண்டவை. அவற்றில் வீரதீர சாகசச் செயல்கள் புரியும் கதாநாயகர்களும், சாளரங்களில் நிகழும் ஆடல்-பாடல் மிகுந்த சிலிர்க்கவைக்கும் களியாட்ட லீலைகளும், அதற்கேற்றவாறு அமைக்கப்பட்ட, ஒரே சீரான வகையிலான நிலைக்களன்களும்; தொடர் நிகழ்ச்சியாகக் காணப்படும். நம் மன்னர்களைப் பற்றியும் அவர்களுடைய மாட்சிமை பொருந்திய அரசு சின்னங்களைப் பற்றியும் பெருமையோ, கவனமோ கொள்ளாத காலகட்டத்தில் வசிக்கிறோம். மாமன்னர்களையும், மகாராணி களையும் அரியணையிலிருந்து அகற்றிவிட்ட பொதுமனிதன், இதன் காரணமாக பொதுமக்கள் சமுதாயத்தின் கவனத்திலும், கவிஞர்களின் சிந்தனையிலும் அதிக முக்கியத்துவ மிக்கவனாகத் திகழ்கிறான் என்பது நிஜம்!

எனினும், மலையாள இலக்கியத் துறைக்கு என்றென்றும் மகத்துவமும், மங்காத புகழும் சேர்க்கும் விதத்தில் அமைந்ததும் இன்றளவும் பெருவாரியான வாசகர்களால் பரவலாகவும், தணியாத ஆர்வத்துடனும் படிக்கப்பட்டு வருவதுமான ஈடு இணையற்ற மூன்று உயரிய இலக்கியப் படைப்புகளை வழங்கி

யுள்ள சி.வி.ராமன்பிள்ளை, மலையாள இலக்கிய வானில், பிரகாசமிக்க ஒற்றை நட்சத்திரமாக விளங்குவது வெளிப்படை. சிறப்பான கற்பனை வளம், கருத்தாழமிக்க சொல்லாட்சி, வித்தியாசமாகக் கலை உலகில், 'சி.வி.' என சுருக்கமாகவும் உரிமையாகவும் பெருமிதத்தோடும் குறிப்பிடப்படும் சி.வி. ராமன்பிள்ளை அவர்கள், மலையாள இலக்கியத்தில் சமூக நாவல்களுக்கு வித்திட்டவர் எனவும், தந்தை எனப் போற்றப்படுபவருமான ஏ. சந்து மேனன் (1847-99) அவர்களுக்கு இணையாக மதிக்கப்படுகிறார். இவ்விருவரின், வரலாறு போற்றும் சாதனைகள் சர்ச்சைகளுக்கோ, கேள்விகளுக்கோ, மற்றவர்களால் முறியடிப்பதற்கோ இன்றளவும் இயலாததாக உள்ளது. ஆகவேதான், சந்துமேனன் மற்றும் ராமன்பிள்ளை ஆகியோரை விமரிசிக்க முனைபவர்கள், இவ்விருவரின் படைப்பிலக்கியங்களை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்க்கும் ரசனையுடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று!

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மேலும் ஆறு மலையாள நாவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால், அவற்றில் இரண்டு நாவல்கள் மட்டுமே, கணந்தோறும் வேகமாக மாறும் இயல்புள்ள நாகரிகங்களுக்கும் ரசனைகளுக்கும் ஈடுகொடுத்தும், எதிர் நீச்சல் போட்டும் இன்றளவும் அசைக்க முடியாத, அடித்தள உறுதியுடன் நிலைத்து நின்றுள்ளன. 1889-ல் வெளியான சந்து மேனனின் 'இந்துலேகா' மற்றும் 1891-ல் பதிப்பிக்கப்பட்ட, சி.வி. ராமன்பிள்ளையின் 'மார்த்தாண்டவர்மா' ஆகிய நாவல்களே அவை. மலபார் பகுதியில் நீதிமன்ற அதிகாரியாகப் பணியாற்றிவந்த, சந்துமேனன், அவரது நாற்பத்திரண்டு வயது வரையில் இலக்கியத் திறமையை எவ்விதத்திலும் வெளிப்படுத்தாமலிருந்தவர். நாற்பத்திரண்டாவது வயதில் அவர், தற்செயலாக, சிறிய அளவிலான இலக்கியப் படைப்பை உருவாக்கினார். அது, அவருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது. ஆனால், சி.வி. ராமன்பிள்ளை அவர்களோ, கல்வித் தகுதியில் ஓர் இடைநிலைப் பட்டதாரியாக இருந்தாலும், எழுத்தாளர் பதிப்பாளர் என இலக்கியத் துறையில் தனி முத்திரையைப் பதித்து பெரும்புகழ் பெற்றார். அவரது கல்லூரி முதல்வரும், மனித நேயமிக்க ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த கனவானுமாகிய ஜான்ராஸ், தனது பிரியத்திற்குரிய மாணவர் என்கிற வகையில் ராமன் பிள்ளையிடம் அளவில்லாத பாசத்தைப் பொழிந்ததுடன், அவரது வளர்ச்சிக்கு

உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். 'ராமு' எனவும் சில சமயங்களில் சோனி எனவும் ராமன் பிள்ளையை அன்போடும், உரிமையோடும் ஜான்ரோஸ் அழைப்பது வழக்கம். ராமன் பிள்ளை தனது இளமைப் பருவத்தில், அந்த காலகட்டத்தில் பெரும் பிரபலத்துடன் விளங்கிய அரசியல்வாதிகளை இடையறாது, காரசாரமாகத் தாக்கி விமரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இருப்பினும், பிரின்ஸிபால் ஜான்ரோஸ் இதற்காக ராமன் பிள்ளையைக் கண்டிப்பதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ மனம் ஒப்பாத அளவிற்கு அவர் மீது அன்பு கொண்டிருந்தார். இது தவிர ராமன் பிள்ளையிடம் அனுசரணையான அணுகுமுறைகளை மேற் கொண்டு நாட்டு நடப்புகளைப் பற்றி விவாதிப்பதிலும், அவரது சொந்தக் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதிலும் ஜான்ரோஸ் பெரிதும் ஈடுபாடு உள்ளவராகவும் விளங்கினார்.

சந்துமேனன் அவர்களின் 'இந்துலேகா' நாவலுக்கு இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு முன்பாகவே, ராமன் பிள்ளையின் 'மார்த்தாண்ட வர்மா' எனும் முதல் படைப்பு எழுதி முடிக்கப் பட்டிருந்த போதிலும், அதை அவர் எங்கோ ஒரு மூலையில் தூக்கிப் போட்டுவிட்டார். அவரது தன்னம்பிக்கை திடப்பட்டிராதது இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இறுதியில்,'மார்த்தாண்ட வர்மா' 1891-ம் ஆண்டில் அச்சு வடிவம் கண்டு பிரசுரமாகியபோது, அற்புதமான, மாபெரும் இலக்கியப் படைப்பு எனப் பாராட்டும், வரவேற்பும் பெற்றது. மார்த்தாண்ட வர்மா நாவலின் பிரசுர நிகழ்ச்சியை 'இலக்கிய ரீதியான மகத்தான சாதனையாக நாங்கள் கொண்டாடுகிறோம்', என்கிற விதத்தில், இந்த நாவலைப் பற்றிய அவரது சமகாலத்திய இலக்கிய மதிப்பீடுகள் புகழ் பரப்பின. ''திருவனந்தபுரம் என்கிற மலையாள தேசத்தின் மாநகரைச் சேர்ந்த மக்கள் அனைவரும், மேட்டுக்குடி மற்றும் நடுத்தர, கடைநிலை வர்க்கம் என்பதுபோன்ற சமுதாய பேதாபேதங்களுக்கு அப்பாற்பட்டு, ஒருமித்த வாசக ருசியோடும், ரசனையோடும் ராமன் பிள்ளையவர்களின் 'மார்த்தாண்ட வர்மா'வை பெரும் இலக்கிய தாகத்தோடும், ஆர்வத்துடனும் படித்ததுடன் நில்லாமல், இந்த நாவலைப் பற்றிய நினைவுகளிலேயே அவர்களுடைய நிமிடங்கள் கழிந்தன! வீடுகளிலும், குடிசைகளிலும், நீதிமன்ற வளாகங்களிலும், பொது நல மன்றங்களிலும், பொழுதுபோக்கு சங்கங்களிலும், குறிப்பாகச் சொல்வதனால், மக்கள் கூடும்

அனைத்து இடங்களிலும் 'மார்த்தாண்ட வர்மா' பற்றிய பேச்சாகவே இருந்தது. இந்த நாவலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கதாபாத்திரம் குறித்தும், அவர்களைச் சுற்றி நிகழும் சம்பவக் கோவை ஒவ்வொன்றையும் பல வாரங்கள் அல்ல, பல மாதங்கள் சளைக்காமல் விவாதித்தோம் என்றார்கள், திருவனந்தபுரத்தின் வாசக ரசிகர்கள்.

சென்னையிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில நாளிதழான 'ஹிந்து', 21.12.1891ம் தேதியிட்ட பதிப்பில், 'மார்த்தாண்ட வர்மா' பற்றி தனது தலையங்கத்தின் முடிவில், பின்வருமாறு விமரிசித்திருந்தது:

'இந்நூலாசிரியர் கையாண்டிருக்கும் உத்தி வித்தியாச மானதாகவும் ஜனரஞ்சகமாகவும் இருப்பதுடன், மலையாள இலக்கியத் துறையில் அவருக்கிருக்கும் புலமை சார்ந்த, பரந்த அனுபவத்தையும் அவரது படைப்பில் காண முடிகிறது. எனினும், மெத்தப் படிந்த வாசகனின் கண்ணோட்டத்தில், ராமன் பிள்ளையின் படைப்பிலக்கிய நூலில், அதிகமான பக்கங்களை, அவரது கற்பனைத் தொகுப்புகளே நிரப்பிவிடும் முக்கியக் குறைபாடுகள் எடுப்பாகத் தெரிகின்றன. இது தவிர, வடமொழிச் சொற்களான சமஸ்கிருதமும் தங்குதடையற்று ஏராளமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. தற்கால, நவீன மலையாள உரைநடை எழுத்தாளர்கள் எவராலும் மிஞ்சமுடியாத அளவுக்கு, ராமன் பிள்ளை அவர்களின் இலக்கிய சிருஷ்டி உத்திகள், மிகவும் அபாரமானதாகவும், அசாதாரணமாகவும் விளங்குகிறது என்பதே எங்கள் கருத்து. 'மார்த்தாண்ட வர்மா' ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்படும் என நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், ஆங்கில இலக்கிய வாசகர்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெறும் அளவுக்கு இந்த நாவல், சகல தகுதிகளையும் கொண்டதாக உள்ளது. ஓர் இந்தியப் பட்டதாரியினால் கற்பனை இலக்கியத் துறையில் எந்த அளவுக்கு தன்னுடைய சிந்தனை வீச்சையும், சாதனையையும் நிலைநாட்டமுடியும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக 'மார்த்தாண்ட வர்மா' என்கிற இந்த மதிப்பரிய, இலக்கியப் படைப்பு திகழ்கிறது.'

எனினும், ஒரு கணம் ஆழ்ந்து சிந்திக்கும்போதே, சி.வி. ராமன் பிள்ளை அவர்கள், மார்த்தாண்ட வர்மா என்கிற இந்த ஒரு படைப்பிலக்கியத்தை மட்டுமே உருவாக்கியவர் என்றால்,

இன்றைய வாசகர் வட்டத்தின் கண்ணோட்டத்திலும், மதிப்பிலும், முதுபெரும் இலக்கிய ஆசிரியராகவோ, ராஜசிப்பாயியாகவோ உயர்ந்திருக்க முடியாது என்பது புலனாகும். உள்ளபடியே, அவரது 'மார்த்தாண்ட வர்மா' காலத்தை வென்று என்றென்றும் நிலைத்து நிற்கும் சிரஞ்சீவிப் படைப்பாகும் என்பதில் சந்தேகமே இல்லை. சர். வால்டர் ஸ்காட்டின் படைப்பிலக்கியங்களில் அறிமுகம் உள்ளவர்களைத் தவிர, மற்ற வாசகர்களுக்கு, 'மார்த்தாண்ட வர்மா'வின் உள்ளடக்க உன்னதங்கள், இதுவரை அனுபவித்து உணர்ந்திராத வரலாற்றுப் புதுமையாகவும், பிரமிப்பாகவும் இருக்கும்!

எனினும் ஐவான்ஹோ என்கிற வால்டர் ஸ்காட்டின் பிரசித்திமிக்க வரலாற்று நாவலின் சாயலில் மார்த்தாண்ட வர்மா புனையப் பட்டுள்ளதாக ஒரு கருத்தும் இன்றளவும் நிலவுகிறது. சி.வி.யின் கதாபாத்திரங்களில் கணிசமானவர்கள், வால்டர் ஸ்காட்டின் கதாபாத்திரங்களை நினைவூட்டுபவர்களாக உள்ளதையும் அறியலாம். அரசர்கள் தமக்கிடையே பகைகொண்டு யுத்தத்தில் ஈடுபடுவதையும், அவர்களைத் தூண்டிவரும் தீயவர்களையும் வால்டர் ஸ்காட்டின் நாவல்களில் உள்ளதைப் போலவே, ராமன் பிள்ளையின் படைப்பிலும் காண முடிகிறது. மேலும், அவரது கதாபாத்திரங்கள் மேற்கொள்ளும் சதித்திட்ட முறைகளும், தந்திரங்களும், உதிரத்தை உறையவைக்கும் விதத்திலான, தப்பிக்கும் முயற்சிகளும் வால்டர் ஸ்காட்டின் உத்தியை அடியொற்றியதாகவே அமைந்துள்ளன. ஆனால், வங்காளத்தின் பங்கிம் சந்திரர் போன்ற புகழ்பெற்ற இலக்கிய மேதையான சி.வி. ராமன் பிள்ளை, நமது அதிர்ஷ்டத்தின் விளைவாக, மேலைநாட்டு இலக்கியாசிரியர்களின் உத்திகளைப் பின்பற்றுவதிலிருந்து விடுபட்டார். இருபத்திரண்டு ஆண்டு களுக்குப் பிறகு, முற்றிலும் புதிய ஒரு ராமன் பிள்ளையை, மலையாள இலக்கிய உலகம் கண்டது. 1893-ல் வெளியான தர்மராஜா, இதையடுத்து 1919-ல் வெளியான ராமராஜபகதூர் ஆகிய இரண்டு நாவல்களும் அவரது இலக்கியச் சிந்தனையின் முதிர்ச்சியையும் அனுபவச் செறிவையும் நன்கு தெளிவுபடுத்தும் விதத்தில் சிறப்பாக அமைந்திருந்தன.

மொத்தத்தில் ராமன் பிள்ளை அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தையும் ஊன்றிப் பார்க்கும்போது, கடந்த

காலத்தின் முக்கியமான காலகட்டங்களில் நிகழ்ந்த அற்புதமான வரலாற்றுச் சம்பவங்கள், மிகுந்த கவனமுடன் வடிவமைக்கப்பட்டு, நெருக்கமாக நெய்யப்பட்ட உயரிய பட்டு நெசவு போல் அமைந்து மலையாள இலக்கியத் துறைக்குப் பெரும் புகழையும், பயனையும் தந்துள்ளதை அறிய முடியும். ராமன் பிள்ளையின் சமகாலத்தவரும், படைப்பிலக்கியங்களை மதிப்பீடு செய்வதில் வல்லவருமான மகாகவி உள்ளூர் எஸ். பரமேஸ்வர அய்யர், ராமன் பிள்ளையை ஈடுஇணை காண இயலாதவர் எனப் பாராட்டியுள்ளார். 'மலையாள இலக்கியத்தின் மகத்தான வரலாறு' என்கிற நூலில் அவர் ராமன் பிள்ளையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் வரிசையில், நமது 'சி.வி.' அவர்களுக்கு, எதிர்ப்பு இல்லாத விதத்தில், முக்கியமான ஒரு இடம் உண்டு. அவரது முன்னிலையில், மற்ற, மலையாள நாவலாசிரியர்கள், சூரியனுக்கு முன் எண்ணெய் விளக்கு போல் பிரகாசம் குன்றியவர்களாக மதிப்பிழந்து போவார்கள். மேலும் சொல்வதானால் சந்துமேனன் கூட, ராமன் பிள்ளைக்கு ஈடானவர் அல்ல.'

சி.வி. அவர்களைப் பற்றி இதுவரையில் கூறப்பட்டுள்ள விமரிசனங்கள், எதிர்காலத்தில் இனி கூறப்படவிருக்கும் கருத்துக்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த சாரமும் மகாகவியின் இந்த வார்த்தைகளில் அடங்கிவிட்டன!

பொருளடக்கம்

''விரோதிகளுக்கு கேள்விகேட்கும் அதிகாரம் இல்லை. ஆயுதங்களை ஒரேயடியாக விட்டுவிட்டு, உங்கள் ஜபமாலையை உருட்டும்போது, முன்ஜாக்கிரதை பற்றி கலங்கலாம். அது வரை உங்கள் மனதை அன்பு மற்றும் மனித நேயத்தால் பலப்படுத்துங்கள்.''

சி.வி. ராமன் பிள்ளை
(ராமராஜ பகதூரில்)

1
வாழ்க்கை

சி.வி. ராமன் பிள்ளை, 1858-ஆம் ஆண்டு மே மாதம், பத்தொன்பதாம் நாள் அவருடைய பெற்றோருக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார். அவரது தந்தை நீலகண்ட பிள்ளை, கல்வித் தகுதிகள் அதிகம் தேவைப்படாத ஒரு தொழிலைச் செய்து கொண்டிருந்தார். குணத்தாலும், வாழ்க்கை முறையாலும் அவர் உன்னதமான பண்பாளராக விளங்கினார். சமஸ்கிருதத்திலும், சோதிட சாஸ்திரத்திலும் அவருக்கு நல்ல ஞானம் இருந்தது. செல்வந்தர்களின் விருப்பத்திற்கு இணங்க, பனை ஓலைகளில் எழுதப்பட்டிருந்த பண்டைய இதிகாசங்களைக் கையெழுத்துப் பிரதியாக நகல் எடுக்கும் பணியின் மூலம் கிடைத்துவந்த சொற்ப வருமானத்தில் வாழ்க்கையை நடத்தி வந்தார். பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கு தொடக்க நிலை கல்விகற்கும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியையும் மேற்கொண்டார். மக்கள், அவரை மிகுந்த மரியாதையுடன் 'வாத்தியார் அய்யா' எனவும், 'ஆசான்' எனவும் அழைத்தனர். ஓலைச்சுவடிகளிலிருந்து நகல் எடுப்பது, பாடம் சொல்லித் தருவது ஆகிய இரண்டு தொழில்களை மேற்கொண்ட போதும், அவரால் வறுமையை விரட்ட முடியவில்லை. நீலகண்ட பிள்ளையின் மனைவி பார்வதி பிள்ளை, ஏற்கெனவே அரண்மனையில் ஊழியம் பார்த்து வந்தார். பின்னாளில், நீலகண்ட பிள்ளையும், அரண்மனையின் ஈட்டிக்

காவல் படையில் சேர்ந்தார். இது, எந்த விதத்திலும் அவரது அறிவுத் தகுதிக்குச் சற்றும் ஒத்துவராத உத்தியோகம். ஆயினும், இறைப்பற்றும், அடக்கமும் நிறைந்த சாது மனிதரான நீலகண்ட பிள்ளை, அலுவலக நேரத்திலும் அதற்குப் பின்னரும், மரத்தினாலான நீண்ட ஈட்டியையும், கேடயத்தையும் மாற்றி மாற்றிக் கையாண்டு மிகுந்த பொறுப்புடன் அரண்மனைக் காவல் பணியைச் செய்து வந்தார். நீலகண்ட பிள்ளையின் அறிவாற்றலும் பண்பார்ந்த நடத்தையும் அரண்மனையில் உயர் அதிகாரியாயிருந்த ஒரு செல்வச் சீமானின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. நான்குகோயிக்கல் கேசவன்தம்பி என்கிற இவரது, (1758-1798) காலகட்டத்தில், திருவாங்கூர் சமஸ்தானத்தை அரசாண்டவரான, மன்னர் தர்மராஜாவின் ஆட்சியில் திவானாகப் பதவி வகித்து வந்த ராஜா கேசவதாஸின் கொள்ளுப் பேரனாவார். தம்பி அவர்கள் சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். 'கார்யக்கார்' எனும் அரண்மனையின் தலைமை நிர்வாக அதிகாரியாக மதிப்பும் மரியாதையுமிக்க பொறுப்பில் இருந்தார். மன்னர் ஆயில்யம் திருநாள் ராமவர்மா அவர்கள், அவரை மிகுந்த நேசத்துடன் ஆதரித்து வந்தார். அரண்மனையில் செல்வாக்கு மிகுந்த அதிகாரியாக விளங்கிய கேசவன்தம்பி அவர்கள், தனது மாளிகையின் ஊழியர் குடியிருப்புப் பகுதியில் நீலகண்ட பிள்ளை, தனது குடும்பத்தாருடன் வந்து வசிக்கலாம் என அழைப்பு விடுத்தார். அங்கு குடியேறியதும், நீலகண்ட பிள்ளையின் குழந்தைகள், கேசவன்தம்பியின் பிரமாண்டமான பங்களாவின் அனைத்துப் பகுதிகளிலும் சர்வ சுதந்திரத்துடன் வளைய வந்தனர். தம்பி அவர்களும், நீலகண்ட பிள்ளையின் குழந்தைகளைத் தனது சொந்தக் குழந்தைகள் போலவே பாவித்து அன்புடன் நடத்தினார்.

சற்றும் எதிர்பாராத விதமாக, 1867-ல் நீலகண்ட பிள்ளை மரணமடைந்தபோது, ராமன் பிள்ளை என்கிற ராமுவுக்கு, பத்து வயதுகூட நிரம்பவில்லை. எனினும், அதிர்ஷ்டவசமாக, கேசவன்தம்பி அவர்கள், நீலகண்ட பிள்ளையின் குடும்பப் பொறுப்பை ஏற்க முன்வந்ததுடன், அவரது குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்பதற்கும் ஏற்பாடு செய்தார். ராமு, இந்த காலகட்டத்தில் சமஸ்கிருத மொழியில் தொடக்கப் பாடங்களைக் கற்றதுடன், சோதிடம் மற்றும் மந்திர தந்திர சாஸ்திரங்களிலும், ஆயுர்வேதத் துறையிலும் அடிப்படை அறிவைப் பெற்றார். ஏற்கெனவே மலையாள இதிகாசங்களை அவர் பயின்றிருந்ததால்,

அவற்றிலிருந்து அருவிபோல் ஏராளமான மேற்கோள்களைப் பொழியும் புலமை மிக்கவராக விளங்கினார். தனது பதினோராவது வயதில், மாட்சிமை பொருந்திய மன்னரின் இலவசப் பள்ளி என்கிற பெயருடைய ஆங்கிலப் பள்ளியில் ராமு சேர்க்கப்பட்டார். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அப்போது ஆங்கிலம் மெதுவாகவும் தீவிரமாகவும் பரவிப் பிரசித்தி பெற்றுவந்தது. ஐரோப்பியர்களான தலைமை ஆசிரியர்களைக் கொண்டு இயங்கிவந்த இந்தப் பள்ளியும், இத்துடன் நெருக்கமாயிருந்த பிரீமியர் கல்லூரியும் பெருமை கொள்ளத் தக்கவிதத்தில் விளங்கின. அந்த நாளில் வெள்ளைக்காரக் கனவான்களின் மொழியான ஆங்கிலம், சாதாரண மக்களுக்கு எட்டாத தொலைவிலேயே இருந்தது. மன்னரின் இலவசப் பள்ளியில் பென்சிலி என்பவர் தலைமைப் பொறுப்பிலிருந்தார். அவரிடம் ராமு பிழையற்ற விதத்திலும் தெளிவாகவும், சிறப்பாகவும் பயின்று, ஆங்கில மொழியில் பெரும் புலமை பெற்றவராக விளங்கினார். ஆங்கில மொழி உச்சரிப்பு தொடர்பான போட்டிகளில் வென்று, வகுப்பில் முதல் அல்லது இரண்டாவது இடத்தில் இருந்தார். மெட்ரிகுலேஷன் தேர்வில் சிறப்புடன் தேறி, பள்ளியைவிட்டு வெளியே வந்தார். திருவனந்தபுரம் சமஸ்தானத்தில், அந்த ஆண்டில் ராமு உட்பட மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்வு பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை நாற்பத்தெட்டு மட்டுமே!

1876-ல் சி.வி. அவர்கள் திருவனந்தபுரத்திலுள்ள மஹாராஜா கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்வதற்காக, எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்தார். மெட்ரிகுலேஷன் வரை அவர் பயின்ற பள்ளியின் விரிவாக்கமாக இந்த கல்லூரி இருந்ததால் இரண்டும் ஒரே இடத்தில் இயங்கின. இந்தக் கல்லூரியின் பேரதிர்ஷ்டமாக, கல்வி போதிப்பதற்கும், மாணவர்களை சிறந்த குடிமக்களாகவும், பண்பாளர்களாகவும் உருவாக்குவதற்குத் தம்மை முழு அளவு அர்ப்பணித்துக் கொண்டிருந்த இரண்டு புகழ்மிக்க ஆங்கிலேயர்கள்- இன்னும் தெளிவாகச் சொல்வதானால், ஸ்காட்லாந்து கனவான்கள் இந்தக் கல்லூரியை நிர்வகித்து வந்தார்கள். மஹாராஜா விசாகம் திருநாள் அவர்கள், 'திருவிதாங்கூர் சமஸ்தானத்து அறிவுஜீவிகளின் பூமியில் சொல்லேர் உழவர்கள்' என, இவ்விரு கனவான்களையும் பாராட்டியது பொருத்தமே. இந்தக் கல்லூரியின் முதல் பிரின்சிபாலாக ஜான்ரோஸ் அமைந்து, 1866 முதல் 1884 வரை பதினெட்டு ஆண்டுகள் கல்லூரியைச்

சிறப்பாக நடத்திச் சென்றார். அவருக்கு உதவியாளராக, பணிபுரிவதற்கு அமர்த்தப்பட்ட ஹார்வே, ஜான்ரோஸுக்குப் பிறகு, இந்த கல்லூரியின் முதல்வரானார். 1869 முதல் 1890 வரையிலான, தனது முழுப் பதவிக் காலத்தில், ஹார்வி இந்தக் கல்லூரியில் பேராசிரியராகவும் பிறகு கல்லூரியின் முதல்வராகவும் பணி புரிந்தார்.

மாணவ சமுதாயத்தினர், இவ்விரண்டு முதல்வர்களின் மனப்பூர்வமான கல்வித் தொண்டினாலும், கடமை உணர்ச்சி யினாலும் பெரிதும் கவரப்பட்டனர். அவர்களிடையே ஆர்வமும் அதிகரித்தது. சகலகலா வல்லவர்களாகவும், நல்லொழுக்க மிகுந்த பிரஜைகளாகவும் தமது மாணவர்கள் உருவாக வேண்டும் என்பதில் ஜான்ரோஸும் ஹார்வியும் பெரிதும் சிரத்தை எடுத்துக் கொண்டு உழைத்ததுடன் வெற்றியும் பெற்றார்கள்!

மஹாராஜா கல்லூரியில் இருந்த இரண்டு முதல்வர்களில் ஜான்ரோஸ், ஹார்வியை விட ராமுவைப் பெரிதும் கவர்ந்தார். இந்த ஈடுபாட்டின் விளைவாக ராமன் பிள்ளை பின்னாளில் சொந்த வீடு கட்டியதும், அதற்கு 'ரோஸ்காட்' எனப் பெயர் சூட்டித்தனது ஆசான்மீது கொண்டிருந்த மனப்பூர்வமான விசுவாசத்திற்கு நிறைவு தேடிக் கொண்டார். பிரின்ஸ்பால் ரோஸ் அவர்களைப் பற்றி மேலும் சிலவற்றைச் சொல்வது பொருத்தமாயிருக்கும். ராமன் பிள்ளையிடம் குணநலன்கள் மற்றும் சிறப்பான உயர் கல்வித் தகுதிகளை உருவாக்கி, அவரைக் கனிவுடன் கவர்ந்தவர் அவர். தனது நண்பர்களிடம் உரையாடும்போது அடிக்கடி ராமன் பிள்ளை தனது ஆசிரியர் ரோஸ் மீது வைத்துள்ள பெருமதிப்பை நினைவு கூர்வார். கல்லூரியை விட்டு விலகி 33 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் பயின்ற கல்லூரியின் ஆண்டுவிழா நிகழ்ச்சியொன்றில் தலைமை வகித்துப் பேசும்போது, பிரின்ஸ்பால் ரோஸ் பற்றி தன்னுடைய மனப்பெட்டக நினைவலைகளை வெளிப்படுத்தி, அவருக்குப் புகழாரமும் நன்றியும் செலுத்தினார். தன்னுடைய தலைமை உரையில் அவர் சொன்னார்:

''திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உயர்கல்வித் தகுதிகளுக்கு வித்திட்டு முன்னோடியாகத் திகழ்ந்த, ஈடுஇணையற்ற இரண்டு மாபெரும் கல்வியாளர்களைப் பற்றி நான் சற்று விரிவாகவே எடுத்தியம்பக் கடமைப்பட்டவனாவேன். இவ்விருவரும், நம்மிடையே சிறப்பான குணநலன்கள் உருவாகவும், நமது

சமஸ்தான மண்ணில் சமுதாய முன்னேற்றம் ஏற்படவும் வித்திட்டவர்கள். மேலும், இவ்விரு கனவான்களும் கிறிஸ்துவ மதத்தின் அனைத்து நல்ல மானிட நலத் தத்துவங்களின் நேரடி விளக்கமாகவும் திகழ்ந்தார்கள். அவர்களுடைய அணுகு முறைகளும், செயல்பாடுகளும் எங்களுடைய மத நம்பிக்கையை நேர்வழிப்படுத்திப் புனிதப்படுத்தின. மதப்பிரசார வாடையே படாமல் கல்வி கற்றுக் கொடுக்க முடியும் என்பதை நிரூபித்த பண்பாளர்கள் இவர்கள். குறிப்பாக, ரோஸ் அவர்கள் எங்களிடையே நிலவிய மத வெறியை விரட்டினார். ஹார்வி அவர்களோ, உயரிய தகுந்த நீதி விளக்கங்கள் மூலமாக, எங்களுடைய சந்தேகங்களைத் தீர்த்துவைத்தார். இப்போது நீங்கள் தரித்திருப்பது போல் அந்த நாளில் நாங்கள் கல்லூரிக்கு கோட்டோ, குல்லாய்களோ அணிந்து வருவது கிடையாது. எங்கள் உடை மிகவும் சாதாரணமானது. எனினும் நாங்கள் அவர்களுக்குச் சரிசமமானவர்களாகவே கருதிக் கொள்ளும் விதத்தில் எங்களை இந்த இரண்டு பேராசிரியர்களும் மதிப்புடன் நடத்தியதுடன், ஒரு பெரிய பண்பட்ட தொன்மையான கலாசாரத்தின் வழித்தோன்றல்கள் என்கிற பெருமித உணர்வோடு அவர்களுடன் தோளோடு தோள் நின்றோம். ரோஸ் அவர்களின் இதயம் உருகிக் கனிந்து எங்கள் இதயங்களுடன் கலந்தது. 'சோனி' என்று என் பெயரைச் சுருக்கி இனிமையாகவும், பாசத்துடனும் என்னை அழைத்த அவரது தோழமையான குரல் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் குரல் என்னைச் சுற்றிச் சுழலும் இன்பக் கனவாகவே என் மனதில் ஆழப் பதிந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக டாக்டர் ஹார்வி அவர்கள் இன்றும் நம்மிடையே உள்ளார். அவரைப் பற்றி எவரும் மிகைப்படவோ, அளவிற்கு அதிகமாகவோ பேசுவதை விரும்பாதவர் அவர். ஏனெனில் அளவான பேச்சையும் அதிகமான செயலையும் எதிர்பார்க்கும் இயல்பு கொண்ட அவர், ஒரு முழுமையான ஆன்மீகவாதி. நாங்கள் மிகுந்த மரியாதையுடன் அவரை, 'தர்மபுத்திரர்' என்று அழைப்போம். அவரது முன்னிலையில் கேலிப் பேச்சுகளிலோ, வெட்டிப் பொழுது போக்குகளில் ஈடுபடவோ எவருக்கும் துணிச்சல் இருந்ததில்லை. மற்றொரு முக்கியத் தகவலையும் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

டாக்டர் ஹார்வி அவர்களிடமிருந்த தார்மீக நோக்கு, அந்த நாட்களில் இந்தியாவில் பணியாற்றிக் கொண்டிருந்த ஏனைய ஐரோப்பிய ஆசிரியர்களுக்கும் இருந்திருக்குமானால், மாபெரும்

சாம்ராஜ்யமாக விளங்கிய இங்கிலாந்தின் இந்திய நோக்கு தார்மீகச் செறிவோடும், பிணக்கற்ற தெளிவோடும் அமைந்திருக்கும்!'' என்று குறிப்பிட்டார்.

நுண்ணறிவும், திறமையும் கொண்ட ரோஸ் மற்றும் ஆழ்ந்த சிந்தனையாளர் டாக்டர் ஹார்வி ஆகிய இருவருக்கும் தனிப்பட்ட முறையில் ஏராளமான அபிமானிகள் இருந்தனர். ஆர்வமும், திறமையும் உள்ளவர்கள் ரோஸ் அவர்களையும், ஆன்மீக இயல்புள்ளவர்கள் டாக்டர் ஹார்வியையும் சூழ்ந்திருப்பது வழக்கமாயிற்று. பின்னாளில் புகழ்பெற்ற தத்துவமேதையாகவும், தமிழ்க் கவிஞராகவும் விளங்கிய பேராசிரியர் பி. சுந்தரம்பிள்ளை அவர்கள் டாக்டர் ஹார்வியின் மனம் கவர்ந்த முன்னணி மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், பிற்காலத்தில் தனது இதயத்தைக் கவர்ந்த டாக்டர் ஹார்வியின் நினைவாகப் புறநகர் பகுதியிலிருந்த தனக்குச் சொந்தமான நிலப் பகுதிகளுக்கு ஹார்விபுரம் எனப் பெயர் வைத்து ஆசிரியரின் நினைவைப் போற்றினார்.

கல்லூரியில் படித்த காலத்தில் ராமன் பிள்ளை நடைமுறை விதிகளிலிருந்து முற்றிலும் விலகியிருந்தார். படிப்பில் அதிக அக்கறை கொண்டிருந்தாலும் அவரது ஈடுபாடும் செயல்களும் பெருமளவு கல்லூரிக்கு வெளியே தான் இருந்தது. வகுப்பு மாணவர்களில் வயதில் சற்று மூத்தவராகயிருந்ததினால் 'சட்டாம்பிள்ளை' எனப்படும் வகுப்பின் தலைமைப் பதவி, இயற்கையாகவே ராமன் பிள்ளையிடம் வந்தடைந்தது. அவரது துணிச்சலும், பேச்சுத் திறமையும் சக மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்களிடத்திலும் மதிப்பைத் தேடித் தந்தன. ஆங்கிலம் மற்றும் மலையாள மொழியில் நன்கு பேசும் நாவன்மை மிக்கவராகவும் விளங்கினார். எனவே, விவாதமேடைகள் அனைத்திலும் 'ஊன்றிக் கவனிக்கத்தக்க' பேச்சாளராக முதலிடம் பெற்றார். மேலும் நடிப்பிலும், பாடுவதிலும், பல குரல்களில் பேசும் கலையிலும் வல்லவராகவும் வளர்ந்திருந்தார். கால்பந்து விளையாட்டிலும் அசகாய சூரராக விளங்கினார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது முழு ஈடுபாடும் பத்திரிகைத் துறை மற்றும் அரசியல் துறைகளின் மீதே பதிந்திருந்ததால், இறுதிக்காலம் வரையில், அவர் ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும், வீறுகொண்ட அரசியல் பிரசுரங்களின் ஆசிரியராகவும் பிரகாசித்தார். அரசுப் பணியில்

இருந்தபோதும், பத்திரிகைத் துறை ஆர்வமும், படைப்பிலக்கியத் தாகமும் அவரை முழுமையாக ஆக்கிரமித்திருந்தன.

1881-ல் தத்துவத் துறையில் அதிக மதிப்பெண்களுடன் தேர்வு பெற்று ராமன் பிள்ளை பட்டதாரியானார். ஆனால், இரண்டாம் முறை தேர்வு எழுதியபின்னரே, இது அவருக்குச் சாத்தியமானது. முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டப் பரீட்சைகளில் ராமன் பிள்ளை மறக்க முடியாத சாதனைகளில் ஈடுபட்டார். இந்த அனுபவங்களின் பெரும்பகுதி, அவரது நாவல்களில் பிரதிபலித்தன. அனுபவங்களைத் தேடி உலகியலை உள்வாங்கிக் கொள்ள, அவர் இடையறாத முயற்சிகளில் ஈடுபட்டார். அதில் அவர் வெற்றி பெற்று நெஞ்சு நிறைய அனுபவங்களைச் சுமந்தார் எனக் குறிப்பிடுவதே பொருத்தமாயிருக்கும்.

தேர்வு எழுதும் திட்டத்துடன் ராமன் பிள்ளை சென்னைக்கு வந்தார். நண்பர்களுடன் சேர்ந்தார். நூல்களைப் படிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார். இந்த நிலையில் எதிர்பாராதவிதமாக திடீரென அவரைப் பயண அரிப்பு தீவிரமாகத் தொற்றிக் கொண்டது. இதனால் அவர் தேர்வு எழுதுவதை விலக்கிக் கொண்டு எங்கேயோ போய்விட்டார். அவர் ஓடிவிட்டாரா? எப்பேர்ப்பட்ட பதட்ட நிலையிலும் உறுதியான திடசித்தமும், தெளிவான நடைமுறைகளையும் கொண்ட ராமன் பிள்ளை போன்ற ஒருவர் இவ்வாறு கோழைத்தனமான முடிவு எடுத்திருப்பாரா என்பது சந்தேகமே! ஆனால், இதற்குச் சரியான விடைகாண வேண்டுமானால், முழுமைபெறாத அவரது வாழ்க்கை வரலாற்று நூலை அலசிப் பார்க்க வேண்டியிருக்கும்! தனது வாழ்நாளின் இறுதிக் கட்டத்தில் ராமன் பிள்ளை எழுதிய, சுயசரிதையில், தன்னை மனத்தளவில் நோயாளி ஆக்கிவிட்ட சில சம்பவங்களை உருக்கத்துடன் வெளியிட்டிருக்கிறார். குறிப்பாகத் தன்னுடைய கல்லூரி நாட்களில் பதின்மூன்று வயதுடைய அழகிய பெண்ணொருத்தியைக் காதலித்து வந்ததாகவும், ஓரிரு ஆண்டுகளுக்குப் பின் அந்தப் பெண் அவளது தந்தைக்குச் சமமான வயதுடைய ஒரு செல்வந்தனுக்கு மண முடிக்கப்பட்டதாகவும், இந்த நிகழ்ச்சி தனது இதயத்தைத் துளைத்தெடுத்தது நாடி நரம்புகளையும் செயலிழக்கச் செய்துவிட்டதாகவும் ராமன் பிள்ளை குமுறியிருக்கிறார். இந்த நினைவுகள் நாளடைவில்,அவரை ஒரு மன நோயாளியாகவும் உருமாற்றிவிட்டது. இவற்றின் விளைவாக

சென்னையில் அவரால் படிப்பில் முழுக் கவனமும் செலுத்த முடியாமல், தேர்வும் எழுத இயலாமல் போயிற்று. ஆனால், அவரது நண்பர்களினால் எந்தவித மாறுதலையும் அவரிடம் காண முடியவில்லை. அவர் காணாமல் போய்விட்டார் என்பது அவரது நண்பர்களிடையே வியப்பையும், திகைப்பையும் ஏற்படுத்தியது. இது பற்றித் தீவிரத் தேடல்களில் அவர்கள் ஈடுபட்டும், அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் போனது. எந்தவிதக் குறிக்கோளும் இல்லாமல் சிறிதுகாலம், மனம் போனபடி அலைந்த ராமன் பிள்ளை, மைசூர் அருகிலுள்ள ஸ்ரீரங்க பட்டினத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த வரலாற்றுப் பிரசித்திமிக்க பல இடங்களைச் சுற்றிப் பார்க்கும் வகையில் சில காலம் தங்கினார். பின்னர் வடக்கு நோக்கி குஜராத் வரை சென்று திரும்பி, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார். திரும்பும் வழியில் கோல்கொண்டா மற்றும் பல்வேறு வரலாற்றுப் பிரசித்திமிக்க இடங்களுக்குச் சென்றார். நிஜாம் சமஸ்தானத்தின் தலைநகரில் செல்வாக்குள்ள சில முஸ்லிம் நண்பர்களின் நட்பைப் பெற்றார். இவர்களில் செல்வச் சீமானான ஒருவர் ராமன் பிள்ளையின் மீது மிகப் பற்றுதல் கொண்டு, இலக்கின்றி அலைந்து கொண்டிருக்கும் அவரைத் தனது பாதுகாப்பில் வைத்துக் கொண்டதுடன், அவருக்கு நிஜாம் அரண்மனை அலுவலகத்தில் ஒரு வேலை போட்டுத் தருவதற்கும் ஏற்பாடு செய்தார். இதைத் தொடர்ந்து இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து விடும்படியும் அவருக்கு ஆலோசனை கூறினார். ஆனால், கொள்கை ஒழுங்கு நியதிகளில் உறுதிப்பாடு மிகுந்த ராமன் பிள்ளை இதற்கு உடன்படவில்லை.

ராமன் பிள்ளை ஹைதராபாத்திலுள்ள செல்வந்தர்களைப் போல் பைஜாமா-தொப்பி மற்றும் நீண்ட அங்கி ஆகியவற்றை அணிந்து, ஆடம்பரமாக, அலுவலகத்திற்குச் சென்றுவரத் தொடங்கினார். இதன்மூலம், அந்நாளைய உலகச் சூழலுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டதுடன், தனக்கு ஆதரவளித்துவரும் கனவான்களின் அன்பான உபசரணைகளையும் நன்கு அனுபவித்தார். இந்நிலையில், ஒருநாள் முற்றிலும் எதிர்பாராத வகையில் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வர்த்தகரான ஓர் இஸ்லாமிய நண்பரை, ஹைதராபாத் வீதியில் ராமன் பிள்ளை சந்திக்க நேரிட்டது. வியாபார விஷயமாக அந்த நண்பர், நிஜாமின் தலைநகருக்கு வந்திருந்தார். அவருக்கு ராமன் பிள்ளையையும், அவரது குடும்பத்தாரையும் நன்கு தெரியும். மேலும், கேசவன்தம்பியையும் அவருக்குத் தெரியும். எனவே, ராமன் பிள்ளையின்

ஹைதராபாத்வாசம் பற்றி உடனடியாக கேசவன்தம்பிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பிள்ளை மேற்கொண்டிருந்த பதவியிலிருந்து விடுபடுவதற்கும், திருவனந்தபுரத்திற்கு நலமாகத் திரும்புவதற்கும் உரிய அனைத்து ஏற்பாடுகளையும் அந்த இஸ்லாமிய நண்பர் மேற்கொண்டார். ராமன் பிள்ளை திருவனந்தபுரம் செல்லும் நிலையில் விடைபெறும்போது, அந்தச் செல்வச் சீமான் பெரிதும் மனம் கலங்கிப் போனார். அந்த அளவுக்கு ராமன் பிள்ளையிடம் அவர் அன்பும் பாசமும் வைத்திருந்தார்.

துணிச்சல்மிக்க செயல்களுக்குப் பிறகு, நல்லபடியாக ராமன் பிள்ளை வீடு திரும்பியதில் அவரது குடும்பத்தினர் அனைவரிடமும் மனம் கொள்ளாத அளவிற்கு மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

'அபாயகரமான அழிவுப்பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்த நான், அதிசயத்தக்க வகையில் மயிரிழையில் தப்பினேன்' என, ராமன் பிள்ளை அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தனது அலைச்சல் காலங்களில் விதவிதமான இடங்களில் அவர் தங்க நேரிட்டதினால், பலவிதமான அனுபவங்களைப் பெற்றார். அவரது உடலிலும் சதைபோட்டு, சற்றுப் பருமனாகவும் தோற்றமளித்தார். அவரது மனநிலையில் குழப்பமும், கலக்கமும் மேலிட்டிருந்தன. தக்க சமயத்தில் அவரது சகோதரர்கள் மருத்துவச் சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்ததினால் ராமன் பிள்ளை விரைவில் நலமடைந்தார். திருவிதாங்கூர் சமஸ்தான எல்லையைத் தாண்டி பல இடங்களில் அலைந்து திரிந்த காலத்தில்தான் உலகியலை உள்ளது உள்ளபடி மிகத் தெளிவாக அவரால் அறிந்துணர முடிந்தது. குறிப்பாக, நிஜாமின் தலைநகரில் முஸ்லிம் செல்வந்தர்களின் வீடுகளில் கிட்டிய வசதிகளை, அவர் தன்னுடைய மூன்று நாவல்களிலும் நன்கு வெளிப்படுத்தியுள்ளதுடன், தேக்கனி வியாபாரிகளாக அறியப்பட்ட, பத்தானியர்கள் பற்றிய அவரது சுவாரஸ்யமான வர்ணனைகளும், 'மார்த்தாண்ட வர்மா' நாவலில் குறிப்பிட்டுள்ள யாத்ரீகர்களின், தங்கும் விடுதிகள் பற்றிய வர்ணனைகளும் மற்றும் திப்பு சுல்தானின் நீதிமன்றத்தைப் பற்றிய கருத்துகளும், சேட் கங்குராம் சத்திரத்தைப் பற்றிய விவரங்களும் மற்றும் இவை போன்ற, பல்வேறு நிகழ்ச்சிக் கோவைகளும் ஒரு நேர்முக வர்ணனை போல் செறிவாக அமைந்து ராமன் பிள்ளையின் ஆழ்ந்த நினைவாற்றலுக்கும்,

படைப்பிலக்கியப் புலமைக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றன.

1880-ஆண்டிலும் சட்டக் கல்வித் தேர்வில் தோல்வி அடைந்ததையடுத்து அவரது கல்லூரிக் கல்விக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. இது பற்றி பிரின்ஸ்பால் ரோஸ் அறிந்ததும் ராமுவின் கற்பனைத் திறன் மிகுந்த அபாரமான ஆற்றல் இனி முழு அளவு இலக்கியத் துறையில் பிரகாசிக்கும் காலம் கனிந்து, நெருங்கிவிட்டது என்பதை உணர்த்தும் வகையில், 'ராமன் பிள்ளையின் வீர பாரம்பரியம் வாளிலிருந்து பேனாவிற்கு மாறுவது சிறப்பானதாகும்' என்றார். ரோஸ் அவர்களின் கருத்தை விருப்பமுடன் ஏற்ற ராமன் பிள்ளை, இதற்கு அடுத்த ஆண்டில் (1981) சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவம், தர்க்க நியாய சாஸ்திரங்களைத் தனது விருப்பப் பாடங்களாக எடுத்துக் கொண்டு, பட்டப்பிடிப்பில் இரண்டாவது இடத்தில் தேர்வு பெற்று, மாநில அளவில் ஏழாவது இடத்தையும் பெற்றார். திருவனந்தபுரம் கல்லூரி, 1870-ம் ஆண்டிலிருந்தே பட்டதாரிகளை உருவாக்கி வந்தது. எனினும், இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் சொற்பம். இதனால், அரசாங்க உத்தியோகங்கள் அந்த நாட்களில் கல்லூரிப் பட்டதாரிகளுக்குக் கிடைப்பதும் மிக எளிதாயிருந்தது. ஆனால், ராமன் பிள்ளை அரசாங்கப் பணிகள் எதற்குமே ஆசைப்படவோ, முயற்சிக்கவோ இல்லை. அவருக்கு அதில் சற்றும் ஈடுபாடு இருந்ததில்லை, அவரது முழுக் கவனமும் ஆர்வமும் பத்திரிகைத் துறையில் லயித்திருந்தது. அதே சமயம், தன்னுடைய முழு நேர வாழ்க்கைத் துறை எனக் கருதாமல், தனது புரட்சிகரமான சிந்தனைகளுக்கு பத்திரிகைத் துறை ஒரு வடிகாலாயிருக்கும் என்கிற அளவுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்தார். பத்திரிகைத் துறை என்பதை சீர்த்திருத்தவாதிகளின் மேடை அல்லது அரங்கம் என அவர் கருதினார்.

2
அரசியலும் பத்திரிகைத் துறையும்

சி.வி. ராமன் பிள்ளை அவர்களின் வாழ்க்கை திருவிதாங்கூர் அரசர்களான ஆயில்யம் ராமவர்மா (1861-1880), விசாகம் ராமவர்மா (1880-1885), ஸ்ரீ மூலம் ராமவர்மா (1884-1924) ஆகிய மூன்று மன்னர்களின் காலகட்டங்களில் நீடித்தது. இந்த மூன்று மன்னர்களும் புத்தி கூர்மையும் பரந்த மனப்பான்மையும் வாய்க்கப் பெற்றவர்கள். இவர்கள், தங்களது சக்தியை வெவ்வேறு வகைகளில் எதேச்சதிகாரப் போக்குடன் பயன்படுத்தினார்கள். இந்த மன்னர்கள் ஆட்சியில் திருவிதாங்கூர் மக்கள் பரவலாக அதிருப்தி யடைந்திருந்த காலங்களிலும், எதிர்ப்புகள் காட்டும் காலத்திலும், அவர்களின் கோபம் முழுவதும் அரசு அதிகாரிகள் மேலேயே பாய்ந்தது. அரசருக்கு எதிராக மக்களின் அதிருப்தியும் எதிர்ப்பும் பெயரளவிற்கே இருந்தன. எந்தக் காலகட்டத்திலும் மக்களின் ராஜவிசுவாசத்திற்குப் பழுது ஏற்பட்டதே இல்லை!

தனது இளம்பருவத்தில், ராமன் பிள்ளை, திருவிதாங்கூர் அரண்மனை வட்டாரப் பகுதியிலேயே வசித்து வந்தார். அரசருடன் நெருங்கிய தொடர்பு பெற்ற ராமன் பிள்ளையின் போஷகர், மன்னருக்கு மிக நெருக்கமானவராக விளங்கியதால்,

அரண்மனையில் மன்னர் தங்கியுள்ள இடத்திற்கே இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் ராமுவை அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார். பார்த்த மாத்திரத்தில் எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் இயல்புள்ள ராமுவிற்கு, அரண்மனையில் கண்ட வியக்கத்தக்க ஆடம்பரச் சூழ்நிலை மனதிற்குள் அழுத்தமாகப் பதிந்தது. பிற்காலத்தில் இவை அவரது வண்ணமயமான நாடக வாழ்க்கைச் சீரமைப்புக்குப் பெரிதும் உதவிகரமாக அமைந்தன.

மன்னர் ஆயில்யம் ராமவர்மா மிகுந்த அறிவாளியாகவும் கலைகளை ஆதரிக்கும் புரவலராகவும் புகழ் பெற்றிருந்தார். எனினும், எளிதில் உணர்ச்சிவசப் படக்கூடிய இயல்புள்ளவராக இருந்ததனால், தனக்கு எதிராகச் செயல்படுபவர்களைப் பழிவாங்குபவராகக் காணப்பட்டார். இந்த அரசரிடம் தான், ராமுவின் போஷகர்-கேசவன்தம்பி நெருக்கமாயிருந்தார். ஆயில்யம் ராமவர்மாவைத் தொடர்ந்து அரசராக ஆட்சிபீடம் ஏறிய அவரது இளைய சகோதரர் விசாகம் ராமவர்மா காலத்தில், கேசவன்தம்பி கட்டாய ஓய்வு பெற்றார். விசாகம் மன்னரின் ஆட்சி ஐந்து வருட காலமே நீடித்தது. அவர் 1885-ல் காலமானார். அவரைத் தொடர்ந்து ஸ்ரீ மூலம் ராமவர்மா அரியணை ஏறினார். இவரது கருணை உள்ளமும் ஆதரவளிக்கும் நல்ல எண்ணங்களும் சந்தேக எண்ணம் படைத்த கபடர்களால் அடிக்கடி தடுக்கப்பட்டது.

திருவிதாங்கூர் சமஸ்தானமும் பெரும்பாலான பிற இந்திய சமஸ்தானங்களில் நிலவும் வழக்கத்தைப் போன்று, பிரதம மந்திரிகள் எனப்படும் திவான்களை வெளியிலிருந்தே குறிப்பாக பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களிலிருந்தே தேர்ந்தெடுத்துக் கொண்டது. இதற்கான காரணம் மிக ஆழமானது. ஆங்கிலேய அதிகார வர்க்கத்தினரைத் திருப்திப்படுத்தும் நோக்கம் தவிர, இயல்பாகவே அறிவாற்றலும், சாதனைத் திறனும் மிகுந்த சமஸ்தான மக்களை அரசு நிர்வாகத்திலிருந்து, மிகப் பத்திரமான தொலைதூரத்தில் ஒதுக்கி வைப்பதே இந்த சூழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையாகும். வேற்றுமைப்படுத்தும் இந்த நிலவரம், மக்களிடையே மிகுந்த வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தின. அதுவே, நாளடைவில் ஆவேசத்துடன் கூடிய பெரும் போராட்டமாக ஜனவரி 1891-ல் வரலாற்றுப் பிரசித்திமிக்க மலையாளிகளின் நினைவுப் போராட்டமாக வளர்ந்தது. நாயர் சமூகம் போராட்ட குணத்திற்குப் பெயர் பெற்றது. இந்தப்

போராட்டம் சமஸ்தானத்திலுள்ள நாயர் சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள், திவான் பதவி அடங்கலாக உயர் பதவிகளுக்குத் தாங்களே நியாயமான வகையில் வாரிசு உரிமை பெற்றவர்கள் எனக் குரலெழுப்பினார்கள்.

ராமன் பிள்ளை, கல்லூரி மாணவராக இருந்த காலத்திலிருந்தே பத்திரிகைத் துறையில் நீச்சல் அடித்தவர் என்பது முன்பே கூறப்பட்டது. அக்காலங்களில் புகழ்பெற்ற இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் வாழ்க்கை 'வெஸ்டர்ன் ஸ்டார்' மற்றும் 'கொச்சின் ஆர்கஸ்' என்கிற பெயர்களில் வெளிவந்து கொண்டிருந்தன. இவை ராமன் பிள்ளையின் கட்டுரைகளை அவ்வப்போது பிரசுரித்தன. கட்டுரைகளை தன்னை மறைக்கும் வகையில், பல்வேறு புனைபெயர்களில் எழுதினார். எனினும், ராமன் பிள்ளையின் எழுத்தாற்றலும், நடையழகும் உத்திகளும் அவற்றில் அமைந்திருந்ததினால், கல்லூரித் தலைவர் ரோஸ் உட்பட எவரையுமே அவரால் ஏமாற்ற முடியவில்லை. ரோஸ் தனது பிரியத்திற்குரிய இளம் மாணவனைத் தட்டிக் கொடுத்து, இவ்வாறு சொன்னார்: ''என்னிடத்தில் பொய் சொல்லாதே ராமு. இதை எழுதியது யார் என்று எனக்குத் தெரியும். இருப்பினும், என் அன்புக் குழந்தாய் நீ எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.'' ராமுவினுடைய கல்லூரி நாட்கள், மொத்தத்தில் சந்தோஷத்துடன் நிலவியது. அரசியல் சூழ்நிலைகளும் ஒத்து வந்தது. எழுபதாண்டு மன்னராட்சிக் காலத்தில், முதன் முதலாக ஆத்திரம் கொண்ட மக்கள், திருவிதாங்கூர் சமஸ்தானம், ராவினால் சவாரி செய்யப்படும் நிர்வாகம் என வர்ணிக்கத் தலைப்பட்டனர். அதே சமயம், சமஸ்தான நிர்வாகத்தில் சீர்குலைவு ஏற்படத் துவங்கியது. திருவிதாங்கூர் பிரஜையான திரு.என். நாணுப் பிள்ளை என்பவர் சமஸ்தானத்தின் திவானாக நியமிக்கப்பட்டார். மக்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நெய்யூர் நாணுப் பிள்ளை என்கிற இவர், அறிவாற்றலும் தார்மீக மதிப்பும் கொண்டவர். மேலும், பிறர் பொறாமைப்படும் அளவிற்கு புகழும் திறமையும் பெற்றவர். அனைத்து மக்களும் அவருக்கு அளவிடற்கரிய மதிப்பு அளித்தார்கள். அவர்1877 முதல் 1880 வரை திவானாகப் பதவியில் இருந்தார். அக்கால கட்டத்தில் ராமன் பிள்ளை, கல்லூரியில் படித்து வந்தார். நாணுப் பிள்ளை அவர்களின் மகன் பெயரும் ராமன் பிள்ளை என்பதே. சி.வி.ராமன் பிள்ளைக்கு திவானின் மகனான ராமன் பிள்ளை மிக விரைவிலேயே நெருங்கிய நண்பரானார். சி.வி. ராமன் பிள்ளை கல்லூரிச் சங்கங்கள்

அனைத்திலும் முக்கிய நபராகத் திகழ்ந்தார். அவர் கல்லூரியின் சக மாணவர்களினால், தங்கள் தலைவர் என்று மதிக்கப் பெற்றார். குதூகலத்திலும் சமுதாயப் பண்பாட்டிலும் நன்னடத்தையிலும் மிக்க ஆர்வம் வைத்திருந்தார். அவரும் அவரது நண்பர்களும் 'பரஸ்பர முன்னேற்ற சங்கம்' மற்றும் 'நேர்மையுடன் கூடிய உழைப்பாளர்களின் சங்கம்' என்ற இரு சங்கங்களை ஏற்படுத்தினார்கள். ஹார்வி, இவர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்து வந்தார். சி.வி.யும் அவரது நண்பர்களும் இவ்வாறு திருவனந்தபுரம் மக்கள் சமுதாயத்தினரிடையே வெளிப்பட்டார்கள். நன்கு அறிமுகமானார்கள்.

இந்நிலையில் திடீரென சமஸ்தான நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட்டது. காரணம், மன்னர் ஆயில்யம் ராமவர்மா இறந்துவிட்டார். அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மன்னர் விசாகம் ராமவர்மா மக்களிடையே செல்வாக்கு மிக்க மாமன்னராகத் திகழ்ந்தாலும், தனது சகோதரர் ஆயில்யம் ராமவர்மா மீது கொண்டிருந்த துவேஷம் மற்றும் கசப்புணர்வு காரணமாக, சமஸ்தான நிர்வாகம் முழுவதையும், அவசரத் தாக்குதல் வேகத்தோடு மாற்றி அமைத்தார். இதனால், சமஸ்தானத்தின் திறமைமிக்க திவான் நாணுப் பிள்ளை, ஓய்வூதியத்துடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். இதே கதி அரண்மனையின் தலைமை நிர்வாகியான கேசவன்தம்பிக்கும் ஏற்பட்டது. எதிர்பாராத இந்த நடவடிக்கைகளினால், சி.வி. ராமன் பிள்ளை நிலைகுலைந்து போனார். தனக்குப் பாதுகாப்பு அளித்து வந்த உறுதியான நங்கூரங்கள், விதியின் சூறாவளிப் போராட்டத்தில் பிடுங்கி எறியப்பட்டதை அறிந்து, நெஞ்சம் குமுறினார். ஆயினும், கேசவன்தம்பி, சி.வி. ராமன் பிள்ளையை நடுக்கடலில் தத்தளிக்கும்படி அநாதையாக விட்டுவிடாமல் தனது கடைசிக் காலம்வரை ஆதரித்து வந்தார். துரதிர்ஷ்டவசமாக, சிறிது காலத்திற்குள் அவரும் (31.5.1880-ல்) காலமாகிவிட்டார்.

சமஸ்தானத்தின் மன்னராகப் பொறுப்பேற்ற விசாகம் ராம வர்மா விடம் பெருந்தன்மையையும் உயர்குணச் சிறப்புகளையும் எதிர் பார்த்த ராமன் பிள்ளைக்கு, அவரது நடவடிக்கைகளினால்,அசாத்திய கோபம் வந்தது. புதிய திவானாக வி. ராம அய்யங்கார் வந்தார். இவர் சென்னை மாநில சேவைப் பணியிலிருந்து வந்தவர்.ஏன் ஒரு திருவிதாங்கூர்காரரை திவான் பதவிக்கு நியமிக்கவில்லை என்று மக்கள் ஆவேசத்துடன் கேள்வி கேட்டார்கள். 'திருவிதாங்கூர்

சமஸ்தானத்தில் திருவிதாங்கூர் மக்களுக்கே முன்னுரிமை' என்ற கோஷம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் உரக்க முழங்கப்பட்டது. இவ்வாறான ஒரு கிளர்ச்சிக்கு, இதுவே தக்க தருணம் என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஜி.பி. பிள்ளை என்கிற ஒரு புத்திசாலியான இளைஞர், அப்பொழுதுதான் கல்லூரியின் புகுமுக வகுப்பில் மாணவராகச் சேர்ந்திருந்தார். அவர் உணர்ச்சி ஊட்டும் கட்டுரைகளுடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். பிற்காலத்தில், புகழ்பெற்ற பாரிஸ்டராக வரவேண்டிய பிள்ளை என்கிற ஜி.பி. பிள்ளை (1864-1903) நாட்டின் தென் பகுதியிலிருந்து வந்தவர். அவர் ஒரு காங்கிரஸ்காரர், பத்திரிகை ஆசிரியர். அத்துடன் தேசிய உணர்ச்சி மிக்க பிரசுரகார்த்தாவாக விளங்கினார். இளைஞனாக இருந்தபோதிலும் அவர் எழுதியவை அனுபவச் செறிவு கொண்டதாக விளங்கின. ஆசிரியர்களும் கல்லூரி விரிவுரையாளர்களும் அவருக்கு பிரகாசமான எதிர்காலம் இருப்பதை முன்கூட்டியே அறிந்தார்கள். அவரது கல்லூரிப் பேராசிரியரின் யூகம் பொய்க்கவில்லை. காரணம், ஜி.பி. பிள்ளை, தன்னைப் பற்றிய கணிப்புகளைப் பெருமளவு நிறைவேற்றி வைத்தார். சமஸ்தானம் முழுவதிலும் திறமையாளர்களே இல்லாததுபோல் ஒரு போலித்தனத்தை உருவாக்கி நிர்வாகப் பதவிகளில் அந்நியர்களைத் தேர்வு செய்து, பெரிய பதவிகளில் அமரச் செய்யும் போக்கை ஜி.பி. பிள்ளை பெரிதும் எதிர்த்தார்.

'வெஸ்டர்ன் ஸ்டார்' பத்திரிகையில் பல புனை பெயர்களில் இந்த அம்சத்தைப் பற்றி அவர் விரிவான விவாதக் கட்டுரைகளை எழுதினார். இது, திவான் ராம அய்யங்காரைப் பெரிதும் ஆத்திரமூட்டியது. தனது ஊழியர்களிடம், இந்தக் கட்டுரைகளை எழுதியவர் யாரெனக் கண்டுபிடிக்கும்படி உத்தரவிட்டார். 'ஓட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதுபோல், ஜி.பி. பிள்ளையைப் போலவே, சி.வி. ராமன் பிள்ளையும், சமஸ்தான நிர்வாகத்தின் கோபத்தைத் தூண்டும் விதத்தில், நெருடலான கட்டுரைகளை எழுதிப் பிரசுரித்து வந்தார். இதன் விளைவாக, ஐரோப்பியத் தலைமையாசிரியருக்கு, சர்வ வல்லமையுள்ள மேலிடத்தின் நிர்ப்பந்தம் காரணமாக மனம் ஒப்பாமல், ஜி.பி. பிள்ளையையும், அவரது நண்பர்களான சக மாணவர்களையும் கல்லூரியிலிருந்து வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்குச் சிறிது காலத்திற்கு முன்பாகவே, சி.வி. ராமன் பிள்ளை, கல்லூரியை விட்டு விலகிவிட்டதினால், இந்த தண்டனை

யிலிருந்து தப்பித்துக் கொண்ட அதிர்ஷ்டசாலியாகிவிட்டார்.

ஜி.பி. பிள்ளையின் வரலாற்றை முடிக்குமுன் சில வார்த்தைகள்: அவர் துரித காலத்தில், தனக்கென்று தனிப் புகழை அடைந்தவர், மிகச் சிறந்த பத்திரிகையாளர். திறமையான நூலாசிரியர், சமூக சீர்த்திருத்தவாதி, தன்னடக்கம் மிகுந்த ஊழியர்... இவை அனைத்திற்கும் மேலாக, மதிப்புமிக்க ஒரு காங்கிரஸ்காரர் என்பதனாலும் பெரிதும் போற்றப்பட்டார். உதவிகளையும் வழிகாட்டும் நெறிகளையும் அடைந்ததற்காக, மகாத்மா காந்திஜி உளமார நன்றி தெரிவித்த வரலாற்றுச் சிறப்பும் அறிஞர் ஜி.பி. அவர்களுக்கு உண்டு. 'மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்' என்கிற சஞ்சிகைக்கும் 1882-ல் ஜி.பி. பிள்ளை ஆசிரியரானார்.

ஜி.பி. பிள்ளையைவிட ஆறாண்டுகள் மூத்தவரான சி.வி. ராமன் பிள்ளை, பல வகைகளிலும் வழிகாட்டியாக விளங்கியதுடன் நிர்வாகத்துறை தொடர்பான பயனுள்ள பல தகவல்களையும் கொடுத்து உதவினார். தனது கட்டுரைகளையும் ஜி.பி. நடத்தும் பத்திரிகைக்கு அளித்து வந்தார். மலையாளிகள் நினைவு மன்றமும், இந்த சமயத்தில் படிப்படியாகத் தனது வேகத்தை அதிகரித்து வந்தது. முன்னரே குறிப்பிட்டதுபோல, திருவிதாங்கூரில் உள்ள தமிழ் பிராமண சமூகம், சமஸ்தானத்திலுள்ள மலையாளி சமூகத்தைப் போன்றே முப்பத்தெட்டு சதவிகித அளவில், பலவகையான பதவிகளில், நல்ல வேலைவாய்ப்புகளைப் பெற்றார்கள். கல்வித்தகுதிகள் நிறைந்த நாயர் சமூகம் மற்றும் கிறிஸ்தவ இனத்தினர் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். ஆனால் அவர்கள், 'ஓரங்கட்டப்பட்டார்கள். இதனால், இந்த சமூகத்தினர் இது குறித்துப் பெரிதும் வேதனைப்பட்டார்கள். ஈழவ சமூகமும், வேலை வாய்ப்புகளிலிருந்து ஒதுக்கப்பட்டதுடன், கல்வி கற்பதற்கும், அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்படுவதிலிருந்தும் அறவே தடுக்கப் பட்டார்கள். ஜி.பி. பிள்ளை அவர்களின் கட்டுரைகளும், துண்டுப் பிரசுரங்களும் இவ்வாறான ஒருதலைப்பட்சமான அநீதிப் போக்குகள் பற்றி, மக்களிடையே மிக ஆழமாகச் சிந்திக்க வைத்தன.

'திருவிதாங்கூர், திருவிதாங்கூர் மக்களுக்கே' என்கிற தலைப்பில் அவரது ஆக்ரோஷமான குரல் ஓங்கி ஒலித்தது. இந்தப் பிரசுரங்கள் முடிவுரையில் பின்வருமாறு முழக்கமிடும்: 'திருவிதாங்கூர் மக்கள், தமது தாய் நாட்டில், ராவின் ஏகாதிபத்தியப் போக்கை முற்றாக முறியடிக்காதவரையில் எந்த நிலையிலும் அரசியல் முன்னேற்றம்

கிட்டாது என்பதை உணர வேண்டும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக அரசு நிர்வாகத் துறையில் கொட்டமடித்துவரும் அந்நியக் கும்பலை விரட்டாத வரையிலும், இந்த அதிகார வர்க்கத்தினரின் சுயநலக் கொள்கைகளை வேரோடு கெல்லி எறிந்து தடுத்து நிறுத்தாத வரையிலும் நமக்கு அரசியல் சுதந்திரம் வெறும் கனவாகவே இருக்கும். இதை நாம் சாதித்து விட்டால், திருவிதாங்கூர் மண்ணின் மக்கள் பயின்ற மேற்கத்தியக் கல்வி மற்றும் கலாசாரம் போன்றவற்றிற்குரிய பயன் கிட்டுவதுடன், இழந்துவிட்ட நிலையை மீண்டும் அடைய முடியும் என்பது உறுதி.'

ஜி.பி. பிள்ளையின் காரசாரமான சுற்றறிக்கை மற்றும் பிரசுரங்கள், இந்தியாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வெளியாகும் பிரபல ஏடுகளின் கவனத்தைக் கவர்ந்தது. குறிப்பாக, பிரிட்டனின் 'மார்னிங் போஸ்ட்' நாளேடு உட்பட, அனைத்துப் பத்திரிகைகளும் ஜி.பி. பிள்ளையின் உணர்ச்சிகரமான பிரசுரங்களைப் பற்றிப் பாராட்டி விமரிசித்தன. 'மலையாளிகளின் நினைவுகள்' என்கிற இந்த பிரசுரங்களின் ஆசிரியர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதும் கடினமாக இருந்தது. எனினும் சி.வி. ராமன் பிள்ளை அவர்களுக்கு, இந்த பிரசுர வெளியீடுகளில் ஒரு நெருக்கமான பிணைப்பு உண்டு என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். இவ்வாறான பிரசுரங்கள் அனைத்தும் ஜி.பி. பிள்ளையின் திறமையான வெளியீடுகள் என்றாலும், கே.பி. சங்கரமேனன் என்கிற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி, சட்ட நுணுக்கத்தகவல்கள் பலவற்றை அளித்து உதவி வந்தார். திரு. சங்கரமேனன் தலைமையில் பத்தாயிரத்து முப்பத்தேழு மக்களால் கையெழுத்து இடப்பட்ட மாபெரும் மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டது. பின்னாளில் திரு. மேனன், திருவிதாங்கூர் சமஸ்தான உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனமாகும் நிலையில் இருந்தார். அவர் தலைமையில் தயாரிக்கப்பட்ட மகஜர், பணிவோடும், கருத்துச் செறிவோடும், கண்ணியமாகவும் அமைந்திருந்தது. அதிகார பீடத்திலுள்ள மஹாராஜாவின் பார்வைக்கும், கவனிப்பிற்கும் தாக்கல் செய்யப்படும் மகஜர்களும், கோரிக்கைகளும் இவ்வாறு அமைந்திருப்பது இயற்கையாகும். இவ்வாறான பணிவுத்தன்மையும், தெளிவும், தொனியும், மக்கள் அரசுக்கு காட்டும் மரியாதையையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தும்.

இவ்வளவு பேர் கையெழுத்திட்டு, மன்னருக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரிலிருந்து, அவர்களுடைய, நெடுநாளைய வெறுப்பையும்,

மனக்கசப்பையும் நன்கு உணர முடிகிறது. இந்த மகஜர், சமரசத் தீர்வுக்கான ஒரு நல்லெண்ண சமிக்ஞையேயாகும். இது, அந்நியர்களுக்கு எதிரான புரட்சி அறிக்கை அல்ல. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் பிரஜைகளுக்கு, மற்றவர்களைக் காட்டிலும் அதிக அளவில் முன்னுரிமைகள் தரப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துவதாகும். இதுதான் சமஸ்தான மக்களின் பாதுகாப்புக்கும், உரிமைகளுக்கும் உரிய, நியாயமான நடவடிக்கையாயிருக்கும். எனவே, மகஜர் தயாரித்தவர்கள் மீது எவ்விதக் குற்றமும் சுமத்துவது பொருந்தாது, சென்னையிலிருந்து வெளியாகும் 'ஹிந்து' நாளிதழ், 20.1.1891 தேதியிட்ட பதிப்பின் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது. 1891ம் ஆண்டுக்குள், ராமன் பிள்ளையின் நண்பர்கள் அனைவரும் அரசுப் பணிகளில் வெவ்வேறு துறைகளில் சேர்ந்துவிட்டார்கள். ஆனால், அவர் மட்டும், தனக்கென்று, ஒரு பதவியை அரசாங்கத்தில் தேடிக்கொள்ள விரும்பவில்லை. அவரது சமுதாய விழிப்புணர்வும் ஈடுபாடும் ஆழமானதாயிருந்தன. எனவே, தனது இயல்புக்கு ஏற்ற வகையில், மக்கள் சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்கு ஒரு பத்திரிகை ஆரம்பிப்பதே பொருத்தமாயிருக்கும் எனத் தீர்மானித்தார். இதன்படி 1882ல் 'திருவிதாங்கூர் தேச பக்தன்' என்கிற வார இதழை துவக்கினார். அதில் சி.வி. அவர்கள் அரசு அதிகாரிகளின் திமிரையும், ஆணவத்தையும் கவைக்குதவாத தற்பெருமைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, கடுமையாகச் சாடினார். அந்த காலத்தில் மானம், மரியாதை, சூடு சொரணை எதுவுமில்லாத தடித்தனமான போக்கே வாழ்க்கையின் உயர்நிலையை அடைவதற்கு ஏற்ற தகுதிகளாகயிருந்தது. ஆணவப் போக்கும், அலட்சியமும் நிறைந்த அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு, எதிர்ப்பு காட்டும் துணிவு எவருக்குமே இல்லாமல் இருந்தது. அதிகாரிகள் மற்றவர்களைவிட, தாங்கள் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தங்களுக்குப் பணிவும், மரியாதையும் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் எனவும் கருதிக் கொண்டிருந்தார்கள். இவர்களில் சிலர் சக்தி வழிபாட்டையும் மது அருந்துதலையும் மதச்சடங்காகக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் ரகசியமாக 'ஒருத்திக்குப் பல கணவர், ஒருவருக்கு பல மனைவி' என்கிற புதிய தத்துவ வழியில், கட்டுப்பாடற்ற காம சுகங்களில் திளைத்தார்கள். இதன் விளைவாக, கற்பு, பண்பாடு ஆகியவை காற்றில் பறந்தன. முறையற்ற இந்த நடவடிக்கைகளை எதிர்த்து ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் தீவிரத்திலும் ராமன் பிள்ளை இந்த

சஞ்சிகையை ஆரம்பித்தார். இதனால், அவருக்கு எதிரிகள் பலர் தோன்றினர். அதேபோல் நிறைந்த எண்ணிக்கையில் நண்பர்களும், ஆதரவாளர்களும் அதிகரித்தனர். ஊழலில் ஊறிக்கிடந்த அதிகாரவர்க்கம் அதிர்ச்சியடைந்தது. அவர்களை அச்சம் தொற்றிக் கொண்டது. கல்லூரி மாணவ சமுதாயம், ராமன் பிள்ளையை பெரிதும் பாராட்டியது. புகழ்பெற்ற கல்வியாளரான எம். ராமவர்மாதம்பான் அவர்கள் பிற்காலத்தில், ராமன் பிள்ளைக்கு எழுதிய கடிதமொன்றில், குறிப்பிட்டிருந்ததாவது: 'இளைஞர் சமுதாயத்திற்கு மிகச் சிறந்த ஆதர்சமாக நீங்கள் விளங்குகிறீர்கள். மலையாளி சங்கத்தின், இன்றியமையாத உயிர்நாடி நீங்கள் என்பது அனைவருக்கும் தெரியும். சி.வி. ராமன் பிள்ளை என்ற பெயரே நற்குணங்களின் நிறைவுக்குடம் போலவும், சிறந்த கொள்கைகள் உள்ளவராகவும் ஆழ்ந்த அறிவாளியாகவும் ஆங்கில மொழியைக் கையாளுவதில் தனித்தன்மையுடையவராகவும், அரிய தகுதிகள் நிறைந்தவராகவும், சுதந்திர உணர்ச்சி மிக்கவராகவும், அனைத்திற்கும் மேலாக தளராத நம்பிக்கை உள்ளவராகவும் உங்களை அடையாளம் காண்கிறோம். உங்களுடைய நல்ல கொள்கைகளையும் இலட்சிய இலக்குகளையும் பெரிதும் நேசிப்பதுடன், இந்த குணங்களும், மனோதிடங்களும் எங்களுக்கும் வாய்க்க வேண்டும் என விரும்புகிறேன்.'

பொருளாதார ரீதியில் 'திருவிதாங்கூர் தேசபக்தன்' சி.வி. அவர்களுக்கு பெரிதும் நஷ்டத்தையே ஏற்படுத்தியது. எனவே, நிரந்தர வருமானம் தரும் அரசுப் பணியில் சேர்ந்துவிடலாம் என, நினைத்தார். அதே சமயத்தில், கேசவன்தம்பி கடைசியாகக் கூறியது அவரது நினைவுக்கு வந்தது. ''வலிய வரும் வேலைவாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளத் தயங்காதே'' என்பதே அந்த அறிவுரை. இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்தபின், இறுதியில், திருவிதாங்கூர் உயர்நீதி மன்றத்தில் ஒரு குமாஸ்தாவாகச் சேருவதற்குத் தீர்மானித்தார். சி.வி. போன்ற திறமையும் அறிவாற்றலும் பெற்றவருக்கு, இந்த குமாஸ்தா பணி,பெருமையோ, கௌரவமோ தரும் உத்தியோகம் அல்ல. ஆயினும், இதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல், இருந்தார். காரணம், பத்திரிகை போன்று தனக்கு விருப்பமான துறையில், தொடர்ந்து செயல்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமிருப்பதை உணர்ந்திருந்தார். பத்திரிகைத் துறையில் போட்டியோ, குறுக்கீடுகளோ அதிகமில்லை என்கிற சூழ்நிலையும், அவருக்குச் சாதகமான நிலவரமாக

அமைந்திருந்தது. அவரது நலனை நாடும் நண்பர்கள், சட்டக் கல்லூரியில் பகுதிநேர மாணவராகச் சேர்ந்து பட்டம் பெறுவது பயன்தரும் என ஆலோசனை கூறினார்கள்.

இதன்பின், பதிவுபெற்ற வழக்கறிஞராகத் தொழில் செய்து பொருளீட்டலாம் எனவும் அவரிடம் சொல்லப்பட்டது. 'மலையாளி' என்கிற சஞ்சிகையின் பெயர் கால வெள்ளத்தில் கரைந்துவிட்டது. எனினும், மலையாளப் பத்திரிகைத் துறை வரலாற்றில், என்றென்றும் அழியாப்புகழ் கொண்டதாக அது விளங்குகிறது. துவக்கத்தில், இது மாத இதழாக வெளிவந்தது. 1885 அக்டோபரில் (மலையாள ஆண்டு துலாம்1061) திருவிதாங்கூர் மலையாளிகள் அமைப்பின் அங்கமாக, இது பிரசுரிக்கப்பட்டது. சி.கே.பி. எனப்படும் சி. கிருஷ்ண பிள்ளை (1852-1916) பள்ளிகளின் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வந்தார். மிகுந்த சுறுசுறுப்பானவர். மலையாளி சங்கத்திற்கும், அதன் மாத வெளியீட்டிற்கும் இவர்தான் ஆதார ஜீவனாக இருந்தார். இந்த சஞ்சிகையின் உண்மையான ஆசிரியர், பேட்டையில் ராமன் பிள்ளை ஆசான் என்பவராவார். இவர், பண்டைய பழக்கவழக்கங்களில் ஊறிய முதுபெரும் பள்ளி ஆசிரியர். சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராக இயங்கியவர் சி.வி. ராமன் பிள்ளை. சஞ்சிகை வெளியான நேரத்தில் ராமன் பிள்ளைக்கு, சி. கிருஷ்ண பிள்ளை ஒரு கடிதம் எழுதினார். 'நீங்கள் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்றால் 'நாங்கள்' என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதி 'மலையாளி' சஞ்சிகையில் வெளியிட வேண்டும். அதில் நீங்கள் இந்த பத்திரிகையை துவக்கியதற்கான முக்கிய நோக்கத்தைப் பற்றி விவரமாகத் தெரிவிக்க வேண்டும். ஏனெனில், 'மலையாளி' சஞ்சிகை, நமது சங்கத்தின் பிரகடனக் குரலாகும். மேலும், நமது அமைப்பின் வரலாறு குறித்தும் விரிவான கட்டுரையும் மலையாளியில் இடம் பெற வேண்டும். அது, கருத்தாழத்துடன், கச்சிதமாக இருக்க வேண்டும். இது தவிர, 'மலையாளி சமுதாய அணி' என்கிற பெயரை 'மலையாளி சபா'என மாற்றியதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். 'மலையாளி'யின் ஒவ்வொரு தலையங்கமும் தரமானதாக அமைந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே நன்கு அறிவீர்கள். இதுபற்றி நான் நினைவுபடுத்த வேண்டிய அவசியமே இல்லை. 'மலையாளி' சஞ்சிகை, நமது சமூகத்திற்கு நம்பிக்கையையும், தெம்பையும் அளிக்கும் உதவிக்கரமாக, அமைய வேண்டும் என்பது

எங்கள் எதிர்பார்ப்பாகும். நண்பரே, எங்களை இந்த விஷயத்தில் ஏமாற்றிவிடாதீர்கள். உங்கள் பணியை உடனடியாக ஆரம்பியுங்கள். தயவு செய்து நொண்டிக் காரணங்களைக் கூறாதீர்கள். திருமணச் சட்டம் மற்றும், நிலக்குத்தகைக்காரர்களின் பிரச்னைகள் ஆகியவற்றைப் பற்றியும், எழுத வேண்டும். அதே சமயத்தில், நிலச்சுவான்தார்களின் பிரச்னைகளையும் அலட்சியப்படுத்திவிட முடியாது. எனினும், சிறு நிலச்சுவான்தாரர் தரப்பினர் பக்கமே நமது கவனம் பதிந்திருக்க வேண்டும் என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும். ஏனெனில், அவர்களின் ஆதரவினால், நாம் வலிமைபெற்று முன்னேற முடியும்.' இது முற்போக்கும், சமுதாய நலனில் அக்கறையும் கொண்ட சிந்தனையாளரின் குரல் என்பதை எளிதில் உணர முடியும். எனவே, ராமன் பிள்ளையும், கிருஷ்ண பிள்ளையும், சமூகச் சீரமைப்புத் திட்டப் பணிகளுக்கு இந்த கருத்துக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ராமன் பிள்ளை, காலம் கடத்தாமல், அருமையான சாரமுள்ள தலையங்கமொன்றைத் தயாரித்தார். சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் ஆசிரியரின் முத்திரை பதித்திருந்தது கண்கூடாகத் தெரிந்தது. வாசகர்களிடையே சஞ்சிகை உடனடியாக நல்ல வரவேற்பைப் பெற்று, பிரபலமும் அடைந்தது. இந்த பத்திரிகை மேற்கொண்ட, தமிழ் பிராமண எதிர்ப்பின் தீவிரத்தைக் கண்டு, அந்தணர் சமூகம் அரண்டு போனது. இதற்குத் தமது இனத்தின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் சாதனமாக, அவர்களினால், இரண்டு வாராந்திர இதழ்கள் துவக்கப்பட்டன. எனினும், ராமன் பிள்ளையின் உத்வேகமிக்க எழுத்தாற்றலுக்கு முன், இந்த சஞ்சிகைகள் தாக்குப்பிடிக்க முடியாமல் விரைவிலேயே பிசுபிசுத்துப் போயின. 'மலையாளி' அமைப்பின் நடவடிக்கைகள் பரவலாக வரவேற்கப்பட்டு, பாராட்டைப் பெற்றது. இந்த அமைப்பு, பெருமளவு வளர்ச்சி பெற்று, ராமன் பிள்ளை, இதன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'மலையாளி' மாதஇதழ் மாதமிருமுறை இதழாகவும் மலர்ந்தது. இந்த கால கட்டத்தில்,ராமன் பிள்ளை திருவனந்தபுரம் தலைமை நீதிமன்றத்தில் தலைமைக் குமாஸ்தாவாகப் பதவி உயர்வு பெற்றதுடன் அங்கு நீதிபதியாகப் பதவியிலிருந்த குஞ்ஞு ராமன் நாயரின் நெருங்கிய நேசத்திற்கு, உரியவராகவும் திகழ்ந்தார். அவர் இதுகாறும் எந்த ஓர் இலக்கியத்தையும் படைக்கவில்லை. எனினும், அவர் மகத்தான இலக்கிய மேதை என, ஏற்கெனவே அனைவராலும் நன்கு அறியப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவராக விளங்கினார். ராமன்

பிள்ளை,'மலையாளி' சஞ்சிகையில் எழுதி வந்த விவாதத்திற்குரிய கட்டுரைகளைக் கண்டு, திவான் ராமராவ் மிகவும் வெகுண்டார். இதன் விளைவாக நாயர் சமூகத்தினருக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபடும்படி, அந்தணர் சமூகத்தைத் தூண்டிவிடலானார். ஆனால், இது ஆட்டுக் குட்டிகளின் மந்தை சிங்கத்தை எதிர்ப்பது போல் பயனற்றுப் போனது. ராமன் பிள்ளையின் சுதந்திரத்தன்மை வாய்ந்த பேச்சுகளுக்கும் எழுத்துகளுக்கும் தடை விதிப்பதற்கு திவான் ராமராவ், உரிய தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அதற்கு வெகு காலம் பிடித்தது!

ராமன் பிள்ளையின் குடும்ப வாழ்க்கை

சி.வி. அவர்களின் முதல் திருமணம், 1882-ல் முறைப்படி நடைபெற்றதாகும். அது நீண்ட நாள் நிலைக்கவில்லை. மிகச் சாதாரண [illegible]பத்தைச் சார்ந்த பதின்மூன்று வயதே ஆன ஒரு சிறு பெண்ணை, [illegible]து மூத்த சகோதரர்களின் கட்டளைக்கிணங்க, கடமைக்காக ராமன் பிள்ளை கைப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தத் திருமணம் முறிந்து போனதற்குக் காரணம், ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டதினாலோ அல்லது அந்தப் பெண் போராடியதினாலோ அல்ல. பெண்ணின் மாமன்கள் அடிப்படையிலேயே தீயவர்களாக இருந்தார்கள். ராமன் பிள்ளையின் திறமையும், புகழும் அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை. ஒருநாள், ராமன் பிள்ளை வெளியில் சென்றிருந்த சமயம் பார்த்து, அந்தப் பெண்ணை, அவளது மாமன்களில் ஒருவர், அழைத்துச் சென்று விட்டார். வீடு திரும்பிய ராமன் பிள்ளை, இதுபற்றி தெரிந்தபோது பெரிதும் கோபமடைந்தார். மனைவியைத் திரும்ப அழைத்து வருவதில் அவர் அக்கறை காட்டவில்லை. இது பொருத்தமற்ற, தவறான திருமண பந்தங்களுக்கு ஏற்படும் பரிதாபகரமான நிலையையும், முடிவையும் புலப்படுத்துவதாக அமைந்தது. இதையடுத்து, மூன்றாண்டு காலம், திருமண நினைப்பையே வெறுத்து ஒதுக்கித் தனித்திருந்தார். திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துபவர்களிடம் அந்த ஆலோசனையை நிராகரிக்கும் வகையில் தலையசைத்து மறுத்துவிடுவதும் அவரது வழக்கமாயிற்று. இறுதியில், மிக நெருக்கமான நண்பரொருவரின் அறிவுரையைப் புறக்கணிக்க முடியாத நிலையில் மறுமணத்திற்கு ராமன் பிள்ளை சம்மதம் தெரிவிக்க நேர்ந்தது. இந்தமுறை, ராமன் பிள்ளைக்கு

நிச்சயிக்கப்பட்ட மணமகள் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவள்; மிக அழகானவள். பண்பும் அடக்கமும், இனிமையும் நற்குணங்களும் கொண்டவள். அவருக்கு நன்கு அறிமுகமாயிருந்த மரியாதைக்குரிய ஓர் இளம் பெண்ணின் இளைய சகோதரி என்கிற விவரத்தை அறிந்த ராமன் பிள்ளை பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். இவர்கள் திருமணம் நடைபெற்றது, 1885 ஆம் ஆண்டு ராமன் பிள்ளையைக் கைப்பற்றியதன் மூலம் புகழ்மிக்க ஒரு பிரமுகரின் மனைவியாக உயர்ந்துவிட்டிருப்பதை, பாகீரதி அம்மா, உணர்ந்தார். அடுத்த சில நாட்களில் தன்னுடைய கணவர், வெறும் ஐம்பது ரூபாய் சம்பாதிக்கும் குமாஸ்தா அல்ல. அதைவிட மேலான தகுதிகளும், கௌரவமும் கொண்டவர் என்பதைத் தெரிந்து கொண்டார். ராமன் பிள்ளை, இளைஞர்களின் மத்தியில் கதாநாயகனாகவும், 'பி.ஏ. வட்டம்' என அனைவராலும் அறியப்பட்டிருந்த அணியினரின் ஆதார அச்சாகவும் விளங்கி, எல்லோருடைய அன்புக்கும் உரியவராகத் திகழ்ந்தார். அவரது வீடு, எப்போதும் மக்களால் நிரம்பி வழிந்தது. முன்கூட்டியே தகவல் தெரிவித்தும் தெரிவிக்காமலும் எந்நேரமும் குழுமிவிடும் விருந்தினர்களுக்குரிய மரியாதை தந்து, உபசரித்து, விருந்தளித்து சிறப்பிப்பதில் ராமன் பிள்ளை பெரிதும் நாட்டம் கொண்டவராகச் செயல்பட்டார். பாகீரதி அம்மாவும் பெருந்தன்மை மிகுந்த இல்லத்தரசியாகத் திகழ்ந்ததால், ராமன் பிள்ளையின் விருந்தோம்பலில் தனது கடமையையும், பங்கையும் உணர்ந்து நன்கு ஒத்துழைத்தார். சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் அனுசரித்துப் போகும் பக்குவத்தையும் பெற்றிருந்தார். குறிப்பாகச் சொல்வதானால், ராமன் பிள்ளையும் பாகீரதி அம்மாளும் மனம் ஒன்றிய, மகிழ்ச்சிமிக்க குடும்ப வாழ்க்கை நடத்தினார்கள். 1904ல் பாகீரதி அம்மாளைக் காலன் பறித்துக் கொள்ளும் வரையில் இந்த தம்பதி, பதிதொன்பது ஆண்டுகாலம், நல்லறவழியில் இல்லறம் நடத்தினார்கள். இரண்டாண்டு இடைவெளியில் ஒரு குழந்தை என்கிற அளவில் இவர்களுக்கு மொத்தம் ஒன்பது குழந்தைகள் பிறந்தன. இரண்டு பிள்ளைகள், நான்கு பெண்கள் ஆக ஆறு குழந்தைகள் மட்டுமே உயிர் பிழைத்தன. மூத்தமகன் சேகர் பிள்ளை ஓரளவு இலக்கிய ஞானம் மிக்கவராயிருந்தார். ஆனால், அது உயர்ந்த நிலையில் அமையவில்லை. இரண்டாவது மகன் இளம் வயதிலேயே மரணமடைந்துவிட்டான். அவரது நான்கு மகள்களும் திருமணமாகி மகிழ்ச்சிகரமான வாழ்க்கை நடத்தினார்கள். எனினும், மூத்த மகளின் கணவர், ஆபத்து நிறைந்த பொறுப்புகளை ஏற்றிருந்த காரணத்தினால் கவலையும், மனவருத்தமும் ராமன் பிள்ளை

அவர்களைப் பெரிதும் வாட்டியெடுத்தது. ஏ. ராமன் பிள்ளை எனப்படும் ஏ.ஆர். பிள்ளை தான், அவரது மூத்த மாப்பிள்ளை, திருவனந்தபுரத்தின் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மிகுந்த புத்திசாலி. சராசரி கல்வித் தகுதி கொண்டவர்தான் என்றாலும், ஆங்கில மொழியில் சிறந்த புலமை பெற்றிருந்தார். சி.வி. ராமன் பிள்ளை அவர்கள், ஏ.ஆர்.பிள்ளையைத் தனது மூத்த மருமகனாக 1905ல் தேர்வு செய்தார். ஏ.ஆர். பிள்ளையின் எதிர்காலத்தில், சி.வி. அவர்கள் பெரிதும் நம்பிக்கை வைத்திருந்தார். வாழ்க்கை சலனமின்றிச் சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில், உயர்கல்வி பெறுவதற்காக, ஐரோப்பா செல்வதென்று, ஏ.ஆர். பிள்ளைஎதிர்பாராத வகையில் திடீரென ஒரு முடிவெடுத்தார். இதன்படி 1909-ல் கப்பல் பயணமாக அவர் ஐரோப்பாவிற்குப் புறப்பட்டார். எடின்பரோ நகரில், வனத்துறைக் கல்லூரியில் சேர்ந்து தனது ஆராய்ச்சிகளை முடித்துக்கொண்டு, உயர்கல்வித் தகுதி நிறைவடையும் நோக்கத்தில், ஜெர்மனிக்குச் சென்றார். ஜெர்மனியில், இந்தியப் புரட்சியாளர்கள் பலருடன் சேர்ந்து, பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான, ரகசியப் பணிகளில் ஈடுபட்டார். அவரைப் பற்றிய எந்த விவரமும் தெரியாத நிலையில், ஆண்டுகள் பல உருண்டோடின. இந்த காலகட்டத்தில் அவரது மனைவி, மனவருத்தத்தினால் மிகவும் நொந்து, உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த சி.வி. ராமன் பிள்ளையின் பராமரிப்பில் இருந்து வந்தார். இளம் வயதினரான, தனது மகள் தனிமையில் இடையறாமல், மனமுருகி, தெய்வத்தைப் பிரார்த்தனை செய்வதைக் காணும் போதெல்லாம், சி.வி. அவர்களின் மனம், கனத்துப் போனது. பிரார்த்தனைக்குப் பலனும் கிட்டியது. ஏ.ஆர். பிள்ளை, நலமாகத் திரும்பி வந்தார். ஆனால், இதற்குப் பதினேழு ஆண்டுகாலம் பிடித்தது. இதனிடையில், சி.வி. ராமன் பிள்ளை, மண்ணுலகைவிட்டுப் பிரிந்திருந்தார். சி.வி. ராமன் பிள்ளையின் மருமகன்களில் மிகப் புகழ் பெற்றவராக விளங்கியவர், ஈ.வி. கிருஷ்ண பிள்ளையாவார். இவர், மிகச் சிறந்த நாடக ஆசிரியராகவும், நகைச்சுவை எழுத்தாளராகவும் பிரபலமடைந்திருந்தார். அவரிடமிருந்த இலக்கியத் திறமைக்காகவே, சி.வி. அவர்கள், கிருஷ்ண பிள்ளையைத் தனது மருமகனாக ஆக்கிக் கொண்டார். ராமன் பிள்ளைக்கு மிக நம்பகமான செயலாளர் மற்றும் உதவியாளர் போல் பல சமயங்களில் கிருஷ்ண பிள்ளை, உதவிகரமாக இருந்திருக்கிறார். எனினும், வேலையில் ஈடுபாடும், அக்கறையும் இல்லாதவராக இருந்தார். எனவே, கிருஷ்ண பிள்ளை, ஒரு

பாஸ்வெல் போலச் செயல்பட முடியவில்லை. கிருஷ்ண பிள்ளையின் சிறப்பு வாய்ந்த கட்டுரைகள் பலவும் ராமன் பிள்ளை அவர்களின் இலக்கியப் பட்டறையின் பயிற்சித் திறனுக்கும் சாதனைகளுக்கும் சான்றாக விளங்கின. கிருஷ்ண பிள்ளையின் மகன், அடூர்பாசி, மலையாளத் திரைப்படத்துறையில் பிரசித்திமிக்க நகைச்சுவை நடிகர். தனது தகப்பனார் மற்றும் பாட்டனார் ஆகியவர்களின் பாரம்பரிய அடிச்சுவட்டில் அவரும் இயற்கையாகவே நகைச்சுவை வளம் வாய்க்கப் பெற்றிருந்தார். இந்த ஆற்றலை, அடூர்பாசி, மலையாளத் திரைப்படங்களில் நன்கு பயன்படுத்திக் கொண்டு, தனக்கும், தனது பாட்டனார், தந்தை ஆகியவர்களுக்கும் பெரும் புகழ் சேர்த்தார்.

3

மார்த்தாண்ட வர்மா

சி.வி. ராமன் பிள்ளை அவர்கள், 1891-ல் 'மார்த்தாண்ட வர்மா' நாவலை எழுதி வெளியிட்டதன் மூலமாக அவரது நிகரற்ற இலக்கியத் திறமையை உலகம் உணர்ந்து கொண்டது. இந்த நாவல், பிரமிக்க வைக்கும் உணர்ச்சிகரமான சம்பவங்கள் கொண்டதாக அமையாவிட்டாலும், அவருடைய இலக்கிய உள்ளுணர்வுகளின் உந்துதலால் வெளிப்பட்ட படைப் பிலக்கியமாக விளங்கியது.

சி.வி. அவர்கள் மாணவராக இருந்தபோதே தன்னுடைய கல்லூரி நாடக மன்றத்தின், போட்டியில்லாத தலைவராகயிருந்தார். நகைச் சுவையுடன் பேசுவதில் வல்லவராக விளங்கினார். குதூகலத்தையும் வியப்பையும் ஏற்படுத்தக்கூடிய கற்பனைத் திறன் ஒரு நாடகத்தை எழுதித் தயாரிக்கும் அளவிற்கு, 1884-ல் அவரது உள்ளத்தில் படைப்பிலக்கிய ஊற்றாகப் பெருக்கெடுத்தது. வேடிக்கையான, நகைச்சுவைச் சித்திரங்கள் பெரும்பாலும் இலக்கிய மதிப்பு கொண்டதாகயிருப்பதில்லை. அவை நாடக மேடையில் உடனடியான வெற்றியையும், வரவேற்பையும் தேடித் தரக்கூடிய அளவிலேயே மதிக்கப்படுபவையாயிருந்தன. சிறந்த படைப்பிலக்கியவாதியும் தேர்ச்சிமிக்க நாடக மேடை நடிகருமான, ராமன் பிள்ளை, கோமாளியாகவும், குறி சொல்பவராகவும், வயோதிக வேஷத்திலும் வந்து தன்னுடைய விதவிதமான நடிப்புத்

திறமையினால், ரசிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர். 'சந்திரமுகி விலாசம்' என்கிற பிரசுரிக்கப்படாத, நடிப்பதற்கேற்ற நையாண்டி நாடகம் ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றதுடன் அடுத்த முப்பதாண்டு காலம் அமெச்சூர் நாடகக் குழுவினரால், காலத்திற்கேற்ற நாடகம் என்ற முறையில் மேடைகளில் அரங்கேற்றப்பட்டது. சி.வி. அவர்கள், படைப்புத் துறையில், சீரான போக்கைக் கடைப்பிடிக்கும் வழக்கமில்லாதவராக இருந்தாலும், ஒன்பது நாடகங்களை எழுதினார். அவரது நாடகங்களைப் பற்றி எந்தவொரு விமரிசகரும், முறையாக மதிப்பீடு செய்ய முயலவில்லை. இதை பின்னர் விரிவாக ஆராய்வோம். ராமன் பிள்ளை அவர்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளில் அதிக ஈடுபாடு இருந்தது. சமகாலத்திய அரசியல், சமூகப் பிரச்னைகளில் மிகுந்த அக்கறை கொண்டவராகயிருந்த போதிலும், அவரது கற்பனை, கடந்தகால வரலாற்றுச் சம்பவங் களையே சுற்றிச்சுற்றி வந்தது. திருவிதாங்கூரின் தெற்குப் பகுதி யைச் சேர்ந்த, ஏழை எளிய வர்க்கத்தினர், வெளியுலகிற்கு அதிகம் தெரியவராத பழைய காலத்தைச் சேர்ந்த நாட்டுப்புறப் பாடல்களில் அவர் லயித்துப் போயிருந்தார். எழுதப்பட்ட வரலாறுகளைவிட, எழுதப்படாத வரலாறுகளாகத் திகழும் பண்டைய காலத்தைச் சேர்ந்த அரண்மனைகளும், அதில் வசித்தவர்களுமே, ராமன் பிள்ளையை அதிகம் கவர்ந்தன. நண்பர்களை, தன்னுடைய கவிதைகளினாலும், கற்பனை புராணக் கதைகளினாலும் பெரிதும் கவர்ந்து வந்தார். இந்த வகையில், பொடிப் பொடியாகச் சிதைந்து வரும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் பழைய சரித்திர நிலவரங்களைத், தொகுத்தளிக்கும் விதத்தில் ராமன் பிள்ளையிடம் ஏராளமான வரலாற்றுத் தகவல்கள் சேமிக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் தெற்கு முனையில் அமைந்திருந்த திருவிதாங்கூர், அந்த நாட்களில், அவ்வளவு முக்கியத்துவமிக்க பகுதியாகக் கருதப்படவில்லை. மன்னர் மார்த்தாண்ட வர்மா, 1729-ல் அரியணை ஏறிய பின்புதான், திருவிதாங்கூர் எனும் இந்தச் சிறிய பிரதேசம் ஒரு பெரிய மாநிலமாகப் படிப்படியாக விரிவடைந்தது. தன்னுடைய வீர தீர சாகசங்களினால், மன்னர் மார்த்தாண்ட வர்மா, பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவன் உள்ளத்திலும் பெரிய கதாநாயகனாகத் திகழ்ந்தார். நவீன திருவிதாங்கூரை உருவாக்கியவர் என்கிற பெரும் புகழுக்கும் உரியவரானார் (திருவிதாங்கூர் என்கிற பெயர் திருவிதம்போடு அல்லது இதைவிட மிகப் பழமையான திருஅத்தன்கோடு என்கிற பெயர்களிலிருந்து உருமாறியதாகும்.

அது ஆங்கிலமாக்கப்பட்டு 'ட்ராவேண்ட்ரம்' என்று ஆயிற்று) மன்னர் மார்த்தாண்ட வர்மா, திருவிதாங்கூர் சமஸ்தானத்தை தமது குல தெய்வமான பத்மநாப ஸ்வாமிக்கு அர்ப்பணிப்பு செய்து, மக்களின் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்தார். பத்மநாப கடவுளுக்குத் தனது ராஜ்யத்தைக் காணிக்கையாக்கும் விஷயத்தில் மன்னர் மார்த்தாண்ட வர்மாவுக்கு தெய்வப் பற்றைவிட, மற்றொரு முக்கிய நோக்கம் இருந்தது. மிகவும் வறிய நிலையில் திருவிதாங்கூர் சமஸ்தானம் இருந்த காலகட்டத்தில்தான், முள்கிரீடம் தரிப்பது போல் மன்னர் பட்டத்தை ஏற்றார். சமஸ்தானத்தை அரசாண்டு வந்த அவரது முன்னோர்கள், தமக்கு சுற்றிலும், பொறாமையும், பேராசையும் மிகுந்த தலைவர்களை வளரவிட்டதினால், மிக விரைவிலேயே, நிர்வாகம் சீரழிந்துபோனது. வளர்ச்சியடைந்த திருவனந்தபுரம் என்கிற நூலில், எஸ். ராமநாத அய்யர் என்பவர் இதனை குறிப்பிடுகிறார். தேசபக்தி, மானுடநேயம், கற்பனை ஆகிய மூன்று தளங்களில் ராமன் பிள்ளை அவர்கள், தனது வரலாற்று நவீனங்களை நிர்மாணித்தார். கௌடில்யரின் சாணக்கியத்தனம் கொண்ட நாயர் சமூகத்தைச் சேர்ந்த பெருந்தனக்காரர்கள், நிலக்கிழார்கள் போன்றோரை ஒழிப்பதற்கு மன்னர் மார்த்தாண்ட வர்மா மேற்கொண்ட கருணையற்ற நடவடிக்கைகளை நினைவுபடுத்துவதாகயிருந்தன அவை. இந்த நடவடிக்கைகள், பெரும் சர்ச்சைகளுக்கு உள்ளாயின. 'கேரள வரலாறு' என்கிற, தன்னுடைய நூலில், சர்தார் கே.எம். பணிக்கர், மன்னர் மார்த்தாண்ட வர்மா பற்றி, சிறப்பாகக் கூறியிருக்கிறார். மார்த்தாண்ட வர்மா, மிகச் சிறந்த நிர்வாகி என்பதையும் எதேச்சதிகாரத்தின் பிடியில் சிக்கித் திணறிக் கொண்டிருந்த சமஸ்தானத்தை மீட்டு, முன்னேற்றியவர் என்கிற உண்மையையும், ஒப்புக் கொள்வதற்கு சர்தார் பணிக்கர் தயங்கவில்லை. மன்னர் மார்த்தாண்ட வர்மா வுக்கும் பெருந்தனக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையை விவரிக்கும் வகையில், ராமன் பிள்ளையின் நவீனத்தின் கதா நாயகர்களாக பெருந்தனக்காரர்களின் எட்டு வீட்டுத் தலைவர்களைச் சித்திரித்திருக்கிறார். மன்னரின் மாமன் மகன்கள், இந்த பெருந்தனக்காரர்களுடன் சேர்ந்து அரசருக்கு எதிரான வகையில், ஒரு எதிர்ப்புமுனையை எவ்வாறு ஏற்படுத்தினார்கள் என்பதையும், அவரது நவீனத்தின் ஒருபகுதி விவரிக்கிறது. மார்த்தாண்ட வர்மா நவீனத்தை மேலும் விரிவாக ஆராய்வதற்கு முன், திருவிதாங்கூர் சமஸ்தான மன்னர்கள் பரம்பரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த, தாய்வழி வாரிசு முறையைப் பற்றித் தெளிவுபடுத்துவது

பொருத்தமாயிருக்கும். அரச குடும்பங்களைத் தவிர, நாயர் சமூகத்தினரிடையேயும் கேரளத்தின் மற்ற ஜாதி யினரிடையேயும் இந்த தாய்வழி வாரிசுமுறை பழக்கத்தில் இருந்து வந்தது. க்ஷத்திரிய குல வம்சத்தில் வந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் அரசர்கள், இந்தியாவின் மற்ற பகுதிகளைச் சேர்ந்த க்ஷத்திரிய குல வம்ச ராஜகுமாரிகளைத் திருமணம் செய்து கொள்வது வழக்கமில்லை. திருமணம் செய்து கொள்வதாயிருந்தால், நாயர் இனத்தைச் சேர்ந்த பெண்களையே மணமுடிப்பார்கள். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அற்புதமான பராமரிப்பும் வசதிகளும் கிட்டும். ஆனால், மன்னர் பட்டத்திற்கான வாரிசு உரிமை கொண்டாட முடியாது. மன்னரின் அரண்மனையிலும் வசிக்க முடியாது. மார்த்தாண்ட வர்மாவின் சிறிய தந்தை, ஓர் அழகான தேவதாசிப் பெண்ணை மணந்து கொண்டார். அவள் மூலம் இரண்டு குழந்தைகள் அவருக்குப் பிறந்தன. இந்த இரண்டு ஆண் குழந்தைகளும் பெரியவர்களாக வளர்ந்ததும், தமது சிற்றப்பனை வெளியேற்றிவிட்டால், மன்னர் பட்டத்தை அபகரித்துக் கொள்வது எளிதாகயிருக்கும் என கணக்குப் போட ஆரம்பித்தார்கள். பெரும் நிலக்கிழார்களான அந்த எட்டு வீட்டுத் தலைவர்களும், மன்னராட்சியைக் கவிழ்ப்பதற்கு, இந்த இரண்டு பிள்ளைகளையும் பயன்படுத்திக் கொள்ள சதித் திட்டம் போட்டார்கள். இதன்படி அந்த இருவரின் ஆசைக் கனலைத் தூண்டிவிட்டு, தேவையான உதவிகளையும் செய்தார்கள். இளவரசர் மார்த்தாண்ட வர்மா, தனது இளமைக் காலத்தில், மிக ஆபத்தான சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. விரோதிகளினால் அவர், தொடர்ந்து விரட்டப் பட்டு வந்தார். அவர் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உளவாளிகளின் கூர்மையான பார்வையி லிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறு, உயிரைப் பணயம் வைத்து அவர் எதிர்கொண்ட சோதனைகளும், சாதனைகளும் உள்ளடக்கியதே, ராமன் பிள்ளையின் மார்த்தாண்ட வர்மா நவீனத்தில் இடம் பெற்றுள்ள, வீரசாகசப் போராட்டங்கள் எனும் மெய்சிலிர்க்க வைக்கும் பகுதியாகும். இதன் இரண்டாவது பகுதியில், கதாநாயகியான பாறுக்குட்டியின் மனதைப் பிழியும் காதல் கதை இடம் பெற்றுள்ளது. இறந்துவிட்ட, காதலன் திரும்பி வருவான் என அந்தப் பெண் பேதைத்தனமாக நம்பிக் கொண்டிருப்பதை விவரிக்கும் கட்டத்தில், ராமன் பிள்ளையின் எழுத்தாற்றலின் வீச்சையும், கற்பனை நயத்தையும் நன்றாக உணர முடிகிறது. பாறுக்குட்டியின் காதலன்

அனந்தபத்மநாபன் முன்பின் அறியாத விரோதிகளினால் கொலை செய்யப்பட்டார் எனப் பரவலாகக் கருதப்பட்ட தகவலாகும். இந்த நாவலில் அனந்தபத்ம நாபன் சாகசச் செயல்வீரனாகத் திகழ்கிறார். இதனால் 'மார்த்தாண்ட வர்மா' நவீனத்தில், உணர்வின் உச்சத்தைத் தொடும் வகையில் மர்ம முடிச்சுகளுக்கும், திகிலூட்டும் திருப்பங்களுக்கும் குறைவே இல்லை! நாவலின் துவக்கத்திலேயே படுகாயமடைந்து, உயிருக்குப் போராடும் ஓர் இளைஞனைச் சந்திக்கிறோம். அவனை முஸ்லிம் வர்த்தகக் குழுவொன்று காப்பாற்றுகிறது. இந்தக் குழுவின் தலைவரான ஹகீம் எனப்படும் மூலிகை வைத்தியர், சிகிச்சை அளித்து, அவனுக்கு மறுவாழ்வு தருகிறார். பின்னர், இந்த இளைஞன் இஸ்லாம் மதத்தைத் தழுவி, ஷாம்சுதீன் என்கிற இஸ்லாமியப் பெயரையும் பெறுகிறான். ஹகீமின் மகள், இந்த வாலிபன் மீது காதல் வயப்படுகிறாள். எனினும், இளைஞனால் அவளைக் காதலிக்க முடியவில்லை. இந்த நாவல் முழுவதும், இவ்வாறான விசித்திரச் சம்பவங்கள் நிறையவே இடம் பெற்றுள்ளன. ஒரு பத்தானியன், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சித்த சுவாதீனமற்ற சாணான், தனது நுனிவிரல் வரை ராஜ விசுவாசியாக மன்னருக்காக உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்கும் இயல்புள்ளவராகவும் பல்வேறு குணசித்திர வேடங்களில், இந்த இளைஞர், மார்த்தாண்ட வர்மா நவீனத்தில் அடையாளம் காட்டப்படுகிறார். பிரபல இலக்கியத் திறனாய் வாளரான எம்.பி. பால் என்பவர், இந்த இளைஞர் அனந்த பத்மநாபனுக்கும் - மன்னர் மார்த்தாண்ட வர்மாவுக்கும் இடையேயான பிணைப்பும், உறவும், ரிச்சர்ட் மற்றும் இவான்கோ ஆகிய இருவர்களுக்கும் இடையே நிலவிய பாசப் பிணைப்பைப் போல் உள்ளது எனக் குறிப்பிடுகிறார். பல்வேறு சோதனையான கட்டங்களில் இவான்கோவை, அரசர் ரிச்சர்ட் காப்பாற்றியதை 'இவான்கோ' நாவல் சித்திரிக்கிறது. ஆனால், 'மார்த்தாண்ட வர்மா' நவீனம், இக்கட்டான நிலை ஏற்படும் போதெல்லாம், அவற்றிலிருந்து மன்னர் மாத்தாண்ட வர்மா மீள்வதற்கு அனந்தபத்மநாபன் உதவி செய்வதை விவரிக்கிறது. இந்த அனந்தபத்மநாபன் என்கிற குணசித்திரப் படைப்பு வாசகர்களின் அபிமானத்திற்கு உரியதாக விளங்கினாலும், நாவலுக்கு வலுவூட்டும் அம்சமாக அமையவில்லை. எதையும் மற்றவற்றுடன் ஒப்பிட்டு நோக்கும் இயல்புள்ள வாசகர்கள், மாறுவேடமும், துணிவும் கொண்ட கதாபாத்திரப் படைப்பில், ஏமாந்துவிடக் கூடியவர்கள் அல்ல. மேலும், நாவல் முழுவதும் விளங்காப் புதிர் நிறைந்த உரையாடல்களும், அர்த்தமற்ற

பாடல்களும், நாடகத்தன்மையுடன் உள்ளன. ஆயினும், நாவல் சாதாரண இடமொன்றில் நிகழும் சம்பவங்களின் எளிமைத் தன்மையையும் நயத்தையும் கொண்டிருந்தன. மன்னரின் விவகாரங்கள் தவிர, அவர் வேறெதிலும் தனது கவனத்தைச் செலுத்துவதற்கு அவகாசம் இல்லாதவராயிருந்தார். அவருடைய கவர்ச்சியும், பற்றும், சாதுரியமாக மறைக்கப் பட்டுள்ளதால் உண்மையிலேயே அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் அறிந்து கொள்வது கடினமாகியுள்ளது. சி.வி. அவர்கள் கதாநாயகியின் மூலமாக நமது தாய்க்குலம் அளவு கடந்த பொறுமையுடனும் பெருந்தன்மையுடனும் கஷ்டங்களை அனுபவிக்கும் குணநலன்களும் கொண்டிருப்பதை உணர்த்துவதற்காக, இந்த உத்தியைக் கையாண்டிருக்கலாம். அவளுடைய தாய், நல்ல நோக்கத்துடனும் அக்கறையுடனும், மறுமணம் செய்துகொள்ளத் தூண்டியதும், அவள் விஷயத்தில் வெற்றிபெறவில்லை. காதலன் இறக்கவில்லை என்றே, அவளுடைய பரிசுத்தமான உள்ளம் நம்பியது. இளமைப் பெருமிதத்தில், காதல் போன்ற விஷயங்களில் ஒரு இந்துப் பெண்மணியின் மனோதிடமும் இயல்புகளும் எப்படியிருக்கும் என்பதைச் சிறப்பாக விளக்கும் வகையில், 'மார்த்தாண்ட வர்மா' நாவலில் பெண்களைப் பற்றி பல அத்தியாயங்களை எழுதியுள்ளதாகவே உணர முடிகிறது. இந்த வகையில், நாவலில் வரும் கதாநாயகி பாறுக்குட்டி, விவாதங்களுக்கு அப்பாற்பட்ட பெருமதிப்பும் கனிவும், கவர்ச்சியும் கொண்டவளாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதின் நோக்கமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

ஆயினும், பாறுக்குட்டியின் குணநலன்களுக்கு நேர் எதிரிடையாக சுபத்ரா என்கிற பெண்ணைச் சித்திரித்துக் காட்டியிருப்பதின் நோக்கம் என்ன? என, வாசகர்கள் உடனடியாகக் கேள்வி எழுப்பும் அபாயமும் இதில் இருக்கிறது. ஏனெனில், சுபத்ராவும் சி.வி.யின் இலட்சியப் பெண்களில் ஒருவர்தானே! உண்மைநிலை இப்படி யிருக்கும்போது, இவ்விருவருக்குமிடையே குணநலன்களில் ஏற்றத் தாழ்வைக் கற்பிப்பது பொருந்துமா; நியாயமா? என்கிற கேள்வி எழுவதும் இயல்பே. சுபத்ராவைப் பற்றிய குறிப்புகள் நாவலின் மூன்றாவது கட்டத்திற்குத் தன்னிச்சையாகவே, நம்மை அழைத்துச் செல்கின்றன. தனது உயிரையும் பொருட்படுத்தாமல், மன்னரிடம் சுபத்ரா கொண்டுள்ள ராஜவிசுவாசம் மிகவும் போற்றப்படவேண்டிய அம்சமாகும். அவள்

எதிரிகளின் முகாமைச் சேர்ந்தவள். மனத்தளவில் உறுதியானவள். அச்சமற்றவள். ஒழுங்கீனங்கள் நிறைந்த எதேச்சதிகாரக் கொடுங் கோலர்களான அவளுடைய சிற்றப்பன்களின் மிரட்டல்களுக்கும், மூர்க்கத்தனங்களுக்கும் தலைவணங்காத வீராங்கனையாகத் திகழ்பவள். அவளுடைய கற்புத்தன்மை குறித்துப் பழிச்சொற் களும், அவதூறுகளும் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட போதிலும், மனம் தளராமல் உறுதியுடன் அமைதியாக இருந்தவள். தன்னுடைய எதிரிகளுடன் இளவரசர் மேற்கொண்டிருக்கும் போராட்டத்தில், அவருக்கு உறுதுணையாக நின்று செயல்படவேண்டும் என்கிற ஆர்வமும், இலட்சியமுமே, சுபத்ராவின் வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோளாயிருந்தது. சுபத்ரா மிக இளம் வயதிலேயே, உலகைத் துறந்து வெளியே வந்துவிட்டாள். அவளது குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவர்கள், சுபத்ராவின் பிறப்பைப் பற்றிய தகவல்களையே குழி தோண்டிப் புதைத்துவிட முயன்றார்கள். சுபத்ரா, புரட்சிக்காரியாக மாறியதற்கு, இந்த நிகழ்ச்சியே வித்திட்டிருக்கலாம். இதுவே, அவளுக்கும், அவளது சிற்றப்பன்களுக்கும் இடையே பிளவையும், பகையையும் குரோதத்தையும் ஏற்படுத்தியது. சுபத்ரா, தர்க்கரீதியாக இளவரசர் பக்கம் கவரப்பட்டாள். அவளுடைய திருமணம் முறிந்ததுடன், நியாயமற்ற முறையில், மற்றவர்களின் அனுதாபத்தைப் பெற முயற்சி செய்பவள் என்கிற பெயரும் எடுக்க நேர்ந்தது. ஆனால், சுபத்ரா இதைப்பற்றியெல்லாம் கொஞ்சம்கூட சலனப்படாமல் இருந்தாள். அதே சமயம், வதந்திகளையும் வம்புகளையும் மனம்போனபடி வாரி இறைக்கும் கேவலமான மனிதர்களிடம் மிகுந்த விழிப்போடும் இருந்து வந்தாள். தன்னை தூஷிப்பவர்களை அலட்சியப்படுத்தி வெறுத்து ஒதுக்கித் தன்னுடைய பெருந்தன்மையான, பண்பட்ட குணநலன்களினால், அமைதியும், பொறுமையும், மௌனமும் காத்தாள். குறிப்பிட்ட பழைய காலத்தில் இதெல்லாம் சாத்தியமாகும் நிகழ்வுகள்தானா என்கிற சந்தேகம் எழலாம். ஏனெனில், அந்த நாட்களில் நேர்த்தியான குணநலன்களைக் கொண்ட பெண்கள், தம்முடைய உள்மனத்தின் எண்ணங்களை வெளிப்படுத்தும் இயல்பில்லாதவர் களாக, அந்தரங்கம் பேணும் இயல்புள்ளவர்களாக விளங்கியதினால், எளிதில் சந்தேகத்திற்கு உரியவர்களானார்கள். சுபத்ரா, இந்த நாவலில், புராணகாலத்தின் அழுத்தமான மதிநுட்பமும், மத்தியக் காலத்தைச் சேர்ந்த பெண்களின் குணங்களும் கொண்ட கலவையாகத் தோற்றமளிக்கும் நவீன மாதாஹரியாக உருவாக்கப் பட்டிருக்கிறாள். எல்லாவகையிலும் ராமன்பிள்ளையினால்,

அவளைப் புகழாமல் இருக்க முடியாது என்பதும், அதே சமயத்தில், அவரது இலட்சிய நாயர் குலப்பெண்ணாக இந்த சுபத்ரா இருக்க முடியாது என்கிற உண்மையும் உறுதிபடத் தெளிவாகின்றன. சுபத்ராவின் துணிவும், அறிவாற்றலும், நடத்தையும், மலையாளக் கற்பனை நவீனத்தின் மகத்தான சோகக் கதாநாயகியாக அவளை உயர்த்திவிட்டதற்கு, சி.வி. அவர்கள் எந்தவிதத்திலும் பொறுப்பு அல்ல. எனினும் இதைப்பற்றிய உண்மை எதுவும் தெரியாத அவரது நண்பர் என். ராமன் பிள்ளை சென்னையிலிருந்து, காரசாரமாக சி.வி. அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்:

'உங்கள் நாவலில், சுபத்ரா என்கிற கதாநாயகியை உருவாக்கி, அவளை, அற்புதமான அழகி எனவும், பெருந்தன்மையுள்ள வீராங்கனையாகவும், திறமைசாலியாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாத ராஜவிசுவாசியாகவும், மதிநுட்பமிக்கவளாகவும் வர்ணித்துள்ளீர்கள். மேலும், அவள் கதாநாயகி கோலத்திலேயே இறந்திருக்கிறாள். சுபத்ராவை, நீங்கள் பகட்டான, காமவேட்கை மிக்க ஒரு பெண்ணோடு ஒப்பிட்டு இழிவான நடத்தையுள்ள சிறுமியாகவும் குற்றமுள்ள மனைவியாகவும், பவளம் போன்ற அவளது இதழ்கள் ஆயிரக்கணக்கானவர்களின் முத்தங்களினால் அசுத்தப்பட்டவை எனவும் குறிப்பிட்டு அவளது கற்பின்மேல் நீங்கள் இவ்வாறு கைவைத்தால், மனம் பொறுக்காமல் நான் ஒரு பேயாக மாறிவிடுவேன் என, உங்களை எச்சரிக்கிறேன்.'

என். ராமன் பிள்ளை முகாந்திரம் இல்லாமல் ஆத்திரமும், பதட்டமும் கொண்டார் என்பதே உண்மை. கேவலமான நடவடிக்கைகள் கொண்ட ஊர் சுற்றி அல்ல அவள். அவளைப் புரிந்துகொள்வது எளிதல்ல எனினும், அவளது மனமும் செயல்பாடுகளும், பலவித இலக்குகளைக் கொண்டதாயிருந்தன. இதுதவிர, சி.வி. அவர்கள் சுபத்ராவின் தோற்றத்தில் தென்படும் எதிரிடை குணாதிசயங்களை விளக்கும்போது, கயிற்றின் மேல் சமநிலையுடன் நடக்கும் திறமையை நன்கு நிரூபித்திருக்கிறார். இதை அவரது பெருமைக்குச் சான்றாகக் கூறலாம். இவ்வாறு தனது படைப்புகளில் பலவித அதிர்ச்சிகளை வாசகர்களுக்கு அளிக்க நேரிடும்போது சி.வி. அவர்கள் முதிர்ந்த முழுமையான இலக்கியச் செறிவையும், கலைநயத்திறனையும் உணர்த்துவதில் சாதனையாளராகத் திகழ்கிறார்.

மலையாள விமரிசகரான எம். லீலாவதி, சுபத்ரா என்கிற கதாநாயகி பாத்திரம், ஸ்காட்டின் 'ஃப்ளோரா இன்வேவர்லி' (Flora in Waverly)யில் வரும் புளோராவை நினைவுபடுத்துவதாக உள்ளது எனக் குறிப்பிடுகிறார். சி.வி. அவர்கள், ஸ்காட்டின் கதாபாத்திரத்தை நகல் எடுக்க வேண்டிய அவசியமே இல்லை. அது சாத்தியமும் அல்ல. மேலும் சுபத்ராவின் இன்பக் கிளர்ச்சிமிக்க குண விசித்திரங்களுக்குக் காரணம் எதுவாயிருந்தாலும், புளோராவைவிட எல்லா வகையிலும் பலமடங்கு உயர்வானவள்; வித்தியாசமானவள் என்பதுடன் அவளுடைய பாச உணர்வுமிக்க இதயமும், குணங்களும், சுபத்ராவை சற்று உயர்த்திக் காட்டுகின்றன. தன்னுடைய சொந்த சிற்றப்பன்களால், பரிதாபகரமான முறையில் அவள், தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்ள நேரிட்ட அவலமும், மாளாத சோகமும், இன்றளவும் இந்த மலையாள நாவலில், உதிரத்தை உறைய வைக்கும் உச்சகட்ட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. சி.வி. அவர்களின் 'மார்த்தாண்ட வர்மா' ஒரு மகத்தான இலக்கிய வரவாகப் பாராட்டப்பெற்றது. இந்த நாவலை விமரிசனம் செய்து பாராட்டியவர்கள் அனைவரும், ஒருமித்த குரலில், 'இந்துலேகா' என்கிற நாவலைவிட மேம்பட்ட படைப்பு இது எனப் புகழ்ந்தனர். ஏனெனில், 'மார்த்தாண்ட வர்மா' வெளியாகும் வரையில், 'இந்துலேகா' மட்டுமே புகழ்பெற்ற அறிஞர்களான, கேரளவர்மா, குஞ்ஞுகுட்டன் தம்புரான் போன்றவர்களின் ஒருமித்த பாராட்டுதல்களைப் பெற்றிருந்தது. இந்த இடத்தில், மற்றொரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட வேண்டியுள்ளது. மார்த்தாண்ட வர்மா, சி.வி. அவர்களின் பிரசித்திமிக்க ஜனரஞ்சகமான நாவலே தவிர, அது, அவருடைய மகத்தான இலக்கியப் படைப்பாக மலரவில்லை. இதையடுத்து வெளிவந்த அவரது பிற நாவல்கள் கரடு முரடாக மிகக் கடினமாக அமைந்து, உடனடியாக படிப்பதை நிறுத்திக் கொள்ளத் தூண்டும் விதத்தில், சலிப்பூட்டுவதாயிருந்தன. 'மார்த்தாண்ட வர்மா'வில் இடம் பெற்றுள்ள பிழைகள் வெளிப்படையாகத் தெரியக் கூடியவையாகும். இந்த நாவலில் இடம் பெற்றுள்ள இதயத்தைப் பிழியும் உணர்ச்சிகரமான நிகழ்வுகள், கதாபாத்திரங்களுக்கு பேசுவதற்கோ, காதல் புரிவதற்கோகூட நேரமில்லாததை உணர்த்துவதுபோல், அவசரக்கோலத்தில் அள்ளித் தெளித்தது போல் அமைந்திருந்தன. நிகழ்ச்சிகள் யாவும் ஒன்றை மற்றொன்று தொடர்வதைப் போல் புனையப்பட்டிருந்தன. மென்மையான சிறப்புமிக்க பகுதிகள்

மட்டுமே நம்முடைய நினைவில் பதிகின்றன. குறிப்பாக, நாவலில் வரும் துணைக் கதாபாத்திரங்களான போர்க்கருவிகளைப் பாதுகாக்கும் அலுவலரான சங்கு ஆசான் அல்லது சாதுரியமிக்க வில்லன் சுந்தரம் ஆகியோர் மூலம், நமக்கு வாழ்க்கையின் கூர்மையான அம்சங்களை உணர்வது எளிதாகிறது. ஆனால், மார்த்தாண்ட வர்மாவில் சி.வி. அவர்கள், 'மாங்கோயில்' அரண்மனை எரிக்கப்பட்டதைக் குறிப்பிடும் (அத்தியாயம் ஆறு) போதும், தனது சொந்தச் சிற்றப்பன்களால் சுபத்ரா இரக்கமற்ற முறையில் கொல்லப்படுவதை வர்ணிக்கும்போதும், (அத்தியாயம் இருபத்தாறு) சி.வி. அவர்கள், படைப்பாற்றலில், ஸ்காட் அவர்களைப் போலவே, மகத்தான சிகரங்களைத் தொட்டு விடுவதைத் தெளிவாக உணர முடிகிறது.

4

இடைப்பட்ட ஆண்டுகள்

'மார்த்தாண்ட வர்மா' வெளியானபோது சி.வி. ராமன் பிள்ளைக்கு 33 வயதாகியிருந்தது. இந்த நாவலின் மூலம் அவரது பெயர், பத்திரிகைகளின் தலையங்கத்தில் இடம்பெற்று, ஒரே இரவில், இலக்கிய ஜாம்பவானாகப் பெரும்புகழ் பெற்றார். இதற்கு முன்பும் பத்திரிகைகள் அவர் பெருமையைப் பறைசாற்றியதுண்டு. ஆனால், அது அவரது பத்திரிகைத்துறைப் பணிகள் மற்றும் சமுதாயச் சீரமைப்புத் தொண்டு ஆகியவற்றிற்காகச் சூட்டப்பட்ட புகழாரமாகும். மலையாளி சங்கத்தில் சி.வி. ராமன் பிள்ளையின் செல்வாக்கு அதிகரித்து வருவதைக் குறித்து,திவான் ராமராவ் (1887-1892) ஏற்கெனவே கவலையும் வெறுப்பும் கொண்டிருந்தார். சி.வி.யின் தீவிரமான கட்டுரைகள் மேலும் அவரை நிதானமிழக்கச் செய்தன. இதன் விளைவாக, இனி அரசுத்துறை அதிகாரிகள் எவரும் பத்திரிகைத்துறை தொடர்பான பணிகளில் ஈடுபடக்கூடாது எனத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்தார். அரசு ஊழியர்கள் அனைவருக்குமே பொருந்தும் பொதுவான உத்தரவு இது என்றாலும், சி.வி. ராமன் பிள்ளையைக் குறிவைத்து, அவரை அடக்கிச் செயலற்றவராக மாற்றுவதற்காகத் தான் திவான் ராமராவ், இந்த அஸ்திரத்தைப் பிரயோகித்துள்ளார் என்றே அனைவராலும் கருதப்பட்டது. எனினும், உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியும் இலட்சியக் கனலை, திவானின்

தடையுத்தரவு என்கிற நீரால் அணைக்க முடியவில்லை. சி.வி. அவர்கள், பத்திரிகை பணியை வெவ்வேறு புனைபெயர்களில் தொடர்ந்தார். இதன்மூலம் சமஸ்தானத்தின் முக்கியப் பதவிகளை திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மக்களுக்கே அளிக்கப்பட வேண்டும் என்கிற தார்மீகப் போராட்டம் மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியது. இறுதியில் சி.வி. ராமன் பிள்ளையின் போராட்டம் வெற்றி பெற்று, அவரது குறிக்கோள் நிறைவேறியது. மஹாராஜாவினால் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பிராமணரான சங்கரசுப்பையர் (1892-1898) என்பவர், திருவிதாங்கூர் திவானாக நியமிக்கப்பட்டார். திவான் பதவியில் இருந்தவர்களை இவருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவர் சிறந்த அறிவாளியாகவும், நேர்மையானவராகவும் புலப்பட்டார். திவான் சங்கர சுப்பையருக்கு எவர் மீதும் தனிப்பட்ட காழ்ப்பு உணர்வோ, சினமோ இருந்ததில்லை என்பதினால் புத்திசாலி இளைஞர்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டினார். மற்றும் அவரது பி.ஏ. வட்டம் சார்ந்த நண்பர்கள் அணியினருக்கும் மனநிறைவு ஏற்படும் வகையில், திவான் சங்கரசுப்பையர் அவர்கள் பி. தாணுப் பிள்ளை (1854-1902) என்கிற மூத்த கல்வியாளருக்கு அழைப்பு விடுத்து அவரை ஹுசூர் திவான் பேஷ்காரர் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். திரு. தாணுப் பிள்ளை அவர்கள், சி.வி. ராமன் பிள்ளையின் ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் விளங்கியவர்.

திவான் சங்கரசுப்பையர், திரு. தாணுப் பிள்ளை அவர்களுக்கு எழுதியிருந்த கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். 'இந்தப்பதவியை நீங்கள் ஏற்றுக்கொள்வதின் மூலம், உங்கள் நிலைமையும், செயல்களும் மேலும் வலிமை பெறும் சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும். எந்தவிதத்திலும் உங்களுக்குத் தீமையோ பாதிப்போ ஏற்படாது என்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன்.'

திரு. தாணுப் பிள்ளை 1894ல் இந்தப் பதவியை ஏற்றார். இதற்கு அடுத்த ஆண்டில்(1895) அரசாங்கத்தின் தலைமைச் செயலாளராக வும் பதவி உயர்வு பெற்றார். மலையாளி சங்கத்தினருக்கு இந்த நிகழ்ச்சி எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. மிக விரைவிலேயோ அல்லது சிறிது காலத்திற்குப் பிறகோ அவர் திருவிதாங்கூர் சமஸ் தானத்தின் திவான் பதவியை அலங்கரிப்பார் என்கிற எதிர்பார்ப்பை யும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. இந்த நிகழ்ச்சிகள் சி.வி.

அவர்களுக்கும் அவரது நண்பர்களுக்கும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளித்தன. சி.வி.யும், தாணுப் பிள்ளையும் வெகு நெருக்கமாகப் பழகி,எவ்விதத் தடையுமில்லாமல் கருத்துப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டார்கள். இவ்விருவரும் நிர்வகித்து வரும் அரசுப் பதவிகள், மலைக்கும் மடுவிற்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டிருந்தாலும், அது, அவர்களுடைய நெருக்கமான நட்பையோ, சுதந்திரமான மனப்போக்கையோ பாதிக்கவில்லை. தன்னால் மேற்கொள்ளப் பட்டிருக்கும் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற எழுச்சியில், எந்நேரமும் பரபரத்துக் கொண்டிருக்கும் அவரது அக்கறையும் சுறுசுறுப்புக் குணங்களுமே சி.வி. அவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளன என மக்கள் கருதத் தொடங்கினார்கள். இது பெருமளவு உண்மையே. சமஸ்தானத்தின் உயர் அதிகாரிகளின் நட்பை சி.வி. அவர்கள் பெற்றிருந்தபோதிலும், அவர் தனது அலுவலகத்திற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தார். அத்துடன் எதற்காகவும் சோர்வோ, கவலையோ அடையவில்லை. அவர் தனது பதவியின் அந்தஸ்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'அலுவலகத்திலுள்ள கடைநிலை ஊழியரைவிட சற்று மேலான பதவியில் நான் இருக்கிறேன்' என்று கிண்டலும், கேலியுமாக வர்ணிப்பார். திருவனந்தபுரம் உயர்நீதி மன்றத்தில் அவர் இருபதாண்டுகள் கடுமையாக உழைத்தார். குறிப்பாக, நீதிமன்றத்திற்கு வரும் தாவாக்களை விதிமுறைகளின்படி வரிசைப்படுத்தினார். இதன்மூலம் மாண்புமிகு நீதிபதிகளுக்கு உதவும் வகையில், அவர் சிறப்பாகச் செயலாற்றினார். இது தவிர நீதிமன்றத் தீர்ப்புக்களின் மொழிபெயர்ப்புகள் தேவையென்று கேட்கப்படும்போது அவற்றை மொழியாக்கம் செய்யும் பொறுப்பையும் சி.வி. அவர்கள் மேற்கொண்டார். ஆயாசத்தையும் அலுப்பையும் ஏற்படுத்தும் இந்த அலுவலகப்பணிகள், அவரது பகல் நேரம் முழுமையையும் அத்துடன் இரவின் சில மணி நேரங்களையும் விழுங்கியது. சி.வி. அவர்களின் திறமையும் பொறுப்புணர்ச்சியும், மாண்புமிகு நீதிபதிகளுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தன என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், இவ்வாறான ஒரு முக்கியப் பொறுப்பில் சி.வி. அவர்கள் அமர்த்தப்பட்டிருப்பது சமஸ்தானத்தின் மகாராஜாவுக்குக் கசந்தது. மகாராஜாவுக்கும் அவரது திவான்களுக்கும் சி.வி. ராமன் பிள்ளை அவர்கள் இலட்சிய மனப்போக்கு கொண்டவர் என்கிற உண்மையும், அவர் அமைதியாக அடங்கிக் கிடக்கும் சுபாவம் கொண்டவர் அல்ல என்பதும் நன்கு தெரியும். எனினும், அவரை

ஒடுக்கிட முடியும் என நினைத்தார்கள். இந்தச் சமயத்தில் நாயர் சமூகத்தைச் சேர்ந்த கனவானாகிய டி. சங்கரன்தம்பி (1857-1930) என்பவர், காலச் சுழற்சியில் மன்னரின் நெருங்கிய அபிமானத்திற்கு உரியவராகவும், அவரது நெருங்கிய உறவினராகவும் உயர்ந்த நிலையில் திகழ்ந்தார். மன்னரும், சங்கரன்தம்பியும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூத்த, இளைய சகோதரிகளை மணந்து கொண்டதால், சமஸ்தானத்தில் சங்கரன் தம்பியின் நிலை, மதிப்புமிக்கதாகவும் அசைக்க முடியாததாகவும் இருந்தது. சங்கரன்தம்பி அவர்களைப் பற்றிப் பல கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஆனால், ஒன்று மட்டும் உறுதி. அவர் மிகுந்த அறிவு நுட்பமிக்க மேதாவி. எதையும் எளிதில் ஊகித்தறிந்து கொள்வதில் திறமைசாலியாகவுமிருந்தார். சமஸ்தானத்தின் உயர் அதிகாரிகள், சிறிய அதிகாரிகள் உட்பட அனைவரும் சங்கரன்தம்பி அவர்களிடம் மிகவும் பணிவுடன் நடந்து கொண்டார்கள். ஆனால், சி.வி. ராமன் பிள்ளை அடங்கலாக ஒரு சிலர் மட்டுமே சங்கரன் தம்பியின் ஆடம்பரங்களை பொருட்படுத்தாமலும், அலட்டிக் கொள்ளாமலும் இருந்து வந்தார்கள். உண்மையில் சங்கரன் தம்பிக்கு, சி.வி. அவர்களிடம் மனத்தளவில் பெருமதிப்பு நிலவி வந்தது. இது அவரது எச்சரிக்கை மிகுந்த நட்புணர்வையும், அன்பான ஆதரவையும் பிரதிபலிக்கும் கலவையாகயிருந்தது. இதற்குப் பிரதிபலனாக சி.வி. ராமன் பிள்ளையும், சங்கரன்தம்பியை வெளிப்படையாக விமரிசிப்பதை நிறுத்திக் கொண்டார். இதனால், சங்கரன்தம்பியின் நடவடிக்கைகள் அனைத்தையும், சி.வி. அவர்கள் ஒப்புக்கொண்டார் என கூற முடியாது. சங்கரன்தம்பி குறைபாடுள்ள குணங்களைக் கொண்டவர் என்பது அவருக்கு நன்கு தெரியும். அதே சமயம் சங்கரன் தம்பிக்கு உள்ள செல்வாக்கு, நாயர் சமூகத்திற்கு மிக உதவியாகயிருக்கும் என்றும் கணக்கிட்டார். தன்னுடைய நண்பர்களின் கோரிக்கைகளையும் விருப்பங்களையும் சி.வி. அவர்கள் மிகச் சுலபமாக உடனுக்குடன் நிறைவேற்றித் தந்தாலும், தனக்காக அவர் எதையும் கோரியதுமில்லை; நாடியது மில்லை. சி.வி. ராமன் பிள்ளையின் மிகப் பெரிய இலட்சிய வேட்கையாகவும், பிரதான இலக்காகவும் நாயர் சமூகத்தின் ஒட்டு மொத்த விருப்பமாகவும் அந்தக்கால கட்டத்தில் நிலவிய எண்ணம், தங்களுடைய தலைநாயகனாக, பி. தாணுப் பிள்ளை அவர்கள் சமஸ் தானத்தின் திவான் பதவியில் அமர்வதைப் பார்த்து மகிழ வேண்டும் என்பதாகவே இருந்தது. தனது நாற்பத்தியோராவது வயதில்,

தலைமைச் செயலாளர் பொறுப்பை ஏற்றிருந்த தாணுப் பிள்ளை அவர்களும் கால ஓட்டத்தின் அடிப்படையில் இயற்கையாகவே, தனது புதவியை எதிர்நோக்கியிருந்தார். ஆனால், விதி வேறு விதமாகச் செயல்பட்டது. 1902ம் ஆண்டில் அவர் தனது நாற்பத்தி யெட்டாவது வயதில் காலமானார். இதனால் அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த அவரது பிரகாசமான எதிர்காலமும், வாழ்க்கையும் துரதிருஷ்டவசமாக கனவாகிப் போனது.

சி.வி. ராமன் பிள்ளை மற்றும் வி. தாணுப் பிள்ளை ஆகியோருக்கிடையே நிலவி வந்த நட்பு–பரந்த மனப்பான்மையும், பெருந்தன்மையும் மிகுந்த குருவிற்கும் விளையாட்டுக் குணமும் தீர்க்கதரிசனப் பார்வையும் கொண்ட ஒரு சீடனுக்கும் இடையேயான நட்புறவைப் போல் அமைந்திருந்தது. ஒருவர் நலனில் மற்றவர் பெரிதும் ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர்களாக விளங்கினார்கள். சமகால இளைஞர்களில் சி.வி. ராமன் பிள்ளை மாத்திரம் தாணுப் பிள்ளை அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பையும் உரிமையையும் பெற்றிருந்தார். தாணுப் பிள்ளையின் புத்திக்கூர்மையிலும், வழிகாட்டும் திறனிலும், சி.வி. அவர்கள் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார். சி.வி. அவர்களைத் தாணுப் பிள்ளை ஆதரித்து வந்ததுடன், அவரது செயல்களுக்கு ஊக்கமும் அளித்து வந்தார். இவ்விருவரும் தொலைதூரத்தில் பிரிந்து இருக்க வேண்டிய காலகட்டங்களில் கடிதங்கள் மூலம் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். இந்தக் கடிதங்கள் அனைத்தும் கவிதை நயமிக்க, நேர்த்தியான, ஆங்கில உரைநடைக் கடித இலக்கியத்திற்கு உதாரணமாக விளங்கின. 1883–ம் ஆண்டில் சி.வி. ராமன் பிள்ளைக்கு ஆறுதல்கூறி தாணுப் பிள்ளை அவர்கள் எழுதியிருந்த ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ‘அன்பு நண்பா, உங்கள் மன நிலை அர்த்தமற்றது. இந்த நிலையை வளரவிடாதீர்கள். உங்களுடைய வாழ்க்கை, மற்றவர்களுக்கு அமைந்திருப்பதுபோல் சிறப்பாகவும், திடமாகவும் உள்ளது என்பதை உறுதியாக நம்புங்கள். ஆனால், நீங்கள் சற்றுக் கூடுதலாக உணர்ச்சி வயப்படும் இயல்புள்ளவராக இருக்கிறீர்கள். இது எல்லைக்குள் கட்டுப்பட்டு இருக்கும்வரை, தீங்கு எதுவும் நிகழாது. எந்த விஷயத்திலும், கருத்துகளுக்கு அல்ல; உண்மைகளுக்கு முதலிடம் கொடுப்பவராகச் செயல்படுங்கள். தானியச் சேமிப்பு அறைகளும், பணப்பெட்டிகளும் நிறைந்திராவிடிலும் உங்கள் மனம் மாத்திரம், விதவிதமான சிந்தனைகளினால் நிரம்பி வழிகிறது. எந்த இடத்தில்

மனவளம் நிறைந்துள்ளதோ, அங்கு வறுமை என்பதே தலைகாட்டாது. வாரத்திற்கு ஒருமுறையாவது எனக்குக் கடிதம் எழுதுங்கள். தத்துவார்த்தமான கடிதங்களை எழுதாமல் உண்மைகள் பொதிந்த கடிதங்களை எழுதுங்கள். நான் பெரிதும் விரும்புவது இனிமையான, உற்சாகம் தரும் கடிதங்களையே தவிர, அழுகுரல் ஒலிக்கும் சோகமான முட்டாள்தனமிக்க எரிச்சலூட்டும் கடிதங்களை அல்ல என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும்.'

மற்றவர்களின் கருத்துக்களிலும் கண்களிலும் ராமன் பிள்ளை, தாணுப் பிள்ளை அவர்களிடம் நெருக்கமாக இருந்த நிலவரமே முக்கியமாகத் தென்பட்டது. ஆனால், உயர்நீதி மன்றத்தில் அவரது பணிச்சுமையும், கடின உழைப்பு நிலவரமும் இன்னமும் நீடித்து வந்தது. தனது ஒதுங்கி நடக்கும் இயல்பின் விளைவு இது என அவர் அமைதியாக இருந்தார். சமுதாயத்தின் மதிப்பும் இளைஞர்களின் அபிமானமும், தன்மீது அழுந்தப் பதிந்திருப்பதை ராமன் பிள்ளை நன்கு அறிந்திருந்தார். அதுவே அவருக்குப் போதுமானதாக இருந்தது. ராமன் பிள்ளை அவர்களின் திறமையையும் நற்குணங்களையும் மகாராஜாவும் நன்கு உணர்ந்திருந்தார். ஆயினும், சி.வி. அவர்களுக்கு எவ்விதமான ஊக்கத்தையும் அவர் அளிக்கவில்லை. காரணம், சமஸ்தானத்தின் நிர்வாகம் குறித்து, சி.வி. அவர்கள் எவ்விதப் பசப்பலும் தயைதாட்சண்யமும் இன்றி விமரிசிக்கக்கூடிய குணம் படைத்தவர் என்பதை மகாராஜா நன்கு அறிந்திருந்தார். ஏதாவது தவறாக நடைபெற்றுக் கொண்டிருந்தால், உடனே ஆத்திரமூட்டும் கட்டுரைகளின் மூலம் அதைக் கண்டனம் செய்ய அவர் தயங்கியதே இல்லை. இதற்காகச் சில சமயங்களில் ஒரு புதிய பத்திரிகையை ஆரம்பிப்பதும், சில வாரங்களுக்கு அதில் தனது தீவிர விமரிசனங்களைப் பரவலாக வெளியிடுவதும், பின்னர் அந்தப் பத்திரிகையை நிறுத்திவிடுவதும் சி.வி.யின் வழக்கமாயிருந்தது. ஆனால், இவை அனைத்தையும் அவர் மறைமுகமாகவே செய்து வந்தார்.

சி.வி. அவர்களின் மனைவி பாகீரதி அம்மா, ஒரு வயது கைக்குழந்தை அடங்கலாக ஆறு குழந்தைகளை விட்டுவிட்டு 1904ல் இறந்து போனார். அவரது பொங்கி எழும் உணர்ச்சி சுபாவம், திடீரென, மங்கி மறைந்தது. ஆனால், அவருக்கு பெரிதும் அமைதி தரும் வகையில், அநாதரவாகிப் போன அவரது ஆறு குழந்தைகளையும் அரவணைத்துக் காப்பாற்றுவதற்கு, அவரது

மனைவியின் மூத்த சகோதரி முன்வந்தார். இந்த அம்மையார், குழந்தை பாக்கியமற்ற ஒரு விதவை. சிறந்த அழகி. தகுதிகளும், வசதிகளும் நிறைந்தவள். புகழ்வாய்ந்த ஓவியக் கலைஞரான ராஜா ரவிவர்மாவின் சகோதரரான, ராஜராஜ வர்மாவைத் திருமணம் செய்து கொண்டவர். தனது இல்லற வாழ்வில், நிறைவான சுகபோகங்களை அனுபவித்தவர். ஆயினும், இப்போது, அவர் தனது இளைய சகோதரியின் ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்து வளர்க்கும் பொறுப்பை விருப்பமுடன் ஏற்றார். சில ஆரம்பத் தடங்கல்களுக்குப் பிறகு, அவர், குடும்பத் தலைவி பொறுப்பு அடங்கலாக, குடும்பத்தின் முழுப் பொறுப்புகளையும் நிர்வகிக்கலானார். இது, சி.வி. அவர்களுக்குப் பெரிய நிவாரணமாக அமைந்ததுடன், இவ்விருவரும் லட்சிய ஜோடியாகவும் விளங்கினார்கள். நாளடைவில், ஜானகி அம்மா, திருவனந்தபுரத்திலுள்ள பிரமுகர்கள் வட்டாரத்தைச் சேர்ந்த பெண்கள் குழுவினில் தனித்தன்மை மிக்க துருவநட்சத்திரமாக மின்னினார். மேலும் ஜானகி அம்மாவை இந்தக் குழுவினர், தங்கள் தலைவியாகக் கருதி பெரும் மதிப்புத் தந்தார்கள். தன்னுடைய சிறப்பான இலக்கிய, இசைஞானத்தினால், சி.வி. அவர்களின் படைப்பிலக்கியப் பணிகளுக்கு ஜானகி அம்மா உத்வேகமளிக்கும் தூண்டுதலாக விளங்கினார். அதே ஆண்டில் சி.வி. அவர்கள், அரசு அச்சகத்தின் தலைமை நிர்வாகியாக நியமனம் செய்யப்பட்டார். இதில் ஊதிய உயர்வு அதிகமில்லையெனினும் சுதந்திரமாகச் செயல்படும் வாய்ப்புகள் அதிகம் என்பதினால், இந்தப் பதவி குறித்து சி.வி. அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்.

இலக்கிய வானில் கே. ராமகிருஷ்ண பிள்ளை(1878-1916) என்கிற ஒரு புதிய நட்சத்திரம் பிரகாசிக்கத் தொடங்கியிருந்தது. சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர், ஒரு போர்வீரனின் செயல் வேகத்துடன் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டார். அதிகார வர்க்கத்தினரைப் பற்றியும், தனது சொந்த கஷ்டநஷ்டங்களைப் பற்றியும் சிறிதும் கவலைப்படாமல், அரசாங்கத்தைத் தாக்கி எழுதுவதில் ஈடுபட்டார். இவருடைய கடுமையான விமரிசனத் தாக்குதலிலிருந்து மன்னர் உட்பட எவருமே தப்ப முடியவில்லை. ஆனால்; மன்னரின் நெருங்கிய உறவினரும், செல்வாக்கு மிக்கவருமான டி. சங்கரன்தம்பி,மற்றும் திவான் ராஜகோபாலாச்சாரி (1907 - 1914)ஆகிய இருவரை மட்டும், அவரது விமரிசனக் கணைகள் தீண்டவில்லை. ராமகிருஷ்ண பிள்ளை, சி.வி. அவர்களுக்கு இருபது வயது

இளையவர் என்பதுடன், அந்த காலகட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களைப் போலவே இருவரும் சி.வி. அவர்களிடம் மிகுந்த பற்றுதல் கொண்டவராகயிருந்தார். நாளடைவில், தகுந்த காரணங்கள் எதுவுமில்லாமல் இந்த பற்றுதலும், நேசமும் ஆழ்ந்த கசப்பாக மாறத் தொடங்கியது. இதன் விளைவாக, மற்றவர்களைப் போலவே, சி.வி. அவர்களும், ராமகிருஷ்ணப் பிள்ளையின் கடும் தாக்குதலுக்கு உள்ளானார். உண்மையில் சி.வி. அவர்களின் குண நலன்கள் குற்றம் சொல்ல முடியாதவை. எனினும், ராமகிருஷ்ண பிள்ளை சொந்த விருப்பு-வெறுப்புகளினால் பாதிக்கப்பட்டு, அவர் மீது சேற்றை அள்ளி வீசுவதற்கு முனைந்திருக்கலாம். மக்கள் சமுதாயத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அவரது நூல்களின் மீதும், வணக்கத்திற்குரிய அவரது உண்மையான அர்ப்பணிப்புத் தன்மை மீதும், அவர் கையாண்ட, நேரான தரமான மொழியின் மீதும் ராமகிருஷ்ண பிள்ளைக்கு ஏற்பட்டிருந்த ஆதங்கத்தின் விளைவாக இவற்றின் மீது நேரடியான தாக்குதல் களை மேற்கொள்வதற்காக ராமகிருஷ்ண பிள்ளை, சி.வி. அவர்களைத் தனது இலக்காக் கொண்டிருக்கலாம் என்றே கருத வேண்டியுள்ளது. இன்னும், இதைப் போன்று வேறு பல காரணங் களும் இருக்கலாம். ராமன் பிள்ளையின் நாவல்கள் குழப்பமும், ஆத்திரமூட்டும் சொற்களும் நிறைந்தது என விதண்டாவாதங்கள் செய்து, முத்திரை குத்தினார். ஒருவேளை, இதற்கெல்லாம் பின்னணியாக, சி.வி அவர்கள் சங்கரன்தம்பியுடன் கொண்டிருக்கும் நெருக்கமான நட்பும் காரணமாயிருக்கலாம். ஏனெனில், சங்கரன்தம்பியின் பெயரைக் கேட்டாலே ராமகிருஷ்ண பிள்ளைக்கு எரிச்சல் வரும். அந்த அளவிற்கு அவர்மீது ராமகிருஷ்ண பிள்ளை தனது உள்ளத்தில் பகைமை கொண்டிருந்தார்.

நிகழ்ச்சிகளின் போக்கு சி.வி. அவர்களைப் பெரிதும் வேதனைக்கு ஆளாக்கியது. ஆனால், எவர் மீதும் அவர் வெறுப்புக் கொள்ள முனையவில்லை. ராமகிருஷ்ண பிள்ளையின் காழ்ப்புணர்ச்சிகளுக்கும் காரசாரமான வாதங்களுக்கும் சி.வி. அவர்களினால் ஈடு கொடுக்க முடியும். அந்த அளவிற்கு அவரது திறமை அபாரமானது; புகழ்மிக்கது. எனினும், இந்த விஷயத்தை அவர் உளவியல் ரீதியாக அணுகினார். 'பதட்டமும், குழப்பமும், அச்சமும் அதிகமாகி, உள்ளத்தின் கொந்தளிப்பை அடக்க முடியாமல் போய்விடும்போது, வெளிப்படும் சின்னத்தன்மான சீற்றங்கள்-செய்கைகள்!' இவை என ராமகிருஷ்ண பிள்ளையின்

நடவடிக்கைகளை சி.வி. அவர்கள் அலட்சியப்படுத்தினார். ஆனால், ராமகிருஷ்ண பிள்ளை எல்லை மீறி, கேலிக்கூத்தான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். சி.வி. அவர்களின் புகழ்பெற்ற நாவல்களில் ஒன்றான 'குறுப்பில்லா களரி' (1909) என்கிற நூலின் தீங்கற்ற அட்டைப் படத்தைப் பற்றி, தனக்குத் தோன்றிய விதத்தில், தாறுமாறாக விமரிச்சிக்கத் துவங்கிய அவரது போக்கை இதற்கு ஓர் உதாரணமாகச் சொல்லலாம். சில ஆண்டுகளுக்குப் பிறகு, எல்லோருமே, தர்மராஜாவைப் பற்றிக் காரசாரமாக பேசிக் கொண்டிருக்கும்போது, ராமகிருஷ்ண பிள்ளை மட்டும், மிகுந்த கோபத்துடன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறினார்.

இறுதியில் ராமகிருஷ்ண பிள்ளை 1910ஆம் ஆண்டு, திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதுபற்றி, சி.வி. அவர்கள் மிகுந்த வருத்தமடைந்ததுடன் கடுமையான இந்த நடவடிக்கை தவிர்க்கப்பட்டிருக்கலாம் எனக் கருதினார். எனினும் இதற்காகப் பரிகாரம் மேற்கொள்ள இயலாத வாறு காலம் கடந்து விட்டிருந்தது. திவான் ராஜகோபாலாச்சாரியின் சிறப்பான நிர்வாகத் திறனையும், நடவடிக்கைகளையும், சகட்டு மேனிக்கு, ராமகிருஷ்ண பிள்ளை, இடைவிடாமல் தாக்கிக் கொண்டிருந்தார். இதன் விளைவாக, அவர் நாடுகடத்தல் தண்டனைக்கு உள்ளாகி, தகுந்த படிப் பிணைகளையும் பெற்றார். எனினும் திவானின் இந்தக் கடும் நடவடிக்கை, பலரிடையே வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், ஒரு சிலரால் மட்டுமே தங்களுடைய வெறுப்புணர்ச்சியைத் துணிச்சலாக வெளிப்படுத்த முடிந்தது. திவான் ராஜகோபாலாச்சாரி அவர்கள், தார்மீகப் பண்புகள் மற்றும் நன்னடத்தை மீது கொண்டிருந்த உறுதியான பிடிப்பும், அக்கறையும் சி.வி. அவர்களின் கருத்தைக் கவர்ந்தாலும், திவானிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருந்தார். திவான் அவர்களும், பதிலுக்கு, சி.வி. அவர்களிடம் ஆழ்ந்த வினயத்துடன் நட்பு பாராட்டினார். எனினும் இவ்வாறான பாசாங்கும், நடிப்பும் கொண்ட நட்பு இருவருக்குமிடையே நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. சி.வி. அவர்கள், திவான் மீது கொண்டிருந்த வெறுப்பை மக்கள் மத்தியில் பரப்ப ஆரம்பித்தார். இதற்குப் பழிவாங்கும் நேரத்தை திவானும் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். இறுதியில், இவ்விருவருக்கு மிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தின் விளைவாக திவான் அவர்கள், சி.வி. அவர்களை விடுப்பில் செல்லுமாறு பணித்தார்.

1912ல் இந்த சம்பவம் நிகழ்ந்தது. திவானின் உத்தரவு அவரைப் பெரிதும் சீற்றமடையச் செய்தது. சி.வி. அவர்கள் கட்டுக் கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்புடன் வீட்டிற்குத் திரும்பி வந்தார். உடனடியாக, ராஜிநாமா கடிதத்தை எழுதி திவானுக்கு அனுப்பினார். சி.வி.யின் விரோதம் ஆபத்தான பின் விளைவுகளைத் தரக்கூடியது என்பதை திவான் நன்கு அறிவார். எனவே, தனது அந்தரங்கச் செயலாளரை அனுப்பி அவரைச் சமாதானம் செய்து, சரிக்கட்டும் முயற்சிகளில் ஈடுபட்டார். சி.வி. அவர்கள் விட்டுக்கொடுத்து, சமரசம் செய்து கொள்ளும் மனநிலையில் இல்லை. எனினும், மன அமைதி அடைந்து பதவியிலிருந்து நிரந்தர ஓய்வு பெறுவதற்கு முன், விடுப்பில் செல்வதற்கு இசைந்தார்.

சி.வி. அவர்கள் அரசுப் பணியில் இருபத்தேழு ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். தனது அரசு ஊழியம் பற்றி அவர் குறிப்பிடுகையில் 'தொண்டுச் சிறை'யில் அடைபட்டுக் கிடந்ததாக, வர்ணித்துக் கொண்டார். பணி ஓய்வுக்குப்பின், சி.வி. அவர்கள் படைப்பிலக்கியத் துறையில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். 'தர்மராஜா' என்கிற நவீனத்தை 1913ஆம் ஆண்டிலும், 'பிரேமாமிர்தம்' என்கிற படைப்பை இதற்கு அடுத்த ஆண்டிலும் (1914) எழுதி முடித்தார். இவற்றை அடுத்து ஈடுஇணையற்ற மிகப் பெரிய அளவிலான, 'ராமராஜபகதூர்' என்கிற இலக்கியப் படைப்பை ஐந்தாண்டு காலத்தில் உருவாக்கி, இரண்டு பகுதிகளாக முறையே 1918, 1919ஆம் ஆண்டில், சி.வி. வெளியிட்டார்.

5
இறுதி ஆண்டுகள் (1912-1922)

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு சி.வி. அவர்களின் வாழ்க்கை சாதனையும், புகழும் நிறைந்ததாக அமைந்தது. அவரது புகழ் படிப்படியாக உயர்ந்து கவர்ச்சி மிக்கதாயிற்று. மலபாரின் புகழ்மிக்க வழக்கறிஞரான எம். கிருஷ்ணன் நாயரின் மீது, திருவிதாங்கூர் மகாராஜாவின் கவனம் பதிந்ததற்கு, சி.வி. அவர்களின் செல்வாக்கும், முயற்சிகளுமே காரணமாயிருந்தது. உழைப்புத் திறனும், நேர்மையும், உண்மையும் மிக்கவரான கிருஷ்ணன் நாயர் வழக்கறிஞர் தொழிலில் பிரசித்தி பெற்றிருந்தார். திருவிதாங்கூரிலுள்ள நாயர் சமூகத் தலைவர்கள் மத்தியில், தனது உயர் குணங்களினால் கனவான்கள் வரிசையில் இடம் பெற்றார். சங்கரன்தம்பியை வசீகரித்து, அவரை இணங்கச் செய்து, வழக்கறிஞர் கிருஷ்ணன் நாயருக்கு திருவிதாங்கூர் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவி அளிக்கச் செய்து, (1910) அவரை திருவனந்தபுரத்திற்கு அழைத்துக் கொண்டார் சி.வி. அவர்கள். கிருஷ்ணன் நாயரின் குணங்களும் நடைமுறைகளும் மகாராஜாவிற்கு மிகுந்த மனநிறைவைத் தந்ததால், இதற்கு அடுத்த நான்காண்டுகளில், கிருஷ்ணன் நாயரை, சமஸ்தானத்தின் திவான் பதவி (1914)யில் நியமித்து அவரது அதிகார அந்தஸ்து நிலையை

மேலும் உயர்த்தினார். இத்தகைய சிறப்புகள் துரிதகதியில், தனக்குக் கிடைக்கக் காரணமாயிருந்த சி.வி. அவர்களுக்கு கிருஷ்ணன் நாயர், தன்னுடைய மனங்கனிந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். சி.வி. அவர்களுக்கும் கிருஷ்ணன் நாயர் அவர்களுக்குமிடையேயான நட்புறவு வேகமாக வளர்ந்தது. தன்னுடைய புதினங்களை, திவான் கிருஷ்ணன் நாயர் படித்து ரசிக்கிறார் என்கிற விவரம் தெரிய வந்தபோது, சி.வி. அவர்கள் பெரிதும் மனம் குதூகலித்தார். திவான்பதவியில், கிருஷ்ணன் நாயருக்கு முன்பிருந்தவர்கள் அனைவரிடமும் மலையாள மொழி என்பது முற்றிலும் பிரயோஜன மில்லாத சாரமற்ற மொழி என்கிற இளக்காரமான நினைப்பே ஓங்கியிருந்தது. மலையாளப் படைப்பிலக்கியங்களில் திவான் கிருஷ்ணன் நாயர் கொண்டிருந்த உயர்ந்த அபிப்பிராயம் சி.வி. அவர்களைப் பெரிதும் உவகையும், பெருமிதமும் அடையச் செய்தது. எனவே, தனது நன்றியறிதலைப் புலப்படுத்தும் விதத்தில் சி.வி. அவர்கள் 'பிரேமாமிர்தம்' என்கிற தன்னுடைய சமூக நாவலை கிருஷ்ணன் நாயருக்கு (1914-ல்) காணிக்கையாக்கி மகிழ்ந்தார். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பொதுமக்களால், 1918ம் ஆண்டில் சி.வி. அவர்களின் அறுபதாம் ஆண்டு பிறந்ததின 'மணிவிழா' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழா, சி.வி. அவர்களிடத்தில், தங்களை அறியாமலேயே மக்கள் கொண்டிருந்த அளவற்ற மரியாதையையும், அவரைத் தங்களுடைய மாபெரும் தலைவராக ஏற்று வழிபட்டு வந்த உணர்வையும் பிரதிபலிக்கும் வகையில், மகத்தான விழாவாக அமைந்திருந்தது. மகாராஜா, சி.வி. அவர்களை, 'வீரசிருங்களா' என்கிற விருதை அளித்துக் கௌரவித்தார். புகழ்மிக்க கவிஞர்களான, உள்ளூர் பரமேஸ்வர ஐயரும், குமாரன் ஆசானும் சி.வி. அவர்களின் சிறப்புகளைப் பாராட்டும் இலக்கிய மணமும், நயமும் கொண்ட, தங்களுடைய கவிதை மாலைகளை அவருக்குச் சூட்டிப் பெருமைப் படுத்தினார்கள். இந்த அரிய கவிதை மாலைகளில் இடம்பெற்றிருந்த வர்ணனைகள், மரியாதை நிமித்தம் ஒப்புக்காகப் புனையப்பட்டதாயில்லாமல், உண்மையிலேயே மாபெரும் கவிஞர்களின் இதயகீதமாக ஒலித்தன. சி.வி. அவர்கள், இவ்விரு கவிஞர்களுக்கும், அவர்களாக வலிய முன்வந்து எதுவும் கேட்காதபோதும் பலவகைகளில் உதவியிருக்கிறார். உள்ளூர் பரமேஸ்வர ஐயர், திருவிதாங்கூர் சமஸ்தான அரசில் ஒரு செயலாளராக நியமிக்கப்படவிருக்கிறார் என்கிற செய்தியைக் கேள்விப்பட்டதும் சி.வி. அவர்கள், அவருக்கு ஒரு கடிதம் (1919-ல்)

எழுதினார். அதில், 'நீங்கள் அரசின் செயலாளராக நியமிக்கப்பட்டு, கல்வித்துறையின் நிர்வாகம் உங்கள் பொறுப்பில் ஒப்படைக்கப் படும் எனக் கேள்விப்பட்டேன். நாமிருவரும் எப்போதும் ஒருவரையொருவர் பரஸ்பரம் பாராட்டிக் கொள்பவர்களாகப் பெயர் எடுத்துவிட்டோம். எனினும், என்றைக்குமே நான், சிறப்பான வற்றையும், நியாயமானவற்றையும் மட்டுமே போற்றி வந்திருக்கிறேன். தங்களுடைய உயர்வான புலமைத் தகுதி களுக்கும், சிறப்பான குணநலன்களுக்கும் இப்படிப்பட்ட உயர்ந்த பதவி, ஒரு நாள் எப்படியும் உங்களைத் தேடிவரும் என்பதை நன்கு அறிந்திருக்கிறேன்!' இவ்வாறு தனது வாழ்த்துக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். உள்ளூர் பரமேஸ்வர ஐயர் அவர்களுக்கு சி.வி. அவர்கள் எழுதியிருந்த மற்றொரு கடிதத்தில் உங்களுக்கு எதிரான வகையில் கிளம்பும் விமரிசனங்களைப் பொருட்படுத்த வேண்டாம் எனக் கூறியிருந்தார்.

'பொறாமை, வஞ்சகத்தன்மை, அறியாமை மற்றும் புறம் பேசுதல் அடங்கலாக, நம்முடைய பலவீனமான, ஒழுக்கமற்ற, தீய குணங்களினால் தான் நாம், அழுதுகொண்டே சரிந்து கொண்டிருக்கிறோம்! மானுடநேயத்திற்கு ஊறுசெய்யும் உயிர்க் கொல்லிகளான இந்த நல்லறமற்ற குணங்களை அடிமன ஆழத்திலிருந்து அறவே களைந்து எறிவோம். நமது சிந்தனைகளும், படைப்பிலக்கியங்களும் நம்மை வியப்பிலாழ்த்தும் நம்முடைய சொந்த குதூகலங்களும் நமது சகோதர மக்கள் மற்றும் அடுத்து வரும் தலைமுறையினரின் நலன்களுக்குப் பயன்படுவதாக அமையட்டும்!' சி.வி. அவர்கள் உள்ளூர் பரமேஸ்வர ஐயர் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். சி.வி. அவர்கள் எப்போதும் நற்பண்புகளுக்கும் நன்னடத்தை களுக்குமே முதலிடமும் முக்கியத்துவமும் கொடுக்கும் இயல்புள்ளவராக இருந்தார். பணத்திற்கும், பதவிகளுக்கும் அவர் என்றுமே மதிப்பளிப்பதில்லை. 'எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் வாழ்க்கையில், தூய்மையான இதயத்தைக் கொண்டிருங்கள். அது, அனைவருக்கும் மகத்தான வலிமையையும், நற்பெயரையும், கௌரவங்களையும் அளிக்கும்' என, அவர் இளைஞர் சமுதாயத் தினருக்கு அறிவுரை கூறுவார். வரையறுக்கப்பட்ட, அவரது சொற்ப வருமானத்திலும், பல இளைஞர்களின் படிப்புச் செலவுகளுக்கு அவர் தொடர்ந்து உதவி செய்து வந்தார். மற்றவர் களுக்கு உதவும் விஷயத்தில் எல்லைக் கோடு கிழித்துக் கொண்டு செயல்படத்

தெரியாத சி.வி. அவர்கள், தன்னைப் பற்றி, ''மற்றொரு பிச்சைக் காரன், நான்!'' எனக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி கொண்டார்.

சி.வி. அவர்கள், 'ராமராஜபகதூர்' நாவலின் வெளியீட்டிற்குப் பிறகு, சுயசரிதை நாவல் ஒன்றையும் எழுதுவதில் ஈடுபட்டார். ஆனால், அவர் அதை முழுமையாக முடிக்க வில்லை. 'மிதபாஷி' என்கிற, பதினோரு தலைப்புகளில் தனித் தனியாக அமைந்த நிர்வாக ஆய்வுத் தொகுப்பொன்றையும் 1921ல் எழுதினார். இந்த தொகுப்பில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் திவான்களாகப் பதவி வகித்த, சர். டி. மாதவராவ் முதற்கொண்டு சர். எம். கிருஷ்ணன் நாயர் வரையில் பதினைந்து திவான்களின் ஆட்சிக்காலத்தில், சமஸ்தானத்தின் நிர்வாக முறைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை மிக நுட்பமாக விவரத்தெளிவுடன் விமரிசித்திருந்தார். 'இந்த திவான்களில் கணிசமானவர்கள் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யுப்பட்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆட்சி நிர்வாகத்தில் திணிக்கப்பட்டவர்கள். அவர்களுடைய உண்மையான தகுதிகளுக்காக அல்லாமல், ஆங்கிலேய முதலாளிகளுக்கு விசுவாசமிக்க அடிவருடிகளாகவும், மொழிபெயர்க்கும் துவிபாஷி களாகவும், காட்டிக்கொடுக்கும் 'மித்ரபேத' இயல்புள்ளவர்களாகவும் இருப்பதற்கான தகுதிகளைக் கொண்டவர்கள் என்கிற உறுதியான கணிப்பின் அடிப்படையிலேயே பதவியில் அமர்த்தப்பட்டார்கள். இவர்களில் விதிவிலக்கானவர்கள் என எவரேனும் சிலர் இருந்திருந்தால் அவர்களும் சட்ட விதிமுறைகளை நிரூபணம் செய்பவர்களாகவே அமைந்திருந்தார்கள் என்கிற மையக் கருத்தைச் சுற்றியே சி.வி. அவர்கள் இந்த 'மிதபாஷி' தொகுப்பை உருவாக்கியிருந்தார். தாய்நாட்டுப் பற்று மற்றும் சுயமரியாதை ஆகியவற்றின் மீது சி.வி. அவர்கள் கொண்டிருந்த தணியாத வேட்கையை இந்தக் கட்டுரைகள் நன்கு புலப்படுத்தியதுடன், இருபதாண்டுகளுக்கு முன், மலையாளிகள் சங்கம் தர்க்கரீதியாகப் போராடி வந்த 'மண்ணின் மைந்தர்களுக்கே எல்லாவற்றிலும் முன்னுரிமை' என்கிற கொள்கைகளை வலியுறுத்தும் அநு பந்தமாகவும் விளங்கியது. சி.வி. அவர்களின் மிதபாஷித் தலையங்கக் கட்டுரைகள் ஒரு தனி நூலாகத் தொகுக்கப்பட்டு, 1922ல் 'விதேசிய மேதாவித்வம்' என்கிற தலைப்பில் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டது. அந்நியர்களின் ஆதிக்கம் என்கிற பொருளில் அமைந்த இந்த நூலை என்.கே. கிருஷ்ணப் பிள்ளை பதிப்பித்து வெளியிட்டார்.

இந்த சமயத்தில், சி.வி. அவர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. எப்போதும் திறந்த மனதுடன் தனது புரட்சிக்குணத்தைப் பற்றி அவர், பேச்சுவார்த்தைகளின் போது குறிப்பிடுவது வழக்கம். கலாசாரச் சுழற்சியின் வேகத்தில், ஆண்டுகள் பல உருண்டோடிக் கொண்டிருக்கும் நிலையிலும் உடல்நிலை, மூப்பு போன்ற எதுபற்றியும் கவலைப்படாமல் இந்தப் புரட்சியாளர், மேலும் அதிகத் தீவிரத்துடன் சமூகத் தீமைகளுக் கெதிரான எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார். ஆயுட்காலம் முழுவதும் எவருக்குமே அடிபணியாமல் சுத்தவீரனாக விளங்கிய சி.வி. அவர்களுக்கு அவரது மருத்துவ நண்பர்கள் தீவிர கவனிப்பும் அக்கறையும் மிகுந்த மருத்துவ சிகிச்சை அளித்தும் பயனில்லாமல் போய்விட்டது. தனது தாயக மக்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என இடையறாது முழக்கமிட்டு வந்த, சுயதேச அபிமானமிக்க, இந்த படைப்பிலக்கிய நாயகனின் இறுதி மூச்சு, 1922ம் ஆண்டு மார்ச் இருபத்தொன்றாம் நாள், எல்லோரது எதிர்பார்ப்புகளையும் ஏமாற்றிவிட்டு, அடங்கிவிட்டது.

6
தர்மராஜா

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, சி.வி. ராமன் பிள்ளை அவர்கள் அநேகமாக ஒவ்வொரு நாளும் ராஜா கேசவதாஸ் (1744-1799) புகழ் இசைக்கப்படும் வீட்டில் வளர்ந்தார். ராஜா கேசவதாஸ் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் 1778 முதல் 1779 வரை திவானாகப் பதவி வகித்தவர். சமஸ்தான மக்கள் அனைவரும் அவரை, மிகுந்த மரியாதையுடன் திவான் பாபு எனக் குறிப்பிடுவது வழக்கம். ஆங்கிலேய ஆட்சியாளர்கள்,'ராஜா' என்கிற சிறப்பு விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்தனர். இத்தகைய மகத்தான புகழ்மிக்க மாவீரரான கேசவதாஸ் அவர்களிடம் சி.வி.யின் ஈடுபாடும், மதிப்பும், காலச் சுழற்சியின் வேகத்திற்கேற்ப அதிகரித்து வந்தது. இந்த வகையில், திவான் கேசவதாஸ் அவர்களின் மாபெரும் சாதனைகள் குறித்து, சி.வி. அவர்களின் கற்பனைகள், வண்ணச் சிறகடித்து, வானளாவச் சுழன்றதும் இயற்கையே. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் புகழ்மிக்க கல்வித்துறைச் செயலாளரான பி. அய்யப்பன் பிள்ளை, 1889-ல் திவான் கேசவதாஸ் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் சொன்னார்: ''அவர், விஷயங்கள் நிறைந்த அறிவுக் களஞ்சியம். அவரது அரசியல் ரீதியான நடவடிக்கைகள், ஏவரையும் புண்படுத்தாத வகையிலும், மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் விதத்திலும், பிறர் ஈடுபாடு கொள்ளும் விதத்திலும் பெருமைக்குரியதாக விளங்கின. அவரது

வாழ்க்கை முழுவதும் உண்மை, நேர்மை, நீதி, விசுவாசம், தேசபக்தி ஆகியவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகவும், மிகச் சிறந்த உதாரணமாகவும் திகழ்ந்தது.''–ஒரு தனி நபரின் இவ்வாறான, மதிப்புமிக்க, வசீகரமான வாழ்க்கை உண்மையிலேயே எழுத்துவடிவில் அமையவேண்டிய முக்கியமான வரலாறாகும். சி.வி. அவர்கள், தனது நாவலை, சிறப்பாக உருவாக்கும் திட்டத்தில், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் முழுமையான வரலாற்றுக் காலகட்டங்களை விவரிப்பதில் பெரும் கவனம் செலுத்தினார். வடக்கு எல்லையிலிருந்து, பெரும் புயலாகக் கிளம்பியது போல், ஹைதர் அலி கானின் மிரட்டல்கள் பற்றியும், மைசூர்புலி என அனைவராலும் பெரிதும் அஞ்சப்படும் அவரது திட்டமிடப்பட்ட திடீர் தாக்குதல்கள் பற்றியும் சி.வி. அவர்கள், தனது நாவலில் விரிவாக விவரிக்க எண்ணினார். எனினும், இந்த முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் முழுவதையும் நாவலுக்குள் அடக்கிவிட இயலாது என்பதையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். எனவே, இவற்றை மூன்று பாகங்களாக எழுதி வெளியிட நினைத்தார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, மூன்றாவது மற்றும் கடைசிப் பகுதிகளை அவரால் முடிக்க இயலாமல் போயிற்று. எனினும், அவர் நமக்கு அளித்துச் சென்றுள்ள இரண்டு பாகங்களில் ஒவ்வொன்றும், அவற்றின் மதிப்பில் அலாதியான முக்கியத்துவமும், முழுமையும் கொண்ட வரலாற்றுப் பெட்டகமாகும்.

இரண்டு பாகங்களும் தம்மளவில் நிறைவு பெற்று விளங்குகின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் வரலாற்றை எழுதும்போது, நிகழ்காலத்தைவிட்டு அவர் ஓடிவிடவில்லை. மாறாக, இளம் தலைமுறையைச் சேர்ந்த ஆண்களும்-பெண்களும் வரலாற்று நிகழ்ச்சிகளினால் அக்காலச் சூழலில் உத்வேகம் பெறும் வகையில், அவர்களிடம் புதிய சக்தியைத் தோற்றுவித்தார். மார்த்தாண்ட வர்மா நாவலில் காணப்படும். பிரமிப்பூட்டும், வீரதீரசாகசங்களும் சுவாரஸ்யமும் இவ்விரு பகுதிகளிலும் அமையவில்லை. ஆயினும் மன்னரும், அவரது மந்திரியும் சுயநலமற்ற நோக்குடன், நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தொண்டாற்றிய சிறப்பை விவரிக்கும் வகையில், இவற்றின் முக்கியத்துவம் அதிகம். தர்மராஜா நாவலில், கேசவன் என்கிற பத்து வயதுச் சிறுவன் கதாநாயகனாக அறிமுகப்படுத்தப்படுகிறான். இந்த சிறுவன், களப்பிரகோட் தம்பி என்பவரது வீட்டில் எடுபிடி வேலைகளைச் செய்து வந்தான். பன்னிரண்டாண்டுகளுக்குப்

பிறகு, அவனை நாம் அரண்மனையில் நகலெடுக்கும் எழுத்தராக காண்கிறோம். நாவலின் இறுதியில், இவன் அரசுப்பணி என்கிற ஏணியில் உயரச் சென்று தலைமை எழுத்தராகக் பதவி உயர்வு பெற்றிருப்பதைக் காண்கிறோம். இவையனைத்திற்கும் மேலாக, மகாராஜா கார்த்திகைத் திருநாள் ராமவர்மா அவர்கள், கேசவனிடத்தில் இயற்கையாகவே, பெரும் பற்றுதல் கொண்டிருந்தார். இதற்குக் காரணம், கேசவனிடம் கண்ட நல்ல குணங்கள் தவிர, அவனது நீண்ட நாசியும், அழகியவதனமும், தனது சிற்றப்பனான, காலஞ்சென்ற மன்னரை நினைவுபடுத்துவதாக, மகாராஜா கருதியதேயாகும்.

கேசவபிள்ளை தியாக உள்ளமும், புத்திக் கூர்மையும், கடின உழைப்பும் உறுதியான ராஜ விசுவாசமும் கொண்ட மனிதராக நமது நினைவில் ஆழப்பதிந்து விடுகிறார். கேசவ பிள்ளையின் உடனடியான பதவி உயர்வுகள் அவருக்குப் பல விரோதிகளைத் தேடித் தருவதாக அமைந்தன. ஆயினும், கேசவ பிள்ளை, அனைத்து எதிர்ப்புகளையும் முறியடித்து, தனது திறமையினாலும், பொறுமையினாலும் மதி நுட்பத்தினாலும் முன்னேறினார். கேசவ பிள்ளையின் ஆற்றல் மிகுந்த முழு வடிவமும், ஆசிரியரால் வெளிச்ச மிடப்படாமல்,பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. அதே சமயம், கேசவ பிள்ளையின் படிப்படியான வளர்ச்சியையும் அறிய முடிகிறது. வளர்ச்சி என்பது இயற்கை. எவர் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் தவிர்க்க இயலாது. கலிஉதயன் சந்திரக்காரன் மற்றும் ஹரி பஞ்சானனயோபீஸ்வரன் ஆகிய இரண்டு சக்திவாய்ந்த கதாபாத்திரங்களின் நிழல்களினால் கேசவ பிள்ளை, வசமாகக் சூழப்பட்டிருக்கும் நிலைமையையும் காண்கிறோம். ஆசிரியரால் பெருமிதத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இவ்விரு கதாபாத்திரங்களும், மன்னருக்கு எதிரான சதித்திட்டங்களையும் கொடூர நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பவர்கள். எனினும் இவற்றுக்காக நாம் வெறுப்படைவதற்குப் பதிலாக, அவர்களைப் பாராட்டுவதற்கு உந்தப்படுகிற விபரீத நிலையையும் காண முடிகிறது. உண்மையில், இவ்விரு கதாபாத்திரங்களையும், சராசரி மனிதர்களுக்கும் மேற்பட்ட உன்னத நிலைக்கு உயர்த்தி அவர்களின் வல்லமைகளையும், இயல்புகளையும், திறமை களையும் பெருமளவு அதிகரித்துக் காட்டுவதற்கு சி.வி. அவர்கள் முனைந்திருப்பதைக் காணமுடிகிறது. இதற்காக, அவர்

விமரிசகர்களின் கண்டனத்திற்கும் இலக்கானார். ஆனால், இந்த விமரிசனங்களினால் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில், சி.வி. அவர்கள் செய்திச் சுருளைத் தயாரிப்பவராகவோ, யதார்த்த நிலவரங்களைக் கருத்தில் கொண்டு செயல்படுபவராகவோ இயங்கவில்லை என்பதுடன், அவர் தன்னிச்சைப்படி, மிகுந்த சுதந்திரத்துடன் செயல்பட்டிருப்பதால், இயற்கை நிலைகளுக்கு அளவுக்கு மீறிய வண்ணப்பூச்சுகளைத் திணித்திருப்பது சாத்தியமாகியுள்ளது. இந்த விஷயத்தில் அவர், எம்.எச். ஆப்ராம்ஸின் உத்தியைப் பின்பற்றியிருப்பதும் புலனாகிறது. எவ்வித மனஉளைச்சலுமின்றி, அவர் அமைதியாகத்தான் இருந்து வருகிறார். மகத்தான குணசித்திரங்களாக நீங்கள் உருவாக்கியிருக்கும் இந்த இரட்டையர்களின் சாகஸ நடவடிக்கைகள் எல்லாம் நடைமுறையில் உண்மையிலேயே, சாத்தியம்தானா? என்பதை நாம்தான் அவரிடம் கேட்பதற்கு மறந்துவிட்டிருக்கிறோம்! இந்த இரண்டு கதா பாத்திரங்களை மேலும் மிக நெருக்கமாகக் கவனிப்போம். குணஇயல்புகளில் இவ்விருவரும் வெவ்வேறு துருவங்கள். ஆனால், ஏற்கெனவே சி.வி. அவர்களின் முந்தைய நாவலில் குறிப்பிடப்பட்டிருந்த எட்டு வீட்டுக்காரர்களின் வம்சத்தில் வந்தவர்கள் என்கிற தகுதி மட்டும் இவ்விருவருக்கும் பொதுவானது. இவ்விருவரும் தேசத் துரோகச் சிந்தனை நிறைந்தவர்கள். மன்னர் மார்த்தாண்ட வர்மா, குடும்பத்திலிருந்த ஆண் உறுப்பினர்கள் அனைவரையுமே ஒழித்துக் கட்டியிருந்தனர். அவர்களில் சிலர் தலைமறைவாகி விட்டிருந்தனர். இவர்களின் இரண்டு வாரிசுகள், தலைதூக்கி, புதிய மன்னரை அரியாசனத்திலிருந்து தூக்கியெறி வதற்கான முயற்சியை மேற்கொள்வதற்காகப் பரபரத்துக் கொண்டிருந்தார்கள். இவ்விரு வாரிசுகளில் சந்திராக்கரன் ஒருவன். கல்வி வாசனையையே அறியாத முரட்டுத்தனமும், ஆவேசமும் கொண்ட மூர்க்கமனிதன். எதேச்சதிகாரக் குணமும், திமிர் நிறைந்த இயல்பும் கொண்ட நிலச் சுவான்தாரரான இவன் பேராசையின் மறுவடிவம். தனது குலக் கோயிலுக்குள் எங்கேயோ ஓரிடத்தில் புதைந்து மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் பொக்கிஷத்தைக் கண்டுபிடித்து, உடைமையாக்கிக் கொள்ள பெருமுயற்சிகளை மேற்கொள்கிறான். மன்னரின் விரோதிகளைத் தீர்த்துக் கட்டும் திட்டங்களுக்கு சூத்ரதாரியாகக் கருதப்படும் கேசவ பிள்ளையை ஒழித்துக் கட்டவும் தீர்மானிக்கிறான். திவான் அல்லது ஹைதர் அலிகானின் வைஸ்ராய் போல, நாட்டை ஆள்வதற்குரிய தகுதிகள் தன்னிடம் நிறைந்திருப்பதாகக் கற்பனையிலும்,

கனவிலும் மூழ்கியிருந்தான். பொக்கிஷத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது, குப்பன் என்கிற மிக நேர்மையான, வயோதிக ஊழியரை அவன் சந்திக்க நேரிடுகிறது. அவருடன் ஏற்பட்ட சண்டையில், அந்த முதியவரை கொன்றுவிடுகிறான். புதையலைப் பற்றிய விவரமறிந்தவன் இவன் ஒருவன் மட்டுமே என்கிற நிலை ஏற்படுகிறது. இந்த நினைப்பு, அவனை உன்மத்தமடையச் செய்து வெறிபிடித்தவனாக மாற்றிவிடுகிறது. தனது விரல்களைக் காயம்படும் அளவிற்குக் கடித்துக் கொள்வதும், ரத்தத்தை உறிஞ்சி பூமியில் துப்புவதும், பேய்ச்சிரிப்பு சிரிப்பதும், தன்னைச் சுற்றியுள்ள இருட்டை நோக்கி ஏகமாய் கூச்சலிடுவதும், ''ஹேய் இருட்டே! உன்னுடைய அகண்டவாயைத் திறந்து, இந்த முட்டாளை விழுங்கி விடு. கலி என்பதும் காலவெளி என்பதும் எல்லாம் நீயே! மரண தேவதையும் நீயே. வாழ்க்கையைத் தரும் வள்ளல் பிரபுவும் நீயே. தாய் என புனிதப் பெயரிட்டு அழைக்கப்படும் பெண்களின் 'கர்ப்பப்பை' எனும் இருட்டறையில் ஜனித்து, இருட்டினால் சூழப்பப்பட்டு, வளர்ந்து, மக்களின் நானாவிதச் செயல்களினால், இருட்டடிப்பிற்கு ஆளாகி என்னில் உள்ளும்-புறமும் எல்லாமே இருட்டாகி நிற்கும் நான் உன்னிடம் வருகிறேன். ஓ, இருளே! என்னை ஏற்றுக் கொள். உன்னிடமிருந்து மீள முடியாதாவாறு, முழுமையாக என்னை மூடி மறைத்துத் தழுவிக் கொள்!'' இவ்வாறு கூறிக் கொண்டே, அடர்ந்த இருட்டில் ஐக்கியமாகி, மறைந்துவிடுகிறான். ஆனால், அடுத்த நாவலில் பல்வேறு உருமாற்றங்களைப் பெற்றவனாக, மீண்டும் தோன்றுகிறான். இப்போது அவனிடத்தில் மிகுந்த அனுபவ முதிர்ச்சியைக் காண முடிகிறது. ஆனால், தீய உள்ளுணர்வுகளிலும், முரட்டுத் தோற்றத்திலும் அவன் எள்ளளவும் மாறுதல் இல்லாமல் பழைய கருப்பனாகவே அமைந்திருக்கிறான்! கவர்ச்சி மிக்க, காவி உடைதரித்த போக்கிரியான, தனது இரண்டாவது கதாபாத்திரமாக, *ஹரி பஞ்சானன சுவாமிகள் என்பவனை சி.வி.* பிள்ளை அவர்கள் நாவலில் உருவாக்கியிருப்பதுடன், அவனைச் சராசரி மனிதனைவிட உயர்த்தியும் வர்ணித்திருக்கிறார். இந்த கபட சந்நியாசி, பெரும் நிலச்சுவான்தார் குழுவினரில் மிகுந்த சாத்வீகக் குணம் படைத்தவரான கழக்கோட்டத்து பிள்ளை என்பவரின் மருமான். இவனுடைய தந்தை, பில்லி சூன்ய மாந்திரீக வித்தைகளில் தேர்ந்தவர். தலைமறைவாக வசிப்பவர். இவர் தனது இரு மகன்களுக்கும் பில்லிசூன்ய மந்திரவாத வித்தைகளில் முறையான பயிற்சி அளித்து, அவ்விருவரையும் மந்திரவாதக்

கலையில் தேர்ந்தவர்களாக உருவாக்கி, திருவிதாங்கூருக்கு அனுப்பி வைத்தார். இந்த இரட்டையர்கள்தான் மாயா வினோதங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பது புலனாகாமல், பல்வேறு இடங்களில் ஒரேயொரு மனிதன் மட்டுமே, தனது மாயாஜாலங்களின் மூலம் தோன்றி, செயல்படுவதாகக் கருதும் விதத்தில் இவர்களின் நடவடிக்கைகள் மிக நேர்த்தியாக அமைந்திருந்தன. சி.வி. அவர்கள், இந்த கதாபாத்திரத்தை உருவாக்குவதற்கு தனது கற்பனைத் திறன் முழுவதையும் உபயோகித்திருப்பதை நன்கு உணர முடிகிறது. இந்த கபட நாயகன் மன்னரின் அரண்மனைக்குள் நுழையும் வாய்ப்பு பெறுகிறான். இளவரசர், இவன் காலில் விழுந்து வணங்குகிறான். சந்திராக்கரன் போலவே, இவனும் மன்னரைப் பதவியிலிருந்து விரட்டுவதையே இலக்காகக் கொண்டு செயல்படுகிறான். ஆனால், பொறுமையுடனும், எச்சரிக்கையுடனும் மக்களின் சந்தேகத்திற்கு ஆளாகாதபடி, மிகுந்த கவனமுடனும் சதிவேலைகளில் ஈடுபடுகிறான். கேசவ பிள்ளை அவர்களைப் பற்றித் தவறான கட்டுக்கதைகளை மக்கள் மத்தியில் பரப்பும் வகையில், தனது பணிகளைத் துவக்குகிறான். மந்திர வித்தைகளில் தேர்ந்த இந்த இரட்டையர்களில் மூத்தவரும், மன்னரின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதித் திட்டத்தின் மூலவருமான, பஞ்சானன சாமிகள், தனது கபட நாடகத்தில் ஒரு அங்கமாக, மன்னரிடம் தன்னுடைய இளவல் மீது கொலைக் குற்றம் சாட்டுகிறார். அரசரும் இதை உண்மையென நம்புகிறார். ஆனால், இவை தற்காலிகமானதாகவே அமைந்துவிடுகிறது. பஞ்சானன சாமிகள், திரை மறைவில், மன்னரைக் கவிழ்ப்பதற்கு முக்கியமான நபர்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபடுகிறார். விரைவிலேயோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, எப்படியும், ஹைதர் அலிகான் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆக்கிரமித்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகிறது என்கிற வதந்தியைப் பரப்புவதிலும் முனைகிறார். இவையனைத்தும் சாமியார் வேடமும், சூதும், சதியும் கொண்ட, பாதுகாப்பான உத்திகளில் பஞ்சானன சாமிகளினால் மேற்கொள்ளப் படுகிறது. ஆனால் இந்த மாதிரியான வித்தைகளிலெல்லாம் ஏமாந்துவிடாத அளவிற்கு கேசவ பிள்ளை மிகுந்த புத்திசாலியாக யிருந்தார். பஞ்சானன சாமிகளின் சித்து விளையாட்டுகள் அனைத்தையும் அவர் நன்கு கவனித்து வந்தார். இறுதியில், சாமிகளுக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தினார். சரிவைத் தாங்கிக் கொள்ள முடியாததினாலும், தனது திரைமறைவு கபட நாடகங்கள் யாவும்

கேசவ பிள்ளை அவர்களினால் தோலுரிக்கப்பட்டதினாலும், மனமுடைந்து போன பஞ்சானன சாமிகள், தற்கொலை செய்து கொண்டார். ஒரு வகையில், இந்த நாவல் உணர்ச்சிகரமான அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. கொலை, தவறாக உணர்தல், கடத்தப்படுதல், சிறையிலிருந்து தப்பித்தல், சதித் திட்டங்கள், இதை முறியடிக்க எதிர்ச் சதித் திட்டங்கள் என, விறுவிறுப்பான பல்வேறு அம்சங்களின் கலவையே, இந்த நாவல். நாவல் நமது சிந்தனையைத் தூண்டுகிறது. இதற்குக் காரணம், நாவலில் இடம் பெற்றுள்ள விறுவிறுப்பான அம்சங்கள் அல்ல. நாவலின் கதாபாத்திரங்களும், அவர்களுக்கிடையேயான கருத்து மோதல்களும் நம்மை நாவலின் ஓட்டத்துடன் பிணைக்கின்றன. திடசித்தம் படைத்த கதா பாத்திரங்களின் செயல்பாடுகளை மிக நேர்த்தியாக, கலை நயத்துடன் சித்திரிக்கும் முறையே சி.வி. அவர்களின் படைப்பிலக்கிய நாவல்களில் அமைந்துள்ள தனித்தகுதியாகும். இந்த நாவலை உருவாக்குவதில், சி.வி. அவர்களின் சிறப்பான புத்திசாலித்தனத்தையும், உறுதியான மனப் போக்கையும் தவிர கவனத்தையும் உணர முடியும். ஒரு சௌகரியத்திற்காகவும், சம்பிரதாயத்திற்காகவும் இந்த நாவலுக்கு தர்மராஜா என்கிற பெயரை அவர் சூட்டியிருக்கலாம். ஆனால், ராஜா ஏதோ ஒரு வகையில் இந்த நாவலில் இடம் பெற்றிருப்பதும் உண்மை. ஆயினும், இந்த கதாபாத்திரம், நாவலில் அவ்வளவு முக்கியமானவராக அமையவில்லை. நாவலில் அவ்வப்போது தோன்றும், பெருந்தன்மையுள்ள மனிதராக மட்டுமே, ராஜா இந்த நாவலில் நமக்கு அறிமுகமாகிறார். மிகுந்த பொறுமைசாலியாகவும், மன்னிக்கும் தன்மை மிக்கவராகவும் விளங்கும் ஒரு நல்ல குணசித்திரமாக அமைந்திருக்கிறார். மன்னரின் ஆட்கள் ஒருபுறம், அவரது பகைவர்கள் மற்றொரு புறமும் அணிவகுத்து போராட்டம் நடத்தும் கதைக் கருவின் மூலம் சி.வி. அவர்கள்இந்த நாவலை உருவாக்கியிருக்கிறார். அவர் உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரையில் தேசபக்தி மிக்கவராக விளங்கினார். 'ராஜபக்தி' உணர்வுக்கு அவர் அளித்துள்ள முன்னுரிமையும், தார்மீக விளக்கங்களும் சி.வி. அவர்களின் நாவல்களை மற்றவற்றிலிருந்து பெரிதும் வேறுபடுத்தும் சிறப்பான படைப்பிலக்கியங்களாக முத்திரை பதிக்கின்றன. 'தர்மராஜா' நாவலின் பிரதான கதாநாயகனான கேசவ பிள்ளையின் பங்கு, முழுமையான அளவில் ஏன் சித்திரிக்கப்படவில்லை என்பது நெருடலாக உள்ளது. அவர்

இன்னும் அதிக அளவில் தனது திறமையையும், தகுதியையும் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆயினும், அவரது குண நலன்களின் வல்லமையையும், சிறப்பையும் நம்மால் உணரமுடிகிறது. அவரது ராஜ விசுவாசம் மட்டுமின்றி, நேர்மையும், தியாக உள்ளமும், தார்மீக உணர்வும் நம்மைப் பரவசப்படுத்தி, அவர்மீது மரியாதையை அதிகரிக்கச் செய்கின்றன. மன்னரும், மந்திரியும் ஒரே விதமான குறிக்கோளின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படுவதும், இவ்விருவரிடையே நிலவும் உறவு, இலட்சியப் பிணைப்பு கொண்டதாக விளங்குவதும், நாவலின் கதைக் கருவுக்குப் பொலிவூட்டுவதாக அமைந்துள்ளது. மன்னரிடம், பதவிக்குரிய பகட்டுகளையும், பந்தாக்களையும் காணமுடியவில்லை. ஆனால், மிகமென்மையான, ஒரு குடும்பத் தலைவனுக்கே உரிய பொறுமையும், கருணையும், அறிவார்த்தமான அணுகுமுறையும் கொண்ட உண்மையான தோற்றத்தை நாம் மன்னரிடம் காண்கிறோம்!

7

ராமராஜ பகதூர்

'தர்மராஜா' நாவலைப் படைத்துச் சாதனை புரிந்த சி.வி. அவர்கள், இலக்கிய வெற்றிகளைக் குவிக்கும் ராஜபாட்டைக்கு பெருமளவு நெருக்கமாகிவிட்டார். கேசவதாஸ் பற்றியும் அவருடைய காலகட்ட நிகழ்ச்சிகளையும் பற்றிய ஒரு முழுமையான வரலாற்றை எழுதி முடிக்க, சி.வி. அவர்கள் விரும்பினார். எனினும், சமூக நாவல் தொடர்பான, மற்றொரு கதை அவரது உடனடியான கவனத்தை கவர்ந்ததினால், அதில் முனைப்பு மிக்கவரானார். இது பற்றிய விவரங்களைப் பிறகு பார்ப்பபோம்.

'தர்மராஜா' நாவலின் தொடர்ச்சிதான் ராமராஜபகதூர். ஆனால், இவ்விரண்டு நாவல்களுக்கும் இடைவெளி பதினெட்டு ஆண்டுகள். காலம் தற்போது மாறிவிட்டிருந்தாலும், நாடகத்தின் பிரதான கதாநாயகர்கள், ஏறத்தாழ ஒரே மாதிரியானவர்களாகவே இருந்தார்கள்! மன்னருக்கு அறுபத்தைந்து வயதாகி, ராஜ்ய பரிபாலனக் கலையில் அனுபவத் தேர்ச்சிமிக்கவராக விளங்குகிறார். கொந்தளிப்பான காலகட்டங்களிலும் மிகுந்த பொறுமையுடன் திகழ்ந்தது சமஸ்தான பிரஜைகளின் விசுவாசமிக்க மரியாதைக்கு உரியவராகவும் விளங்கினார். மன்னருக்கும் ராஜ்யத்திற்கும் விரோதி களாகயிருந்தவர்கள், அரண்மனையிலிருந்தும், சமஸ்தானத்தி லிருந்தும் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். ஆனால், சுல்தான் திப்புவின் நிழல், சமஸ்தானத்தின் மீது விழுந்து, தேசத்தின்

அமைதியையும் பாதுகாப்பையும் பயமுறுத்தியது. பிற்காலத்தில் கேசவதாஸ் எனப் பரவலாக அறியப்பட்ட, கேசவ பிள்ளை இப்போது திருவிதாங்கூரின் திவானாகிவிட்டார். நுண்ணுணர்வு மிக்க ராஜ தந்திரியாகவும், பொறுமையும், நல்லெண்ணமும் மிகுந்தவராகவும், ஒவ்வொரு சம்பவத்தையும் மிகுந்த விழிப்புணர்வுடன் கவனித்து வரும் விவேகியாகவும் வெளிப்பட்டார். மேலும், அவர் கேசவன் உண்ணித்தான் என்பவருக்கு நேர்மாறாக இருந்தார். இந்த கேசவன், திவானின் வீட்டு நிர்வாகியாகவும், திவானுக்குக் கீழ் பணிபுரியும் அதிகாரியாகவும் இருந்தார். 'தர்மராஜா' நாவலில் வர்ணிக்கப் பட்டிருந்ததைப் போல், இவர் இந்த நாவலில் இளமைத் துடிப்புள்ள காதல் இளைஞர் அல்ல. ஆனால், தற்புகழ்ச்சி மிக்கவராகவும், தனது மனைவி மீது ஓயாத சந்தேகம் கொண்டவராகவும், இளையமகளை இடையறாமல் துன்புறுத்தும், துன்மார்க்கத் தகப்பனாகவும் வளர்ந்திருந்தார். ஒரு நல்ல மனிதன் சுயநலத்திற்காக, குரூரமான கொலைகாரத் தன்மை படைத்தவனாக மாறிவிட்டதற்கு, இது ஓர் உதாரணமாகும். தன்னைச் சுற்றியிருந்தவர்கள் அனைவருடைய மகிழ்ச்சியையும், மனநலத்தையும் கெடுப்பவராகவும் செயல் பட்டார். எவரேனும் ஒருவர் அவர் மீது மரியாதை வைத்திருக்கலாம்; அல்லது அவரிடம் அனுதாபம் கொண்டிருக்கலாம். ஆனால், எவருமே அவரை நேசிக்கும் நிலையில் இல்லை என்பதே உண்மையாக இருந்தது.

இனி, மீனாட்சி என்கிற அவருடைய மனைவியைப் பற்றி சிறிது கவனிப்போம்:

கூச்ச சுபாவமுள்ள அழகிய இளம் பெண்ணாக, 'தர்மராஜா'வில் இடம் பெற்றிருந்த இவள், இந்த நாவலில், உடல் நலிவுற்றிருக்கும் குடும்பத் தலைவியாக, இழைக்கப்படும் கொடுமைகளை, ஒரு பதிவிரதைக்கே உரிய பொறுமையுடன், சகித்துக் கொண்டு, கணவருடன் குடும்பம் நடத்தும் உத்தமமான மனைவியாகவும் காட்சியளிக்கிறாள். 'சர்வமாசகா' எனக் குறிப்பிடப்படும், எல்லா கஷ்டங்களையும் மனதிற்குள் திணித்துக் கொண்டு வாழ்ந்து வரும் ஒரு நல்ல குலப் பெண்மணிக்கு, சிறந்த உதாரணமாக மீனாட்சி விளங்கினாள். சி.வி. அவர்களுக்கு இப்படிப்பட்ட மாதரசிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் தனிப்பட்ட ஆர்வம் இருந்தது போலும்! எனினும், மீனாட்சி போன்றவர்களின் இயல்புகளுக்கு நேர்மாறாக, நம்மிடையே வீரமும், உள்ளத்திடமும், சிலிர்தெழும் குணமும் கொண்ட சில வீராங்கனைகளும் உள்ளனர். இந்த

நாவலில், வரும் மீனாட்சியின் மகள் சாவித்ரி இப்படிப்பட்ட வீராங்கனைகளில் ஒருத்தி. ஆனால், மீனாட்சி, தனது மகளின் குணங்களுக்கு நேர் மாறாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள்.

'தர்மராஜா' நாவலிலிருந்து நாற்று எடுக்கப்பட்டு, இந்த நாவலில் நடப்பட்டுள்ள கதாபாத்திரங்களில் நமது கவனத்தை மிகவும் கவர்ந்துள்ளவர் சந்திராகரன். அந்த நாவலில் மாறுவேடம் தரித்துள்ளார். ஆங்கில நாவலாசிரியர் இ.எம். பாஸ்டரின் நாவலில் வளையவரும் கதாபாத்திரங்களைவிட சந்திராகரன் கதாபாத்திரம் மிகவும் நெருடலானது. முரட்டு சுபாவமிக்க இந்த கதாபாத்திரம் தர்மராஜா நாவலில், இருள் மண்டிய பகுதியில் மறைந்து, காலிப் பிரபாவபட்டா என்கிற பெயருடன், மைசூரிலுள்ள ஒரு முக்கிய சத்திரத்தின் உரிமையாளராக வெளிப்படுகிறார். அறிவிலியாக, ஒழுக்கமற்றவராக, விளங்கிய நிலக்கிழாரின் உருவைக் களைந்து, இப்போது அதிமேதாவியாகவும், அரசியல் அறிவுமிக்க திறமையாளராகவும் காட்சி தருகிறார். அவரது பரிணாம வளர்ச்சி இத்துடன் நின்றுவிடவில்லை. மாணிக்க கவுண்டன் என்கிற பெயரில் ஒரு வைர வியாபாரியாக வேடம் தரித்து திருவிதாங்கூருக்குத் திரும்புகிறார். அங்கு, திப்பு சுல்தானுக்காக, ரகசியமாக உளவுப் பணிகளில் ஈடுபடுகிறார். இப்போது பொருளாசையும், அதிகார வேட்கையும் நிறைந்தவராக இருக்கிறார். எண்ணியதை அடைவதற்காக, எத்தகைய பஞ்ச மாபாதகங்களையும் செய்வதற்கு தயாராகயிருந்தார். ஆயினும், இறுதியில் வாழ்க்கையில் வெறுப்பும், சலிப்பும் கொண்ட மனநோயாளியாகவும், பெற்றோர்களிடம் பாச உணர்வு மிக்கவராகவும், மென்மையான இயல்புள்ளவராகவும் மாறி விடுகிறார். இவரது முடிவை, உண்மையான வீரச் செயலாக, சி.வி. அவர்கள் சித்திரித்துள்ளார். இந்த நாவல் முடிவுறும் கட்டத்தில், நாம் இவரை திப்புவின் வடக்கு திருவிதாங்கூர் முகாமில், பிணைக் கைதியாக காண்கிறோம். அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சி மாறுதல்களின் விளைவாக, சந்திராகரனுடைய பெரிய அத்தை சாவித்திரியும் திப்பு சுல்தானின் முகாமில், அவரது உளவாளிகளினால் கடத்தி வரப்பட்டு, கைதியாக இருந்தாள், அப்பொழுதுதான், நதியானது திடீரென்று பெருக்கெடுத்து, சுல்தானின் படைவீரர்களையும், கூடாரங்களையும், குதிரைப் படைகளையும் அடித்துச் சென்று விடுகிறது! அத்தை சாவித்ரியைக் காப்பாற்றுவதற்கு சந்திரா கரனுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. நீர்ப்பிரவாகத்தில்

குதித்து எதிர்ப்பட்டவற்றுடன் போராடி, விதியின் போராட்டத்தில் அத்தையை காப்பாற்றிவிட்டு, இறுதியில் பெரும் பசியுடன் கூடிய நீர்க்கீரி கூட்டத்திற்குத் தன்னைப் புசித்துண்ண அனுமதித்தார். வாழ்க்கையில் வெறுப்படைந்த மனிதன் மரணத்தை நோக்கிப் பாய்வதற்குத் துணிந்து விட்டால், அவனை அதிலிருந்து மீட்கவே முடியாது என்கிற உண்மையை இதிலிருந்து உணர்கிறோம். சந்திராகரன் மறுபடியும் தோன்றுகிறான். கீர்த்திமிக்க யுத்தத்தில் சேர்ந்து போர்புரிகிறான். இது அவனுடைய வாழ்க்கையின் மற்றொரு பரிமாணத்தை விளங்குவதுடன், மிக்க தீரத்துடன் சாவையும் வரவேற்கிறான். மகத்தான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மட்டுமின்றி, சுயநலத்திற்காக, இலக்கற்றப் பாதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறவர்களுக்கும் இது ஒரு சோகமான முடிவாகும்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் புகழார்ந்த வரலாற்றுச் சரித்திரத்திற்கு எழுத்தாற்றலின் மூலம், புத்துயிர் தந்திருப்பதைத் தவிர, சி.வி. அவர்கள், தன்னுடைய நாவல்களில் என்ன சாதித்தார் என்கிற கேள்வி எழுவது இயல்பே! அவர் மன்னர்களுடைய ஆட்சியைப் புனிதப்படுத்துகிறாரா? இது, நம்மை பொதுப்படையான ஒரு கேள்வியை எழுப்பச் செய்கிறது. சரித்திர நாவல்கள் என்ன சொல்கின்றன? ஏன் சில எழுத்தாளர்கள் தங்களது சரித்திர நாவல்களில் அதீதக் கற்பனையை கையாளுகிறார்கள்? இவை இதுவரை பலரால் கேட்கப்பட்டது போலவே, பலரால் பதிலளிக்கப்பட்டவையுமாகும். ஒரு விஷயத்தில் மாத்திரம் துளியும் சந்தேகத்திற்கு இடமில்லை. சி.வி. அவர்கள் வீரதீர சாகசங்கள் நிறைந்த காதல் கதைகளைப் புனையும் எழுத்தாளர் என்கிற ரகத்தைச் சேர்ந்தவர் அல்ல என்பதே அது. கடந்த காலத்தின் மதிப்பரிய வரலாற்றுப் பொக்கிஷங்களில் அளவு கடந்த காதலும், ஈடுபாடும் கொண்டவராக இருந்தார் என்பதே உண்மை. சி.வி. அவர்கள் தனது வரலாற்று நாவல்களின் நாயகர்களையும், நாயகிகளையும் சொல்லோவியங்களில் அலங்கரித்துப் பரவசப்பட்டது போலவே, மிக எளிமையான மனிதராக குறுங்காட்டு கிருஷ்ணகுறூப் மற்றும் கல்வி வாசனை இல்லாது தீர புருஷனாகத் திகழ்ந்த அழகன் பிள்ளையையும் சிறப்பாக வர்ணித்தார். நெஞ்சுரம் அற்ற தற்கால இளைஞர்களுக்கு தனது கதாபாத்திரங்கள் ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்கிற உந்துதலின் விளைவாகவே, இத்தகைய கதாபாத்திரங்களை உருவாக்கினார்.

அவரது நாவல்களில் குறிப்பாக- கடைசி இரண்டு நாவல்களில் பேரறிவும், கனிவும், குடிமக்களிடத்தில் இணையற்ற பேரன்பும் கொண்ட புருஷர்களாக ஒரு மன்னரையும், அமைச்சரையும் காண்கிறோம். இவர்கள் மூலமாகவும் குடிமக்களிடம் இவர்கள் கொண்டிருந்த பிணைப்பின் மூலமும் தார்மீகப் பண்புகள் செறிந்த, ஒரு நல்லிணக்கச் சமுதாய அமைப்பை சி.வி. அவர்கள் நமக்கு அறிமுகப்படுத்துகிறார். அரசியல் சூழ்நிலைகளின் அதிர்ச்சிக்கும் அதிசயிக்கத்தக்க திருப்பங்களினாலோ, நிர்ணயிக்கப்பட்ட போர்களினாலோ, நாம் நமது சுவாசக் காற்றை இழந்து விடுவதில்லை. நாம் மக்களுடன் இணைந்து இயங்குகிறோம். அவர்களின் வாழ்க்கையின் அனைத்து சுகதுக்க நிகழ்வுகளிலும் பங்கு கொள்கிறோம். ஐரோப்பாவின் உண்மை நிலை என்கிற தன்னுடைய ஆராய்ச்சி நூலில், அதன் ஆசிரியர் லூகாஸ், பால்சாக்கை இவ்வாறு பாராட்டுகிறார்:

சரித்திர நிகழ்ச்சிகளிலுள்ள வெளிப் பிரகாசத்தை ஒதுக்கிவிட்டு, உள்ளுறைந்துள்ள சமுதாய மேம்பாட்டிற்கான அடித்தளக் குணநலன்கள் எனப்படும் வீரமிக்க பொக்கிஷவேர்களை இவர் இனம் கண்டறிந்துள்ளார். ஸ்காட்டைவிட, பால்சாக் அவர்களை மக்கள் பெருமதிப்புடன் பாராட்டுவதற்குக் காரணம், அவர் கற்பனைப் புனைவுகளில், மகத்தான மனித நேயராகவும் ஈடு இணைகாண முடியாத சிந்தனைச் சிற்பியாகவும் விளங்குவதேயாகும்! நான் குறிப்பிட விரும்புவது என்னவெனில், சி.வி. அவர்கள், ஸ்காட் மற்றும் பால்சாக் ஆகிய இரண்டு மகத்தான படைப்பிலக்கிய ஜாம்பவான்களுக்கும் எங்கோ ஓரிடத்தில் இடைப்பட்டவராகத் தோற்றம் தருகிறார் என்பதே! எனினும், ஸ்காட்டைவிட, பல அம்சங்களில் சி.வி. அவர்கள் உயர்ந்தவர். பால்சாக்கைப் போல் இயற்கை வரலாற்றை மீண்டும் மீண்டும் கூறும் வகையைச் சேர்ந்தவரும் அல்ல. அவர், வாழ்க்கையை சௌகரியப்பட்ட தலைப்புகளில் பல்வேறு பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்கவில்லை. தனிப்பட்ட வாழ்க்கை, ராணுவ வாழ்க்கை, தேசத்தின் வாழ்க்கை போன்றவற்றை அனைத்தையும், சி.வி. அவர்கள் வாழ்க்கைச் சுழற்சியின் ஒரு பகுதியாகவே கருதினார். மானுட வாழ்க்கையை அரசியல் சமுதாயம், குடும்பம், மதம் போன்றவையனைத்தும் ஒன்றிணைந்த கலவையாகச் சித்திரித்தார். சி.வி. அவர்களின் உறுதியான தீர்மானிப்பை அவரது அனைத்து நாவல்களும் பிரதிபலித்தன. பலவிதமான வாத்திய இசைக்

கருவிகளின் அணிவகுப்பைப் போல அமைந்திருந்த கவிதை நயமிக்க கருத்தோவியங்களை அவரது நாவல்களின் நெருக்கமான ஆயிரம் பக்கங்களில் காண முடிந்தது. நூற்றுக்கணக்கான, கதாபாத்திரங்களையும், அவரவர்களின் தனித்தன்மையான குண சித்திரங்களையும் நாவல்களில் அறிமுகப்படுத்தினார். விதி எனும் சதுரங்கப்பலகையில், இந்த கதாபாத்திரங்களை ஆட்டுவிக்கும் மாபெரும் சூத்ரதாரியாகத் திகழ்ந்து மிக்க தேர்ச்சியுடன் காய்களை நகர்த்தினார். அவரது நாவல்களில், ஏனைய சாதாரண கட்டுக்கதை வரலாற்று நவீனங்களில் காணப்படும் போர்வாள்களின் உரசல்களையோ, மோதல்களையோ ரத்தமும், வியர்வையும் கண்ணீரும் சிந்தச் செய்யும் உணர்ச்சிப் பிழம்பான உரையாடல்களையோ அவற்றில் காண முடியாது.

சி.வி. அவர்கள், மனிதர்களுடைய நன்னடத்தைக்கும், பண்புக்கும், பௌருஷம் எனப்படும் ஆண்மைக்குமே மிகுந்த மதிப்பளித்தார். அவருடைய கதாநாயகர்கள் மட்டுமின்றி வில்லன்களாக சித்திரிக்கப் பட்டவர்களும் கூட, மனிதத் தன்மையைப் பெரிதும் மதிப்பவர்களாகத் திகழ்ந்தார்கள். இவர்கள் அனைவரும் தங்களுடைய அனைத்துச் செயல்பாட்டிலும், மனித நேயத்தை ஆராதிப்பதையே பிரதானமாக வெளிப்படுத்தினார்கள்.

சி.வி. அவர்களின் முக்கியப் பெண் கதாபாத்திரங்கள்கூட, பௌருஷம் என்கிற தத்துவத்தைப் பேணுபவர்களாகயிருந்தார்கள். வேர்ச்சொல் அடியாக நோக்கினால் பௌருஷம் ஆண்மையைக் குறிப்பதாகும். சி.வி. அவர்களுக்கு விக்டோரியா ராணியின் காலத்தைச் சேர்ந்த நாவலாசிரியர்களைப் போல் தொன்மையான விசித்திர வர்ணனைகளையும், புத்திமாறும் கேவலமான பெண்களைப் பற்றியும் குறிப்பிடுவதற்குப் போதிய பொறுமை இல்லை. இது குறித்து அவர் பல வார்த்தைகளில் கூறியிருக்கிறார். சந்துமேனனுடைய ரம்மியமான வர்ணனைகளையும், மென்மையான நடையழகு பற்றியும் சிலர், சி.வி. அவர்களிடம் குறிப்பிட்டபோது, அவர் சொன்னார்: "ஆம். இது பற்றி எனக்கும் தெரியும். ஆனால், இந்த உத்திகள் எனக்கு உணவு அல்ல; எனது நோக்கம் வேறு. நமது பெண்கள், எந்தவொரு விஷயத்திலும் உறுதியுடன் முடிவெடுக்கும் விவேகிகளாகயிருக்க வேண்டும் என விரும்புகிறேன். மோக மூட்டுவதற்காகவும், இனிய வார்த்தை சல்லாபங்களுக்காகவும், நினைத்த மாத்திரத்தில் திடீரென கண்ணீர் சிந்துவதற்காகவும் மட்டுமே இறைவன் தங்களைப்

படைத்திருக்கிறான் என்கிற எண்ணம்,நமது பெண்களுக்கு வரக்கூடாது. ஆனால், பெண்கள் தங்களைச் சேர்ந்த மனிதர்களுக்கு சௌகரியங்களையும், மன அமைதியையும் அளிக்கும் கடமையிலிருந்து தவறக் கூடாது. மேலும், பெண்கள் தங்களைச் சேர்ந்த மனிதர்களிடம் உத்வேகத்தை ஏற்படுத்தி, உறுதிமிக்க, தீர்மானமான செயல்பாட்டை மேற்கொள்ளத் தூண்டுகோலாகவும் இருக்க வேண்டும்!''

சி.வி. அவர்களின் படைப்பில் கதாபாத்திரங்களின் வேர்கள் வெகு ஆழமானவை. பல தலைமுறைகளைச் சேர்ந்த தத்துவ வெள்ளத்தில் மூழ்கியிருப்பவை. விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்றிராத அந்தக் காலத்திலேயே, பாரம்பரியத் தன்மைகளைப் பற்றி நன்கு உணர்ந்திருந்ததுடன், அவற்றைச் சிறந்த முறையில் படைப்புகளில் வெளிப்படுத்தினார். வெவ்வேறு வகைப்பட்ட பாரம்பரிய குண இயல்புகளின் சேர்க்கை பற்றியும், இவற்றின் நுட்பமான விளைவுகள் குறித்தும், இதுவரை அறியப்படாத உண்மைகளையும் அவர் படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளார். எதையும் தீர்க்க தரிசன மதிநுட்பத்துடன் அணுகும் இயல்புள்ளவராக, நமக்கு அடையாளம் காட்டுவதுடன், அவரது அலாதியான அறிவாற்றலையும், மந்திர சக்திபோல் உணர்த்துகிறது!

8
சில திறனாய்வுக் கருத்துகள்

சில விமரிசகர்கள், குறிப்பாகப் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் சி.வி. அவர்கள் தனது நாவல்களில் குறிப்பிட்டுள்ள எட்டு வீட்டுப் பிள்ளைமார்களைப் பற்றிய வர்ணனைகளை ஒப்புக் கொள்ளவில்லை. பழைய தலைமுறையைச் சேர்ந்த ஒரு விமரிசகரும் கூட, 1938-லேயே, சி.வி. அவர்களின் முதல் நாவலான மார்த்தாண்ட வர்மாவில் கதாபாத்திரங்களை நன்கு சித்திரிக்கவில்லையே என்று கூறியிருக்கிறார். இத்தகைய குறைகளை, சி.வி. அவர்கள், தனது நாவல்களில் நீக்கிக் கொண்டுவிட்டார். ஆனால், நான் இத்தகைய விமரிசகர்களுடன் இணங்கிப் போக விரும்பவில்லை. சி.வி. அவர்கள் மேற்குறிப்பிட்ட பிள்ளைமார்களை-எதேச்சதிகாரப் போக்குள்ளவர்களை, பாராட்டும் தன்மை படைத்தவர் அல்ல. அவர்கள் அயோக்கியர்களே என்பதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை. அரசனை அரியணையிலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்கிற இவர்களின் நோக்கம், பொது நலத்தின்பால் அமைந்தது அல்ல. தங்க்ளுக்கு அதிகாரம் கிட்ட வேண்டும் என்கிற பேராசையின் விளைவாகவே, இந்த முயற்சியில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். சி.வி. அவர்களின் காலத்தில், இவர்களைப் பற்றிய அச்சமூட்டும் கதைகள் பரவலாக வெளியில் தெரிய வந்தாலும், எவரும் அவற்றை நம்பத் தயாராக இல்லை. இந்த பெரும் பிள்ளைமார்கள், மக்களின் உரிமைக் காப்பாளர்களாக

விளங்குவதாக, சில நவீன சரித்திர ஆசிரியர்கள், அவர்களுக்குப் பாதுகாப்பு வளையம் சூட்டி, அரவணைத்துக் கொண்டு போகவே விரும்பினார்கள். ஆனால், குற்றமற்ற அவர்களுடைய வீட்டுப்பெண்கள் தண்டனை அனுபவித்ததை முழுதும் நியாயமற்றது எனக் கருதியதுடன் அவர்களில் சிலரை, பின்பு தான் எழுதிய நாவல்களில் உயிரோவியமாக்கினார் சி.வி. அவர்கள். ஒரு பெண்மணி மட்டும், கழக்கூடத்துப் பிள்ளை குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு அழிக்கப்படுவதை, ஒரு முக்கிய உதாரணமாக காட்டுகிறார். காரணம், எட்டுகழக் கூடத்துக் குடும்பங்களில், இந்த கழக்கூடத்துப் பிள்ளை மட்டுமே, 'மார்த்தாண்ட வர்மா'வில் பழிவாங்கும் மனநிலையில் இருந்ததைக் காண முடிகிறது. குழப்பத்திலும், வருத்தத்திலும் ஒலிக்கும் அவரது குரலில் வன்மத்தின் சூடு பறந்தது. மேலும், அவரது அத்தை மகனும் 'தர்மராஜாவில்' பல நிகழ்ச்சிச் சுழற்சிகளில் மீண்டும் தலைகாட்ட வேண்டும் என்கிற நியதியும் இயற்கையாகவே நிலவியது. இந்த குடும்பத்தின் ஆண் வாரிசாகிய ஹரிபஞ்சானன், ஏமாற்று வித்தைக்காரனாகவும், தந்திரசாலியாகவும், புறம்பானவற்றுக்கு ஆதரவு அளிப்பவனாகவும் இருந்தான். தர்மராஜா நாவலானது ஹரிபஞ்சானன் சோக வரலாற்றை குறிப்பாக, அவரது தவறான நடத்தைகள் மற்றும் பேராசைகளின் விளைவாகப் பேரழிவைச் சித்திரிப்பதாக, ஒருவர் எளிதில் கூறிவிட முடியும். பஞ்சானன் கடைசியாக, தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் நிலையிலும்கூட நாம் அவரிடம் அனுதாபத்தைக் காட்ட விரும்பவில்லை. ஏனெனில் தனது தவறுகளால் வகையாகச் சிக்கிக் கொண்டு தீய நோக்கத்துடன் சிந்தித்தும், செயல்பட்டும் வந்ததின் விளைவாக, எந்த வகையிலும் தப்பிக்க முடியாத அளவுக்கு அவரது நிலைமை மோசமாகியது. இந்த முடிவுக்கு அவர் வர நேர்ந்தது பொருத்தமே என்கிற நினைப்பே நமக்கு ஏற்படுகிறது.

சி.வி. அவர்களுக்கு எதிராக கூறப்படும் மற்றொரு குற்றச்சாட்டு, அவரது நாவல்கள் அனைத்தும் நாயர் சமூகத்தைச் சுற்றியே வளைய வருகிறது என்பதாகும். ''எனவே சி.வி. அவர்களின் சரித்திர நோக்கு, மிகக் குறுகலானது.'' என்று, பிரபல மலையாள விமரிசகர், எம்.பி.பால் குறிப்பிட்டுள்ளார்.

''ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து, இந்த நாவல் எழுதப்பட்டிருக்கிறது. சில நாயர் குடும்பங்களின்

வரலாறுகள்தான், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சரித்திரம் எனத் தோற்றமளிக்கும் வகையில் இந்த நாவல், சி.வி. அவர்களால் சாமர்த்தியமாகப் புனையப்பட்டிருக்கிறது'' என்கிறார் பால். இது மிகக் கடுமையான குற்றச்சாட்டு என்பதில் சந்தேகமே இல்லை. இதை நம்மால் எளிதில் புறக்கணித்துவிட இயலாது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டு முழுவதும் உண்மைதானா? 'வகுப்புவாதம்' என்கிற வார்த்தைக்கு, வெப்ஸ்டர் சொல்லகராதியில், 'மத நல்லிணக்கத்தின் ஆதார தளத்தை அடிப்படையாகக் கொண்ட, ஒரு சமூக, அரசியல் இணைவு' என்றே இதற்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவிலோ வகுப்புவாதம் என்பது மதத்தைவிட, ஜாதியையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. சி.வி. அவர்கள் உண்மையிலேயே தனது நாயர் தன்மையை குறித்துப் பெருமிதப்பட்டார். மேலும், அவரது காலகட்டத்தில் மட்டுமின்றி, நெடுங்காலமாகவே, கேரள வரலாற்றில் செல்வாக்கு மிக்க ஆதிக்க சக்தியாக நாயர் சமூகம் விளங்கியது. ஆயினும், இவர்கள் அந்தணர் மற்றும் க்ஷத்திரிய சமுதாய மக்களைவிட, சமூக மதிப்பில் சற்றுத் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டார்கள். ராணுவத்தில் அவர்களின் தனித் தகுதிக்கு மதிப்பளிக்கப்பட்டது. உயர் பதவிகள் அனைத்தும், உரிமையின் அடிப்படையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. சி.வி. ராமன் பிள்ளை அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதைப்போல், திவான் கேசவதாஸ் அவர்களின் நிர்வாகத் தலைமையிலான திருவிதாங்கூர் சமஸ்தானம், இவர்களுக்குப் பொற்காலமாக விளங்கியது. நாயர்களே, தேசத்திற்காகப் போரிட்டார்கள், இவர்களே நாட்டையும், அரசையும் இரண்டு மைசூர் சுல்தான்களின் பிடியிலிருந்து விடுவித்துக் காப்பாற்றினார்கள். திருவிதாங்கூர் மன்னர், நாயர் சமூகத்தைச் சேர்ந்தவர் எனத் தவறுதலாகக் கருதிக் கொண்டு, திப்புசுல்தான் அவரை ராமன்நாயர் என்றே அழைத்தார். இத்தகைய சம்பவங்களை நினைவில் கொண்டால், சி.வி. அவர்களின் நாவலில், எவ்வாறு நாயர் சமூகத்தின் மதிப்பும், பாதிப்பும், ஆக்கிரமிப்பும் அதிகரிக்க நேர்ந்தது என்பது நன்கு புலனாகும். ஆனால், வகுப்புவாதம் என்று இதை விமரிசிப்பது, முன் எச்சரிக்கையற்ற கண்டனமாகவே அமையும்!

சி.வி. அவர்களின் கதாபாத்திரங்களில், தீயவர்களாகச் சித்திரிக்கப்பட்டிருப்பவர்கள் பலரும் நாயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாயர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, இந்த தீயவர்களை

அவர் விட்டுவைக்கவில்லை. ஒவ்வொரு கதாபாத்திரங்களின் அமைப்பும், அரசருடன் இணைந்தோ அல்லது மன்னருக்கு எதிராகவோ அணிவகுத்து நிற்பதேயாகும். நல்ல குண இயல்புமிக்கவர்கள், அரசருடன் இணைந்தும், கெட்ட நடத்தையும் தீய குணங்களும் கொண்டவர்கள், அரசருக்கு எதிரிகளாக, எதிர் அணியில் இருப்பவர்கள் என்கிற வகையில், கதாபாத்திரங்கள் புனையப்பட்டிருக்கிறது. இதில், சுவாரஸ்யமான அம்சம் என்னவெனில், அவரது நாவலில், தீயவர்களான ஒரு சில கதாபாத்திரங்கள் வீரமிக்க கதாநாயர்களின் வடிவத்தில் சித்திரிக்கப் பட்டிருந்ததுதான். இவர்கள், தங்களைப் பெரிதும் கவர்ச்சி உடையவர்களாகவும், மிகுந்த பலசாலிகளாகவும் கருதினார்கள். இது, இந்த நாவலாசிரியரின் கதகளி கலாசாரத்தின் வெளிப்பாடாக இருக்கலாம், கடவுளர்களை விட அரக்கர்களே, பெரும் வியப்பை ஏற்படுத்துபவர்களாக இருப்பதையே இது நினைவுபடுத்துகிறது. எனினும், இவர்களில் எவருமே தங்களுடைய வீரதீர சாகச முயற்சிகளில் வெற்றியடைய முடியவில்லை. இவர்களில் ஒரு சிலர் புகழுடன் தோல்வியைத் தழுவுகிறார்கள். மற்றவர்கள், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட விதியின் கணிப்புப்படி படுகேவலமாகத் தோல்வி அடைகிறார்கள். இதுவே, இவர்களின் தோல்வி சரிதத்தில் காணப்படும் வித்தியாசம்!

இந்த இடத்தில் நாம் மற்றொன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சி.வி. அவர்கள், முஸ்லிம் இன மக்களை அவர்களின் கேரள வாழ்க்கைப் பின்னணியுடன், தனது படைப்புகளில் புகுத்திய முதல் நாவலாசிரியர் என்பதே அது. புகழ் பெற்ற ராஜா கேசவதாஸ் அவர்கள் அவரது இளமைக் காலக் கல்வி வாய்ப்பினை, பொக்குமூசா மரைக்காயர் என்கிற ஒரு இஸ்லாமியச் சீமான் மூலமே அடையப் பெற்றார் என்பது வரலாற்று உண்மையாகும்.

கேசவதாஸ் அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் இந்த முஸ்லிம் பிரமுகரிடம் நன்றி உடையவராயிருந்தார். அரண்மனையில் சமஸ்தானத்தின் பதவிப் பொறுப்புடன், முதன் முதலாக நுழைந்தபோதும், கேசவதாஸ் அவர்கள், தன்னுடைய இளமைக்காலத்தில் உதவிய, இந்த இஸ்லாமியச் செல்வந்தரை நன்றியுடன் நினைவு கூர்கிறார். போலியான மனதுடன், சி.வி. அவுர்கள் வரலாற்றைத் திரித்து எழுத முடியாமல் போயிருக்கலாம் என்று சிலர் கூறலாம். இது உண்மையே. ஆனால், அவர்

விரும்பியிருந்தால், அதை நாசூக்காகத் தவிர்த்திருக்க முடியும் என்பதையும் கவனிக்க வேண்டும். மேலும், 'ராமராஜபகதூர்' என்கிற அவரது மற்றொரு நாவலில், திப்புசுல்தான் இடம்பெறுகிறார். சி.வி. அவர்கள் நினைத்திருந்தால், இந்தப் பாத்திரத்தை, எதேச்சதிகாரக் கும்பல்களால் சூழச்செய்து, அவர்களின் கைப்பாவையாகச் செயல்பட்டவர் என கொச்சைப்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவ்வாறு திப்புசுல்தானைக் கேவலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடாமல், தனது பெருந்தன்மையும், சிந்தனைச் செறிவுமிக்க தூரிகையினால், இனிய உணர்வுகளும், நல்ல எண்ணங்களும் கொண்ட மாவீரனாக, அவர் காலத்தால் மாசுபடாத எழிலோவியமாகத் திப்புவை தீட்டினார். திப்புவின் உயர்வான குணங்களுக்கு ஓர் உதாரணமாக, விறுவிறுப்பான ஒரு சம்பவத்தையும் சி.வி. அவர்கள் வடிவமைக்கிறார்: நிராதரவான சாவித்ரியை, பலாத்காரப்படுத்த முற்பட்டபோது திப்புசுல்தான், கடுமையாகக் கண்டித்ததுடன் தண்டனை தரும் விதத்தில், போர் முனைக்குத் துரத்திவிட்டார்! சி.வி. அவர்களின் மார்த்தாண்ட வர்மா நாவலில், நாம் ஒரு வயோதிக ஹக்கீம், அவரது மகன் மற்றும் அவரது இருப்பிடக் கூடாரம் ஆகியவற்றைப் பற்றிய சில குறிப்புகளை அறிகிறோம். இந்த நாவலில் மொத்தம் ஆறு முஸ்லிம் கதாபாத்திரங்களை அவர் படைத்திருக்கிறார். இவர்கள் அறுவரும் ஒன்றிணைந்து அனுசரித்துப் போகும் சிறு குழுவினராகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். தனது இளமைக் காலத்தில், சாதனை முயற்சிகளில் ஈடுபட்டபோது, தனக்குப் பல வகைகளிலும் உதவிபுரிந்த, தன்னுடைய முஸ்லிம் நண்பர்களுக்கு நன்றிகாட்டும் விதத்தில், சி.வி. அவர்கள் இவ்வாறு, தனது படைப்புகளில், கண்ணியமான முஸ்லிம் கதாபாத்திரங்களைப் படைத்து கௌரவப்படுத்த விரும்பியிருக்கலாம். சுருக்கமாகச் சொல்வதானால், சி.வி. அவர்களிடம் நாயர் குலத்தன்மை என்பது பரந்த மனிதாபிமான நோக்குடன் அமைந்திருந்தது. அது, மற்றவர்களின் சுயமரியாதை உணர்வுகளுக்கு உறுத்தலாகவோ, சவாலாகவோ இல்லாமல், அனைவரையும் அரவணைத்து, நேசம் பாராட்டக்கூடியதாகவும் விளங்கியது. எனவே, அவரது நாவல்களில் பெரும்பான்மையான கதாபாத்திரங்கள் நாயர் சமூகத்தை சேர்ந்தவர்களாகயிருப்பது இயல்பே. மேலும், இந்த நாயர் கதாபாத்திரங்கள் நடுநாயகமாகயிருந்தார்கள். பிற சமூகத்தைச் சேர்ந்த பலரும், ஓரங்களில் தலைகாட்டினார்கள். தமிழ் பிராமண சமூகத்தைச் சேர்ந்த பலர் திருவனந்தபுரம் கோட்டையில்

இருந்தார்கள். அவர்கள், இன்றும் அங்கு இருக்கிறார்கள். தர்மராஜா நாவலில் இடம் பெற்றுள்ள மொத்த கதாபாத்திரங்களான இருபத்தொன்பது பேரில், மூன்று பேர், தமிழ் பிராமணர்கள்! அடாடா! எத்தகைய சுவாரஸ்யமான கலவை! இந்த மூன்று அந்தணர்களில், மாமா வேங்கடன் அரண்மனையில் சமையல்காரர். மென்மையான இதயம் கொண்டவர். இசையிலும், உல்லாசத்திலும் தன்னை மறந்து லயிக்கும் பரமரசிகர். அடுத்து சாம்ப தீட்சிதர். இவர் பெரிய அறிவாளி. பலருக்கு பரம்பரை குருவாக மூன்றாவதாக அண்ணாபட்டர். இவர் காசு பணத்திலேயே குறியாகயிருக்கும், அநியாய வட்டி வாங்கும் 'ஈட்டிக்கார' குணமுள்ளவர். இந்த மூன்று கதாபாத்திரங்களும் வெவ்வேறான குணசித்திரப் படைப்புகளாகச் சித்திரிக்கப்பட்டிருப்பினும், ஒன்றோடு ஒன்றிணைந்த கதா பாத்திரங்களாகவும் திகழ்ந்தார்கள். இவர்களுடைய பேச்சுத் தமிழ் ரசிக்கத் தக்கதாகவும், உயிரோட்டமுடையதாகவும் இருந்தது. நாவலாசிரியர் சி.வி. அவர்களுக்கு இதில் நல்ல தேர்ச்சி இருந்ததனால், இந்த மூன்று கதாபாத்திரங்களின் பேச்சுத் தமிழில் இனிமையும், ஜீவனும் இருந்தன. சி.வி.யின் இயல்பான நகைச்சுவை உணர்வும், கதகளி இசையில் அவருக்கிருந்த ஈடுபாடும், மாமா வேங்கடன் என்கிற கதாபாத்திரத்தின் உரையாடல்களின் மூலம் வெளிப்பட வைத்து, அவர் குதூகலம் அடைந்தார்.

இனி, சி.வி. அவர்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் கடுமையான குற்றச்சாட்டுக்களைப் பற்றிக் கவனிப்போம். 'நாவல்களில் அழுத்தமான உத்திகளைக் கையாள்கிறார். நாவல்களின் துவக்கத்தில் காணப்படும் இத்தகைய நெருடல்கள், இறுதிவரை நீடித்து இதுவே, அவரது இயற்கையான வெளிப்பாடாக அமைந்துவிடுகிறது!' என்பதே, விமரிசகர்களின் குற்றச்சாட்டு. நாவலில் நீண்ட சமஸ்கிருதச் சொற்பிரயோகங்கள் நிறைந்துள்ளன. பெரும்பாலும் இது, சம்புவைப் போல் தனித் தன்மையுள்ளதாகவும் விளங்குகிறது. இது, 'நாளிகேரபாகம்'(தேங்காய்) போன்றது வெளிப்புறத்தில் முரட்டுத் தோற்றத்தையும், உட்புறம் இனிமையான சுவையும் கொண்டதாக உள்ளது. சி.வி. அவர்களின் பல்வேறு மொழித் தேர்ச்சி, அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் கற்பனை வளம் குறித்து எந்தவிதச் சந்தேகமும் எழுவதற்கு வாய்ப்பில்லை. மிக உயர்ந்த அறிவாற்றலின் விளைவாக, இத்தகைய திறமைகள் வசப்படும். அவர் பயன்படுத்தியுள்ள

சொற்கள் பலவும் புராதனமாகவோ, கடினமாகவோ, குறும்புத் தனமாகவோ இருப்பினும், அவற்றின் நயமிக்க இசையின் இனிமையும், இதயத்தைப் பிணைக்கும் நெருக்கமும், பொருத்தமான இடத்தில் சிறப்பாகப் பொருந்தி நிற்கும் எதுகை-மோனை ஒப்பனை அழகும் அபாரமாக உள்ளன. இது சோழ மன்னர்கள் நிர்மாணித்த கலை எழில் மிக்க, வானத்தை முட்டும் கோயில்களின் கோபுரங்கள் போல் பொலிவது. கோபுரங்களைப் போல், அவரது தொடர் வாக்கியங்கள் ஒன்றின் மேல் மற்றொன்று அடுக்கப்பட்டு, பிரமாண்டமான உயரத்தைக் கொண்டதாக அமைந்து, வாசகர்களையும், விமரிசகர்களையும் சக படைப்பாளிகளையும் பிரமிப்பில் ஆழ்த்தியது. ஒரு சமயம் நண்பரொருவர் பதிப்பிக்கவே முடியாத சி.வி. அவர்களின் விநோத உத்திகளைப் பற்றி கண்ணியமுடன் எதிர்த்து, விமரிசனம் செய்தபோது, சி.வி. சொன்னார்: ''நாம் பொதுவாகவே தீவிரமான விஷயங்களைப் பற்றி பேசுவதில்லை. வெறும் வம்புப்பேச்சு வார்த்தைகளுடன் திருப்தியடைந்து விடுகிறோம். அது இலக்கியத்திற்கு நல்லதல்ல. தீவிர விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கு நாம் அறிந்து கொள்ள வேண்டும்.''

முக்கிய விஷயங்களைப் பற்றி எழுதுகிறோம் என்கிற உறுதியும் நினைப்பும் அவருக்கு நிறையவே உண்டு. முக்கிய விஷயங்களைப் பற்றி எழுதுவதற்கு மொழியை, இழை நெசவாகப் பயன்படுத்திக் கொள்வதே அவரது உத்தியாக அமைந்திருந்தது. இந்த குணம் அவரது ரத்தத்துடன் ஊறிவிட்ட இயல்பாக நிரந்தரமாகிவிட்டது. ஒரு முறை உச்சத்தைத் தொட்டபிறகு அவரால், அதற்குக் கீழ்ப்பட்ட நிலைக்கு இறங்கி வரமுடியவில்லை. சரித்திர நாவல்களில் அவர் கையாண்டிருக்கும் உத்திகள், முற்றிலும் நியாயப்படுத்திவிட முடியாததாகும். ஆயினும் நாம் இவற்றைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், பிரேமாமிர்தம் சமூக நாவலில் அவர் மேற்கொண்டுள்ள உத்திகள், சகித்துக் கொள்ள இயலாத அளவிற்கு மிகக் கடுமையாக உள்ளன. மலையாள மொழியை அறிந்தவர்கள் தவிர, மற்றவர்கள் மொழிபெயர்ப்பு வடிவத்தில், அவரது படைப்புகளின் முழுச் சுவையை உணர்ந்து கொள்வது கடினம். காரணம், சி.வி. அவர்களின் மேதாவிலாசத்தைப் பகரும் விதவிதமான சொற்பிரயோகங்களும், சமஸ்கிருத மேற்கோள்களும், மொழிபெயர்க்கப்படும்போது, உயிரோட்டத் தன்மை சிதைவது, தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. சில

உதாரணங்களைப் பார்ப்போம். காலதேவனான எமனைப் பற்றியது இது: 'உலகாளும் மாமன்னரிலிருந்து, அனாதைப் பரதேசி வரையில், துயரங்களும், மரணமும் அனைவருக்கும் பொதுவானதாகும் என்பது இயற்கையின் நியதி. எனவே, உயிர்களைப் பறிப்பதற்காக, எமன் தலைமையில் வானுலகத்தில் ஒரு தனி இலாகா தேவையில்லை. ஒவ்வொருவரும் காலதேவனை மனதார வெறுக்கிறார்கள். ஆனால், மனத்திடம் இல்லாத மனிதர்களோ, மரண தேவன் தயக்கத்துடன் மறைந்திருந்து, தம்மை விழுங்கக் காத்திருப்பதாக அஞ்சுகிறார்கள். இவ்வாறான எதிர்மறைக் குணங்கள் நகைப்பிற்கிடமாக உள்ளது. மேலும், இத்தகைய மனக்கிலேசங்கள் பலவகைப் பட்டதாகவும் இருக்கிறது. இது எத்தகையதாகயிருப்பினும், மனிதன் இதனால் பெரிதும் நிலை குலைந்து, மனமுடைந்து போவதை அனுபவத்தில் காண்கிறோம். குறிப்பாக, மரணத்தைப் பற்றிய நினைவும், உணர்வும், மனிதச் சிந்தனைகளில், வாழ்க்கையில், பெரும் சோகத்தை ஏற்படுத்தும் நிரந்தர அச்சுறுத்தலின் நிழலாட்டமாக உள்ளது. மரண தேவன், ஆலயங்களில் தனக்கென்று தனியாக ஒரு சன்னதிக்கோ அல்லது பக்தர்களின் காணிக்கைக் குவியல்களுக்கோ ஆசைப்படாமல், உலகத்தின் பாவக் கழிவுகளை வெளியேற்றும் கடமையைச் செய்யும் மந்திரவாதியாகச் செயல்படுகிறார். மேலும், எமன் ஒரு மருத்துவ நிபுணர்போல், மனித குலத்தின் துயர்களைத் தணிக்கும் உதவியையும் செய்கிறார். இத்தகைய மனிதகுல மருத்துவர், மாவீரனான திப்புசுல்தானுக்கு தன்னுடைய பாசக் கயிற்றின் வல்லமையைக் காட்டுவதற்கு புறப்பட்டபோது, எந்நிலையிலும் அஞ்சா நெஞ்சம் படைத்த திப்புசுல்தான், தலைவிதியை விளக்கும் தன்னுடைய ஜாதகத்தை ஆராயும் அக்கறையை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுவதையும் ஒரு பெருங்கடலாக மாற்றும் சபதத்தை மேற்கொண்டான்.'

இதோ இன்னுமொரு பகுதி:

திப்புவின் கூடாரத்திலிருந்து பொங்கி வரும் வெள்ளப் பெருக்கிலிருந்து, தனது அத்தையைக் காப்பாற்றும் ஆக்ரோஷமான துணிவு முயற்சியை மேற்கொண்ட சந்திராகரன் இதுபற்றி விவரிப்பதை விளக்கும் வகையில் அமைந்துள்ள பகுதி வருமாறு: 'சுயநலமிக்க, திப்புசுல்தானின் படைவீரர்களினால் சூழப்பட்ட நிலையில், இந்த முதிய மனிதன் துணிவு பெற்றவனாகி,

பயங்கரவேகத்துடன் வெளியே ஓடிவந்து, மாந்தோப்புகளால் மறைக்கப்பட்டிருந்த கடலோரத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாங்கான இடத்தை அடைந்தான். வெறுப்பின் விரக்தியில் உச்சத்தை அடைந்திருந்த சாவித்ரியும், இந்த முதியவனின், முன்கூட்டி அறிய முடியாத நடவடிக்கைகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டாள். சுற்றிலும் இருள் அதிகரித்துக் கொண்டு வந்தது. மழையும் வானத்தைக் கிழித்துக்கொண்டு, பயங்கர வேகத்துடனும், சத்தத்துடனும் கொட்டத் துவங்கியது. மழையின் கொட்டமும் கொட்டு மேளச் சத்தமும், சாவித்ரி மற்றும் சந்திராகரன் ஆகிய இருவரின் செவிப்புலன்களைக் கிழித்தன. முடிவுகாலம் நெருங்கிவிட்டதாக நினைத்துக் கலங்கினார்கள். ஆந்தைக் கண் படைத்த சந்திராகரன் மட்டும் அங்கும் இங்கும் புகலிடம் தேடி ஊர்ந்து செல்லும் விஷப் பிராணிகளைக் கண்டதும் மட்டுமின்றி, அவற்றுடன் போராடுவதிலும் மீதி இரவைக் கழித்தான். அதே சமயம், தனது சிரிப்பூட்டும் நடிப்புத் திறமையினால், சாவித்ரியையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி, தைரியப்படுத்திக் கொண்டிருந்தான். சூதும், கபடமும் நிறைந்த சந்திராகரன், தன்னைச் சுற்றிப் படர்ந்துள்ள அடர்த்தியான இருளை நோக்கி, கண்களை அகலவிட்டதுடன், மனதிற்குள், தனது கடந்த கால வாழ்க்கையைப் பற்றியும் அசைபோடலானான். அவன் நடத்திய வாழ்க்கை, உள்ளபடியே நல்ல, மனித வாழ்க்கையில் சேர்த்திதானா என்கிற சந்தேகம் எழும்!

அன்பும் கருணையுமற்ற, அசுரத்தனமான வாழ்க்கை. சுயநலமும், அதிகார போதையும் நிறைந்த வாழ்க்கைக்கு சந்திராகரனின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. அவன் பெரிய, விசாலமான கோட்டைகளைக் கட்டினான். குபேரனே பொறாமைப்படுமளவுக்குச் செல்வத்தையும், புகழையும் அடைந்தான். அதிகாரத்தை வசப்படுத்திக் கொண்டு, தசகண்டன் (ராவணன்) போல், ஒரு சாம்ராஜ்யத்தையே கட்டி ஆண்டான். அவனது சாம்ராஜ்யம் வெவ்வேறு நாடுகளின் ஒருங்கிணைந்த கூட்டாகயிருந்தது. இதற்கு, அவனே மாபெரும் தலைவனாக விளங்கினான். அவன் தலைமைக்கு எவருமே போட்டியோ, பொறாமையோ கொள்ளமுடியாத அளவிற்கு, மிகுந்த பராக்கிரமசாலியாக இருந்தான். வலிமை பொருந்திய அரசர்கள் எல்லோரும், அவனைக் கண்டதும், நெடுஞ்சாண்கிடையாக, அவன் காலில் விழுந்து வணங்கினார்கள். அவனுடைய வெறும் கை அசைப்பே, தாங்கள் அனைவரும் இவனுக்குக் கட்டுப்பட்டவர்கள்

என்கிற அச்சத்தையும் எச்சரிக்கையையும், அரசர்களின் இதயங்களில் ஏற்படுத்தியது. இந்த அளவிற்கு, நிலமாந்தர் களையும், மன்னர்களையும் நடுநடுங்கச் செய்து கொண்டிருந்த வாழ்க்கை, அவனுடையது! இவை எல்லாம் பொய்யாய், பழங்கதையாய், நிராதரவாகிப் போன இந்த இக்கட்டான நிலையிலும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வைரக்கற்கள் பதிக்கப்பட்ட, அவனுடைய இடுப்புக்கச்சை, கண்களை உறுத்தும் கோடிப் பிரகாசத்துடன் பிரமிப்பூட்டும் விதத்தில், கொட்டும் மழையின் இடையே ஒரு விநாடி ஒளிக்கீற்றாகப் வெளிச்சத்தில் பளபளத்தது. எந்தவொரு சோதனையும் அவனுடைய பொருளாசையைக் குலைத்துவிட முடியாது என்பதற்கு இது ஒரு உதாரணமாகவும் திகழ்ந்தது. எப்படியெல்லமோ மகோன்னதமாக, செல்வாக்கின் உச்சியில் இருந்த, தன்னுடைய நிலை படுபாதாளத்திற்குச் சரிந்துவிட்டதை நினைத்து தலைவிதியை நொந்து கொண்டான். மழை வேகம் அதிகரித்து நிலைமை படுபயங்கரமாக மாறியது. விதியின் கோர விளையாட்டின் ஒரு அங்கமாக, அந்த நீண்ட மழை இரவு அமைந்தது.

மழையின் பிரவாகம் சந்திராகரன் அடைக்கலம் புகுந்திருந்த மரத்தின் உச்சியைத் தொட்டது. வெள்ளத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், அந்த மரம், ஆட்டம் காணத் தொடங்கியது. சாவித்ரியும், சந்திராகரனும், பயத்தின் உச்சத்தில் உறைந்து போனார்கள். மரத்திலிருந்து பாதுகாப்பான மற்றொரு இடத்தைச் சென்றடையும் முயற்சியில் இறங்கினார்கள். ஆனால், அதற்குள்ளாக, அந்த மரம் வேருடன் சாய்ந்து நிராதரவான இவ்விருவரையும், நீரில் தலைகுப்புறத் தள்ளியது. அப்போது காலைநேர மேகங்கள் தென்பட்டு இவ்விருவரின் பிரச்னைகளின் பயங்கர நிகழ்வுகளுக்கு நிவாரணம் அளித்து, அபயம் தந்தது.'

மேலோட்டமாக நுனிப்புல் மேயும் இயல்புள்ளவர்கள், இது ஒரு புனைவியல் போக்கு என முடிவு செய்யக்கூடும். ஆனால், மலையாள மொழியும், மணிப்பிரவாள நடையும், சி.வி. அவர்களின் கற்பனை ஆற்றல் மிக்க சொல்லாட்சிப் பிரயோகங்களும், புராண வெளிப்பாடுகளும், நன்கு மெருகிடப்பட்ட பண்டைய சொற்களும், கச்சிதமான முறையில் மிக நேர்த்தியாக அமைந்திருக்கிறது. தாரை, தம்பட்டம் மற்றும் முரசு போன்ற தோல் வாத்தியங்களிலிருந்து எழும்பும் இனிய இசையைப் போன்று, ரசிகர்களைப்

பரவசப்படுத்தும் வெற்றிகரமான உத்தியாக இது விளங்கியது. எனவே, இதன் ஈர்ப்பில் வசப்பட்ட நாம், அதனுடைய சட்டதிட்ட வரையறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் ரசனைக்கே முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்கும் ஆர்வமிக்க வாசக ரசிகர்களானோம்!

அவரது உரைநடையைக் கண்டு அஞ்சி ஒதுங்கியவர்களும் கூட, கதாபாத்திரங்களின் சம்பாஷணைப் பகுதியின் சிறப்பைப் பெரிதும் புகழ்ந்தார்கள். பிரபல விமரிசகரும், நாடகாசிரியருமான என்.கிருஷ்ண பிள்ளை, சி.வி. அவர்களின் தனித்தன்மைமிக்க உரையாடல் பகுதிகளைப் பற்றிச் சிலாகித்து ஒரு தனி நூலே எழுதியுள்ளார். இதிலிருந்து சி.வி. அவர்களின் மேதாவிலாசம் நன்கு புலனாகும். இந்த நூலில், திரு.கிருஷ்ணபிள்ளை, சி.வி. அவர்களின் நாவல்களில் நிறைந்துள்ள விதவிதமான சம்பாஷணைப் பகுதிகளைப் பற்றியும், அவற்றின் நயம் மற்றும் மகோன்னதமான நடைச் சிறப்பு குறித்தும் ஒரு புள்ளிவிவர ஆய்வையே, தந்துள்ளார்: 'மார்த்தாண்ட வர்மாவில் 64 சதவிகிதமும், தர்மராஜாவில் 47 சதவிகிதமும், ராமராஜ பகதூரில் 41 சதவிகிதமும், சம்பாஷணைப் பகுதிக்கென்றே சி.வி. அவர்கள் ஒதுக்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், அச்சு வடிவம் கண்ட அவரது நாவல்களின் சரிபாதி இடத்தை கதாபாத்திரங்களின் உரையாடல்களே ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை அறியலாம் என்கிறார் கிருஷ்ண பிள்ளை.

நாம் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். 1900-1940 வரையிலான, நான்கு தலைமுறையைச் சேர்ந்த காலகட்டத்தில், கேரளாவின் தென்பகுதிகளில், நாடக மேடை ஜாம்பவான்களால், சி.வி. அவர்களின் நாவல்கள் நாடகங்களாக அரங்கேறி, மக்களின் மகத்தான ஆதரவையும், வரவேற்பையும் பெற்றன. நகைச்சுவை உணர்வுமிக்க அவரது நாடகங்களும், தீவிர சிந்தனையாளர்களுக்கு, தெவிட்டாத விருந்தாக அமைந்தன. அவரது காலத்தில், பிரபலமான நாவலாசிரியராக சி.வி. அவர்கள் விளங்கியபோதும், அவரால் நாடகங்களை உருவாக்க இயலாமல் போனது ஏன் என்கிற கேள்வி எழுவது இயல்பே. அவரது நாவல்கள் அனைத்துமே, நாடகங்களாகவும் அமைந்துள்ளன என்பதே, இதற்கான தெளிவான பதிலாகும்! இதையே, வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அவரது நாவல்கள் யாவும், செறிவான நாடக

வளத்துடன் பின்னப்பட்டுள்ளது எனலாம். ஒவ்வொரு நிகழ்வையும், சூழ்நிலையையும், சி.வி. அவர்கள், உணர்ச்சிகரமான நாடகமாகவே கண்டு, அதன்படி உயிரோட்டமாகச் சித்திரிக்கும் சிறப்பு பெற்றிருந்தார். இந்த நாடக பாணி உத்தியில், அவர் எதிர்மறையான கதாபாத்திர ஜோடிகளை உருவாக்கி, அவர்களின் மூலம் மனிதர்களின் பல்வேறு வகைப்பட்ட குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறார். குறிப்பாக, அவரது கதாநாயக இரட்டையர்களான, கேசவ பிள்ளை – கேசவ உண்ணித்தான், கேசவ பிள்ளை – அஜூநீதாசிம்ஹா, கேசவ பிள்ளை – பெரிஞ்சக்கோடன் ஆகிய எதிர்மறை ஜோடிகளின் உரையாடல்களில் காணப்படும் வீர்யம், உரசிக்கொள்ளும் போர்வாள்களின் கூர்மையைவிட, அனல் கக்குவதாகவும், ஆக்ரோஷமிக்கதாகவும் உள்ளன. இந்த சம்பாஷணைகளில், தீப்பிழம்புகளின் பொறி பறப்பதை உணர முடியும். கதாபாத்திரங்களின் தன்மைகளுக்கு ஏற்றவிதத்தில் சிறப்பான முறையில் உரையாடல்களை அமைப்பதில் அவர் பெரும் கவனம் செலுத்தியிருப்பதையும் நன்கு அறிய முடிகிறது. படைப்பிலக்கியப் பணியில், சிலர் கூறுவது போல், உணர்ச்சி மிக்க கட்டங்களைக் கூறும்போது, அந்த சம்பவங்களினூடே சி.வி. அவர்கள் முழுவதும் ஒன்றிவிடுவார். அவரது கண்கள், அந்த சமயத்தில் சுழன்று சுழன்று உணர்ச்சி ஒளியை உமிழும். இத்தகைய சந்தர்ப்பங்களில், அவர் தன்னையே நாவலில் வரும், சம்பந்தப்பட்ட கதாபாத்திரமாக மாற்றிக் கொண்டுவிடுவார். தன்னுடைய ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் உயிரும், சதையும் கலந்து, வாழ்கின்ற மனிதர்களாகவே அவர் கருதினார். தன்னுடைய படைப்புகளில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட எஞ்ணிக்கையில், மக்களின் பலதரப்பட்ட பேச்சு வழக்கு முறைகளைக் கையாண்டார். இவ்வாறு அவர் பயன்படுத்திய பேச்சு வழக்கு முறை எவ்வாறிருந்தாலும், அவற்றில் உண்மையின் முத்திரையைப் பதித்தார். ஒரு நூதன வார்த்தை, பழங்காலத்தில் புழக்கத்திலிருந்த ஒரு தொன்மையான சொல் உச்சரிப்பு, சிந்தையில் பதியும் வகையில் ஒரு பழமொழி, நடைமுறை வாழ்க்கையிலிருந்து முதல் தரமான ஒரு மேற்கோள் இவையனைத்தும் தனித் தனியாகவோ அல்லது ஒருங்கிணைந்த கலவையாகவோ அவருடைய படைப்புகளில் இடம் பெற்றது. ஒவ்வொரு கதாபாத்திரமும், நாம் அன்றாடம் சமுதாயத்தில் சந்திக்கும் பல்வேறு குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களை நினைவு படுத்துவதாக இருந்தது. இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான், சி.வி. அவர்கள் தன்னுடைய கதாபாத்திரங்

களைப் பல்வேறு பேச்சு வழக்கு முறைகளைப் பிரயோகிப்பவர் களாக உருவாக்கியிருந்தார். அவரது கதாநாயகர்களும், கதாநாயகி களும், வில்லன் மற்றும் விதூஷகர்களும் நாவல்களிலும், நாடக மேடைகளிலும் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லும், யதார்த்துடனும் உயிரோட்டமிக்கதாகவும், நடைமுறையில் நமக்கு நன்கு பரிச்சயமாகியுள்ளதாகவும் இருந்தன. மேலும், அவரது உரையாடல் வசனங்கள் யாவும் மொழியியல் துறை ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஒரு தங்கச் சுரங்கமாகவும், மதிப்பரிய புதையலாகவும் உதவக் கூடியவை. தற்போது, வழக்கிலிருந்து மறைந்துபோன மிக அபூர்வமான சொற்கள் பலவும், சி.வி. அவர்களின் படைப்புகளில் சாகா வரம் பெற்று விளங்குகிறது.

9
பிரேமாமிர்தம்

சி.வி.ராமன் பிள்ளை பிரேமாமிர்தம் நாவலை 1915ல் படைக்கும் போது அவருக்கு 57 வயது ஆகியிருந்தது. இது ஒன்றுமட்டுமே சமூக அவரது நாவலாகும். அப்போதுதான் தன்னுடைய 'தர்மராஜா'வை எழுதி முடித்திருந்தார். இந்த நாவல் 1914ல் நான்காயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு, வெளியாகியது. இது இன்றளவிலும், நாவல் வெளியீட்டுத் துறையில் பெரிய எண்ணிக்கையாகவே கருதப்படுகிறது. தர்மராஜா அவருக்குப் பெரும் புகழையும், பொருளையும் வழங்கியது. 'மார்த்தாண்ட வர்மா' நாவலுக்குப் பிறகு சி.வி. அவர்களுடைய சிந்தனை ஊற்று வற்றிவிட்டது, என நையாண்டிப் பிரகடனம் செய்தவர்கள் அத்தனைபேரும் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க நேர்ந்தது.

சி.வி. அவர்கள், கடந்தகால நினைவுகளை எப்பொழுது ஒதுக்கிவைக்கத் தீர்மானித்தாரோ, அப்போதே அவருக்குள் ஒரு வலுவான எழுச்சி தோன்றியிருக்க வேண்டும். 'பிரேமாமிர்தம்', அவர் இளவயதில் கண்ட சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது. சுமார் நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதுவதாக, அவர் மழுப்பினாலும், உண்மையில், நிகழ்காலத்தில் வாழும் தமக்கு நன்கு பரிச்சயமுள்ள மனிதர்களையே, கதாபாத்திரங்களாக அவர் சிருஷ்டித்திருக்கிறார்

என்பதை, வாசகர்களால் எளிதில் இனம் கண்டுகொள்ள முடிந்தது. குறிப்பாகச் சொல்வதானால் இந்த நாவலில், 'வித்யுத்ஜிஹவான்' என்கிற விதூஷக கதாபாத்திர உருவில், மனிதர்களைப் பற்றியும், சம்பவங்களைப் பற்றியும் விமரிசிக்கும் நபராக இடம் பெற்றிருந்தவர், சி.வி. அவர்கள்தான் என்பதை சுலபத்தில் உணரமுடியும். மேலும், திருவனந்தபுரத்தைச் சேர்ந்த 'பி.ஏ.' வட்டத்தின் எச்சரிக்கை உணர்வுமிக்க உறுப்பினர்களும் இந்த நாவலில் இடம் பெற்றிருந்தார்கள். இவர்கள் தவிர, அரசுத் தலைமையகத்தைச் சேர்ந்த ஊழல்மிக்க உயர் அதிகாரிகள் பலரும் கதாபாத்திரங்கள் வடிவில் சி.வி. அவர்களின் கூர்மையான பேனா முனையால் தோலுரிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களைத் தவிர, மதிப்பிற்குரிய கிருஷ்ணமேனன் என்பவரையும் இந்த நாவலில் காண முடியும். இவரது உருவில், நாம் சி.வி. அவர்களின் முழுச் சாயலையும் காணலாம். அரசு அலுவலகங்களில் பணியாற்றும் எதேச்சதிகாரப் போக்கும், ஆணவமும் மிகுந்த அதிகாரிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்வதற்கு, சி.வி. அவர்கள், தக்க சமயத்திற்காகக் காத்திருந்தார். இந்த வகையில், இந்த நாவலில் மணிகாந்தன் என்கிற கதாபாத்திரத்தை உருவாக்கி அவனை அறிவற்றவனாகவும், தன்னுடைய சக ஊழியர்களைக் கீழ்த்தரமாகவும், முரட்டுத்தனமாகவும் நிர்வகிக்கும் கர்வம் பிடித்தவனாகவும் சித்திரித்து, மனித நேயமும், விவேகமும் இல்லாத அரசு அதிகாரிகளின் மேல் கொண்டிருந்த தன்னுடைய வெறுப்பைத் தீர்த்துக் கொண்டார்.

வேறொரு வழியில் உடனடியாக இந்த ஆத்திரம் பீறிட்டது. மேரி கோரிலி என்பவருடைய 'வெண்டெட்டா' என்கிற நூலை சி.வி. அவர்கள் அப்பொழுதுதான் படித்திருந்தார். அதில், பெண்களின் உயர் குணமாகக் கூறப்படும் விசுவாசத் தன்மை குறித்துப் பெரிதும் கிண்டலும், கேலியும் செய்யப்பட்டிருந்தது. இந்த நூலாசிரியரின் போக்கு சி.வி. அவர்களுக்கு, மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தியது. அவரது துணைவியாருக்கும், மேரிகோரிலியின் கருத்துக்கள் வெறுப்பையும், கசப்பையும் தந்தன. எனவே அவரது எதிர்ப்பு உணர்ச்சி, மேலும் சாணை பிடிக்கப்பட்டு, கிளர்ந்தெழுந் திருக்கலாம்! எனினும், அவரது நல்ல நோக்கங்களின் மொத்த வடிவமாக, இந்த நாவல் அமையவில்லை என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்! வருத்தம் தோய்ந்த எழுத்துக்கள், தத்துவார்த்தமான விளக்கங்கள், யதார்த்தமான நடைமுறைச்

சம்பவங்களில் பொதிந்திருந்த அழுத்தமான உண்மைகள் என பல வகையிலும் கட்டுக்கோப்பாகப் புனையப்பட்டிருந்தாலும், பல காரணங்களால் இந்த நாவல் வெற்றிபெறவில்லை. ஒரு சமுதாய நாவலை உருவாக்கும் விதத்தில் பல ஆண்டுகளாகவே, மிகுந்த விருப்பமுடன் உருவாக்கி வந்த தன்னுடைய மொழி உத்தியைப் பயன்படுத்திக் கொள்ளும் வேட்கையுடன் அவர் செயல்பட்டதும் நாவல் தோல்விக்கு ஒரு முக்கியக் காரணம் எனலாம். அவரது முந்தைய நாவல்களில் காணப்பட்ட 'வக்ரோக்தி' சிறந்த உத்திகளுக்கும் நடை அழகிற்கும் எடுப்பான உதாரணமாக விளங்கி புகழ் பெற்றது. ஆனால், அதுவே இப்போது இந்த நாவலைப் பொறுத்தமட்டில் படுமோசமாக அமைந்துவிட்டது. எந்த ஒரு விஷயத்தையும் நேரடியாகச் சொல்லாமல், சுற்றி வளைத்துக் கூறும் உத்தியைக் கையாள்கிறார் என்பது, சி.வி. மீது கூறப்படும் குற்றச்சாட்டாகும். ஒரே விதமான முகச்சாயலைக் கொண்ட மாறுவேடப் பாத்திரங்கள் மற்றும் தவறுதலான அடையாளங்கள், குறியீடுகள் போன்றவை சரித்திர நாவல்களுக்கு ஏற்றவையே தவிர, சமகால நவீனங்களுக்குப் பொருந்தி வராது. உதாரணமாக, இந்த நாவலில் ஒரு தாய் தவறுதலாக, அவளது மகளைப் போல் அடையாளம் காட்டப்படுகிறாள். இது தவிர, மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில், அந்தப் பெண்ணின் கணவன் குடும்பத்தை விட்டு ஓடிவிடுகிறான். சி.வி. அவர்களின் கற்பனையில் உதித்த இந்த கதாநாயக இளைஞன், சட்டக கல்வி பயின்ற பட்டதாரியாகவும், பெரும் செல்வந்தனாகவும் சித்திரிக்கப் பட்டிருக்கிறான், அசடாகவும், அப்பாவியாகவும் நடந்து கொண்டு கொஞ்சம் கூட சுவையும், கவர்ச்சியும் அளிக்காத நாடக பாத்திரமாக உருவாக்கப்பட்டிருக்கிறான். ஒரு பள்ளிச் சிறுமியைத் தற்செயலாக நோட்டம் விட நேர்ந்ததின் காரணமாக, அவள் மீது கட்டுங்கடங்காத காதல் நாட்டம் கொள்ளும் அளவிற்கு இந்த கதாநாயக இளைஞன் மிக எளிய இதயம் கொண்டவனாயிருந்தான்!

இத்தகைய சம்பவக் கோவைகளின் தொகுப்பான பிரேமாமிர்தம் நாவலை, சம்பந்தா சம்பந்தமற்ற அம்சங்கள் நிறைந்த, சாரமற்ற, வெறும் தகவல்மூட்டை என அலட்சியப்படுத்திவிட முடியாது. இத்தகைய ஒரு படைப்பு, சி.வி. ராமன் பிள்ளை அவர்களின் பேனாவிலிருந்து பிறப்பெடுத்ததற்காக, உண்மையிலேயே நாம் அதிருப்தியும், வருத்தமும் கொள்ள நேரிடுகிறது. எனினும், நாவலில் இடம் பெற்றுள்ள கொச்சைமொழியும், முக்கியக்

கதாபாத்திரங்களின் மட்டமான நடவடிக்கைகளும் வேண்டு மென்றே, தவறுகளின் நகைச்சுவையாக மாறுகிறது. இது ஒரு வகையில், சமுதாயத் தீங்குகளுக்கு எதிரான, சி.வி. அவர்களின் வெறுப்பையும், கசப்பையும் வெளிப்படுத்தும் உத்தியாகும். அன்பின் சுகந்தம் எனப் பொருள்படும் 'பிரேமாமிர்தம்' என்கிற தலைப்பும் பொருத்தமானதாயில்லை. காரணம், இந்த நாவல் அன்பின் இனிமையைப் பற்றிய பொருளடக்கம் கொண்டதா யில்லை. ஆழமான சோகத்தின் நகைச்சுவை வெளிப்படையாகவே அமைந்துள்ளது. அவரது கதாநாயகனான, ராகவன் கர்த்தா என்பவன், உத்வேகமும், உணர்ச்சிப் பிழம்பானவனுமாக இருக்கிறான். இந்த பலவீனங்களுக்காகவே, சி.வி. அவர்கள் அவனைத் தண்டித்து விடுகிறார். ஏனெனில், இளைஞர்களும், யுவதிகளும் காதல் என்பது தெய்வீகமான உணர்வு என்பதையும், பெருந்தன்மையையும், தியாகங்களையும் உள்ளடக்கியது என்பதையும் உணரவேண்டும் என விரும்பினார். வெறும் சதைப்பசியும், மோகமும் காதல் என்கிற புனிதமான சொல்லைக் களங்கப்படுத்துவதாகும் என அவர் கருதினார்.

இந்த நாவலில் வரும் ஜோடிகளான மணிகாந்தனும், பாறு அம்மாவும் வயோதிகத் தம்பதி. வாழ்க்கையின் பல்வேறு முகங்களைக் கண்டவர்கள். பாறு அம்மா, ஓர் அழகான விதவை. தனக்குப் பிடித்த காதலர்கள் பலருடன், தொடர்ந்து, வெகுகாலம் வெற்றிகரமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாள். அந்த சமயத்தில்தான், கபட நாடகத்தில் தேர்ந்த மணிகாந்தன் வீசிய வலையில் வசமாகச் சிக்கிக் கொண்டாள். அவனுக்கு அடிமையாகிப் போனபிறகு, தனது இதயத்தை வெளியே வீசியெறிந்துவிடத் தீர்மானித்தாள். அந்த அளவிற்கு மணிகாந்தன் மிருகமாயிருந்தான். அவனது காமப்பசி வரம்பு மீறியதாகயிருந்தது. உடல் இச்சையே, அவனுக்கு காதல் எனப்படும். எனவே பாறு அம்மாவின் அழகிய மகளின் மீதும் அவன் பார்வை பதிந்தது. சி.வி. அவர்கள், இந்த மணிகாந்தன் கதாபாத்திரத்தை, விவேகமற்ற காமுகனாகவும், கட்டுக்கடங்காத போதை உணர்ச்சி மிகுந்தவனாகவும் சித்திரித்திருந்தார். அரசு ஊழியனாயிருந்த மணிகாந்தன், தன்னுடைய சுகபோகங்களுக்காக மட்டுமே செயலாற்றி வந்தான். அவனுடைய ஆசைக்கு அளவில்லை. எப்பாடுபட்டாவது திவான் பதவியை அடைந்துவிட வேண்டும் என்ற பேராசை மிகுந்தவனாகயிருந்தான். நாளடைவில் அவனது கனவுகளும், சதித்

திட்டங்களும் மண்ணாகிப் போகின்றன. இதனால், மனமுடைந்து போன அவன், நிம்மதியை நாடித் தற்கொலை செய்யத் துணிந்துவிடுகிறான். மனித நேயத்தையும், நேர்மையையும் வலியுறுத்துவதற்காகவே, சி.வி. அவர்கள் 'பிரேமாமிர்தம்' என்கிற நாவலை எழுதினார். மேரி காரிலின் 'வெண்டெட்டா'வைப் படித்ததால் ஏற்பட்ட ஆத்திர உணர்ச்சியே, பிரேமாமிர்தம் நாவலை, உடனடியாக எழுத அவருக்கு உந்து சக்தியாக அமைந்தது. அவருக்கே உரித்தான முறையில், கற்பனையின் உச்சத்திற்குச் சென்று, சமுதாய நலக் குறிக்கோள்களைக் கொண்ட காலத்தால் அழியாத ஆவணத் தொகுப்பாக இதை உருவாக்கினார்.

மூன்று மலைச் சிகரங்களுக்கு மத்தியில் ஒரு சிறு குன்று அமைந்திருப்பதைப் போல், 'பிரேமாமிர்தம்' உள்ளதாக,ஒரு சிலர் நினைக்கலாம். மூத்த விமரிசகர்களான கே.பாஸ்கரன் நாயர், என்.கிருஷ்ண பிள்ளை ஆகிய இருவரும், சி.வி. அவர்களின் படைப்புகளை அணுகும் முறைகளில், எங்கேயோ சறுக்கி விழுந்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். 'பிரேமாமிர்தம்' நாவலில் கரடுமுரடான, பொருத்தமற்ற அம்சங்கள் இடம் பெற்றிருப்பினும், அது நம்முடைய கவனத்தைக் கவரக்கூடிய, முக்கியப் படைப்பிலக்கியமாக விளங்குகிறது. காரணம், நடைமுறையில் காணப்படும் பல்வேறு சமுதாயத் தீங்குகளுக்கும், அநீதியான போக்குகளுக்கும் நிவாரணமாக, தீவிரமான சமுதாய நலச் சிந்தனையாளர் ஒருவர், நன்கு சிந்தித்துக் கூறப்பட்ட தீர்ப்பின் வடிவமாக நாவல் அமைந்துள்ளது.

10

மிதமான நகைச்சுவைகள்

பல்வேறு ரகங்களில் உயர்தரக் குணச்சித்திரப் பாத்திரங்களைப் படைக்கும் திறனும், ஆற்றலும் கொண்ட சி.வி. அவர்களிடம், எவ்வித முக்கியத்துவமும் அற்ற, லேசான கதாபாத்திரங்களை உருவகப்படுத்தும் இயல்பும் குடி கொண்டிருந்தது. எனினும், முக்கியத்துவத்தைப் பொறுத்த வரையில், மிகச் சிறிய கதாபாத்திரங்களாகயிருப்பினும், அவர்கள் என்றென்றும் வாசகர்களின் அடி மனதில் அழுத்தமாகப் பதிந்து, எப்போதும் நினைவு வைத்துக் கொள்ளக் கூடியவர்களாகத் திகழ்ந்தார்கள். சி.வி. அவர்களின் களிப்பூட்டும் நாடகங்களில் இடம் பெற்றவை திகட்டாத அவரது வார்த்தை ஜாலங்களே. இதற்குக் காரணம் சி.வி. அவர்கள் வசன நாடகத் துறையில் ஒரு முன்னோடியாக யிருப்பினும், அவர் இந்தத் துறையைச் சேர்ந்த, உலகளாவிய, மூத்த படைப்பாளிகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கவோ, அறிந்து கொள்ளவோ ஆர்வம் காட்டவில்லை. இது, காலத்தின் குற்றமே தவிர, அவருடையது அல்ல.

உலகப்புகழ் பெற்ற நாடகாசிரியர்களான இப்சனும், பெர்னாட்ஷாவும் அவர்களுடைய மகத்தான படைப்புக்களும், நம்மால் முழு அளவில், இதுவரையில் அறியப்படவில்லை. இத்தகைய மகத்தான படைப்பாளிகளும், அவர்களின் இலக்கிய சிருஷ்டிகளும் கவனத்தையும் கவரவில்லை. ஆனால், மோலியர்,

கோல்ட்ஸ்மித், ஷெல்டன் போன்றவர்களிடமே குளிர் காய்ந்து கொண்டிருக்கிறோம். காரணம், நாடக ரசிகர்கள் வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் நகைச்சுவையையே அதிகம் விரும்புகிறார்கள். ரசிகர்களுக்குத் தேவையான நகைச்சுவை, இந்த நாடகாசிரியர் களிடம் கிடைத்து விடுவதால், அவர்கள் அத்துடன் முழு திருப்தி அடைந்து விடுகிறார்கள்! சி.வி. அவர்களுக்குப் பின் வந்த படைப்பாளிகளைப் போல், அவர் ஏற்கெனவே புகழடைந்துள்ள மற்றவர்களின் படைப்புக்களை நகல் எடுத்தோ, தழுவியோ, தனது படைப்புக்களை உருவாக்கும் குணம் கொண்டவர் அல்லர். எதையும் சுயம்புவாகச் செய்ய வேண்டும் என்கிற தன்மான உணர்ச்சிமிக்க இலக்கியப் படைப்பாளி அவர். எனவே, தனக்கு மிகவும் பரிச்சயமான சூழ்நிலைகளையும், மனிதர்களையும் தேர்ந்தெடுத்து, அவர் மிகத் திறமையான நாடகங்களை உருவாக்கினார். இந்த வகையில் அவரது ஒன்பது நாடகங்கள் பிரசித்திமிக்கவை.

1) குறுப்பில்லா களரி (1909)
(ஆசிரியர் இல்லாத பயிற்சிக்களம்)

2) தென்தானாம்கோட் ஹரிச்சந்திரன் (1913)
(நவீன ஹரிச்சந்திரா)

3) கைமாலஸ்சாந்தே கடைசிக்கை (1914)
(கைமளின் தேசியப் புரட்சி)

4) டாக்டருக்கு கிட்டிய மிச்சம் (1916)
(டாக்டரின் இறுதி வெற்றி)

5) செருத்தன் கொலம்பஸ் (1919)
(இந்து சேகரனின் கண்டுபிடிப்பு)

6) பண்டத்தேபாச்சன் (1917)
(மீண்டும் திரும்பி வந்த பணியாள்)

7) பாபி செல்லாத ஸ்தலம் பாதாளம் (1918)
(பாவிகள் செல்லாத இடம் நரகம்)

8) குருப்பிந்தே திருப் (1919)
(குருப்பின் தந்திரங்கள்)

9) பட்லர் புப்பன் (1921)
(புப்பன் என்கிற பணியாளன்)

மேற்குறிப்பிட்ட நாடகங்களில் பெரிய குறையாகக் கருதப்படுவது அவற்றின் பலவகைப்பட்ட குழப்பமான, கதாபாத்திரச் சேர்க்கைகள்தான். மேலும், நாடகங்களில் முதலில் கூறப்பட்ட சம்பவங்களே, மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. மார்ஜோபி பௌண்டன் என்கிற பெண் எழுத்தாளர்,'நாடகக் கூறுகளில் ஒரு சோதனை' என்கிற நூலில் கூறுகிறார்: ''நகைச் சுவையின் நோக்கமே, யதார்த்தமான பல்வேறு சம்பவங்களின் கேலிக்கிடமான அம்சங்களை ரசிப்பதுதான். இது, மன ஆழத்தைத் தொடாத அளவிற்கு, அளவோடு அமைந்திருக்க வேண்டும்.'' சி.வி. அவர்கள், இந்த இலக்கணத்தின்படியே, தனது நாடகங்களைப் படைத்துள்ளார். எனவே, இதற்குமேல், அவரது நாடகங்களை எதிர்பார்ப்பவர்களுக்கு, ஏமாற்றமே மிஞ்சும். நாடகாசிரியரான, எனது பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர், கல்லூரி மாணவராகயிருந்த கால கட்டத்தில், அடிக்கடி, சி.வி. அவர்களைச் சந்தித்து, தனக்கு நாடகங்களை கொடுத்து உதவவேண்டும் எனக் கெஞ்சுவார். ஆனால், இதற்கு சி.வி. அவர்கள் உடனடியாக எந்த பதிலும் சொல்லமாட்டார். அதே சமயத்தில், இந்த இளைஞனை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கவும் அவர் விரும்பவில்லை. இந்த இளைஞனும் சளைக்காமல், அவரைத் தொடர்ந்து சந்தித்துக் கொண்டும், நச்சரித்துக் கொண்டுமிருந்தார். பிறகு ஒரு நாள், சி.வி. அவர்கள் மனம் இளகியது. இளைஞனை, தன்னருகில் அமரச் சொல்கிறார். தனது வாய்மொழிக் குறிப்புக்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளச் சொல்கிறார். இவ்வாறு இரண்டு மூன்று தினங்களில், ஒரு நாடகம் உருவானதாம்.

'ஆசிரியர் இல்லாத பயிற்சிப் பள்ளி' என்கிற நாடகத்தை கல்வித் தகுதி கொண்டவர்கள் போல் தோற்றமளிக்கும் பெண்கள் பலர் செய்யும் கேவலமான செய்கைகளைக் நையாண்டி செய்வதற்காக எழுதினார். தனக்கு ஒவ்வாத விஷயங்களைக் கண்டு, கொதித்தெழும் பழைமைவாதி என்கிற பெயரை, இந்த நாடகம் அவருக்குத் தேடித் தந்தது. மிகச் சிறிய விஷயங்களையும், ஊதி ஊதிப் பெரிதுபடுத்துகிற இயல்பு கொண்டவர்தான் என்பதில் சந்தேகமே இல்லை. திருமதி பஞ்சாமிர்தம் உண்மையில் யதார்த்தமான வெளிப்பாடு அல்ல. நிந்தனைக்கும், கேலிக்கும்

உரிய உருவகமாக நாடகத்தில் இந்தக் கதாபாத்திரத்தை உருவாக்கியிருந்தார். ஆனால், இத்தகைய பாத்திரங்கள்தான், சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும், அவலங்களை நமக்கு இனம் காட்டுகிறது என்பதையும் நினைவு கொள்ள வேண்டும். அதே சமயத்தில், மகளிரின் முற்போக்குச் சிந்தனைகளை தாக்கும் விதத்தில் அவர், இவ்வாறான நாடகங்களை எழுத முற்படவில்லை. பெண்கள் முற்போக்கு என்கிற பாதையில், தம்மையும் அறியாமல் சறுக்கி விழுந்துவிடக் கூடாது என்கிற நல்லெண்ணத்தினாலும், அக்கறையினாலும் அவர்களை எச்சரிக்கவே எழுதினார் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 'மெதுவாகச் செல்லுங்கள்' என்பதே படித்த மகளிர் சமுதாயத்திற்குத் தனது நாடகங்களின் மூலம் சி.வி. அவர்கள் அளித்த, இடையறாத போதனையாகும். இதைத் தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்? "ஸர். வால்டர் ஸ்காட்டைப் போல், குதூகலக் கும்மாளங்களுக்கும், மனமுடைந்து சோகத்தில் சிக்கிக் கொள்ளும் நிலைகளுக்கும் சி.வி. அவர்கள் ஏற்பானவர் அல்ல. இந்த வகையில், அவர் ஒரு மிதவாதி. கண்மண் தெரியாத உற்சாகம், வானமே தலையில் இடிந்து விழுந்துவிட்டதைப் போல் அறிவுக்கு ஒவ்வாத துக்கம் இவ்விரண்டுமே-சி.வி. அவர்களுக்கு உடன்பாடானது அல்ல. எதிலும் ஒரு அளவோடு இருக்க வேண்டும் என்கிற, அறிவார்த்தமான சிந்தனையாளர் அவர்!" என ஜி. லூகாஸ் இவரைப் பற்றி குறிப்பிடுகிறார். இளம் பருவத்தில் சி.வி. அவர்கள் இளைஞர் வட்டத்தில் உறுப்பினராகயிருந்த போது, படித்த நவீன தீவிரவாதிகளிடமிருந்து ஒதுங்கியே இருந்தார் என்பது, அவரது அடிப்படைகுண நலச் சிறப்புகளுக்கு நல்ல உதாரணமாகும். எனினும் அவர், நிதானமான, படிப்படியான மாறுதல்களை வரவேற்பவராகவும், பண்பட்ட பண்டைய பழக்க வழக்கங்களின் மீது மிகுந்த கவனமும், நேர்மையும் கொண்டவராகவும், மகளிர் சமுதாயத்தின் கண்ணியமான, ஒழுங்கான முன்னேற்றத்தை ஆதரிப்பவராகவும் திகழ்ந்தார். ஆனால், சுதந்திரம் என்கிற பெயரில், பெண்களின் தறிகெட்ட கிளப் வாழ்க்கையையும் கட்டுப்பாடற்ற சேர்க்கைகளையும் அவர் அறவே வெறுத்தார். சி.வி. அவர்களின் இத்தகைய எண்ணங்களும் நம்மைக் கவர்ந்தாலும், அவரது நையாண்டிச் சித்திரங்களும், உரையாடல் களும் ரசிகர்களைப் பெரிதும் களைப்படையச் செய்து விடுகின்றன. நாடகப் பாத்திரங்களும் இதே வகையில் ஒரே மாதிரியாக அமைந்துள்ளதும் நமக்குச் சலிப்பூட்டுகிறது. மேலும், அளவுக்கு மீறிய மேற்கோள்களும், விநோத குறிப்புகளும் நம்பத் தகாத புராணக்

கதைகளாக உள்ளதுடன், கதாபாத்திரங்களின் இயல்பான உரையாடல்களின் சுவையைக் கெடுத்துவிடுகின்றன. இது தவிர, வியப்பூட்டும் சம்பவங்களும் அம்சங்களும் நிறையவே இடம் பெற்றுள்ளன. 'ஒரு நவீன ஹரிச்சந்திரன்' என்ற அவரது நாடகத்திலிருந்து ஓர் உதாரணம் பார்ப்போம்: கலைஞனும், சிற்பியுமான ஓர் இளைஞன், காளிமாதாவின் முழு உருவ களிமண் சிலையை உருவாக்கித் தருமாறு பணிக்கப்படுகிறான். சிலை தயாராகி, சிற்பியின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தபோது, வேலைக்காரப் பெண் தரையைப் பெருக்கும்போது, எதிர்பாராதவிதமாக, சிலை உருண்டுவிழுந்து துண்டு துண்டாக உடைந்து விட்டது. சிற்பி,காளி சிலையைச் செய்து தருமாறு பணித்திருந்த கனவானின் செல்வமகளின் அந்தரங்கக் காதலனாகவும் இருந்தான். எனவே, அந்த இளைஞனின் மனம், சிலை சிதைந்து விட்டதில் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எளிதில் அறிய முடியும். இளைஞன் அதிர்ச்சியிலிருந்து சுதாரித்துக் கொண்டு மீண்டு, ஒரு புதிய சிந்தனையுடன், தனது பக்கத்து வீட்டுக்காரரும், புகழ் வாய்ந்த மூத்த கலைஞரும், மது அருந்துவதில் தாராளமானவருமான நண்பரை அணுகி, 'காளி மாதா போல் சிறிது நேரம் நடித்தால் மூளியாகிவிட்டச் சிலையை செப்பனிடுவதற்கு உதவியாகயிருக்கும் எனக் கேட்டுக் கொண்டான். இந்த சமயத்தில், அந்த கனவான் அங்கு வருகிறார். அவருக்குக் கண்பார்வை மங்கலாக இருப்பினும், உடைந்த சிலையைப் பரிசோதிக்கிறார். சிலையில் சில மாறுதல்களை மேற்கொள்ளச் சொல்லி ஆலோசனை வழங்குகிறார். அவர் கூறிய ஆலோசனைகள் வருமாறு: ''சிலையின் கழுத்து நிலையாக நிற்பதற்கு,அதன் தலையில் துளை போடப்பட்டு, அதன் வழியே ஈயத்தை உருக்கி ஊற்ற வேண்டும். நாசியின் எழில் பளிச்சென்று தெரிவதற்கு அந்த இடத்தில் மேலும் சிறிது செதுக்க வேண்டும்.'' இது போன்ற தேவையான பல ஆலோசனைகளை வழங்கினர், அவர். உயிரோட்டமான, ஜீவகளை மிகுந்த ஒரு சிலை பல்வேறு ஆலோசனைகளுக்கு ஏற்றவாறு, சிற்பியின் உளியின் ஸ்பரிசத்தில், ஒவ்வொரு முறையும், நம் கண்ணெதிரில், குலுங்கி நடுங்கும்போது ஒரு தர்ம சங்கடமான உணர்ச்சி பார்வையாளர்களைக் கவ்வுவது தவிர்க்க முடியாததாயிருக்கும். ஆலோசனை வழங்கியதுடன் நில்லாமல், தானாகவே சிலையில் சில மாற்றங்களைச் செய்யவும் முனைந்திருந்தார் கனவான். இதற்காக, தனது சிறிய கத்தியை வெளியில் எடுக்கும்போது, சிலை இன்னமும் ஈரப்பதத்திலேயே

இருப்பதால், அதைத் தொடக் கூடாது எனக் காரணம் காட்டி, சிற்பி அவரைத் தடுத்துவிடுகிறான். இதேபோல் அவரது மற்றொரு படைப்பான கமாலன். புத்திசாலித்தனமான புரட்சியில் குமாஸ்தா பணி புரியும் ஒரு சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, அவர்களுடைய திருமணமாகாத, மேலதிகாரியின் உணர்வுகளைச் சோதிக்கும் சதித் திட்டமொன்றைத் தீட்டினார்கள். இதன்படி, ஓர் அழகான சிறுவனுக்குப் பெண்வேடமிட்டு, கவர்ச்சிகரமாக அலங்கரித்து, மக்கள் கூடும் பொதுப் பூங்காவிற்குக் கூட்டிச் சென்று, கமாலின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருக்கிறார்கள். கமாலும் வந்து சேருகிறார். அந்த இளம் பெண்ணின் பார்வையில் மனதைப் பறிகொடுக்கிறார். அவளை அழைத்து வந்த மனிதர்களுக்குத் தாராளமாகச் செலவு செய்து மகிழ்விக்கிறார். ஆனால், இந்த அதிகாரி எல்லோரையும் ஏமாற்றிவிட்டு, கைமள் பெண்வேடமிட்டு வந்திருந்த சிறுவனின் அழகும், இளமையும் பொருந்திய சகோதரியை மணந்துகொண்டு, குறும்புக்கார இளைஞர்களின் முகத்தில் அசடு வழியச் செய்து விடுகிறார்.

இவ்வாறான, யதார்த்த நிலைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் அவரது நாடகங்களில் மிகுந்துள்ளன. நம்மை வியப்பிலும் ஆழத்துகின்றன. ஆனால், இவையனைத்தும் உண்மையில் நடைபெறக் கூடிய சம்பவங்கள் அல்ல என்பதும் நமக்குத் தெரியும். நாடகச்சுவைக்காகவும், ரசிகர்கள் சிரித்து மகிழ்வதற்காகவும் மட்டுமே சித்திரிக்கப்பட்டவை என்கிற வகையில், மிகைபடக் கூறலும், அர்த்தமற்றவையுமாக, அவரது நாடகங்களில் பல சம்பவக் கோவைகள் தொகுக்கப்பட்டுள்ளன என்பதே உண்மை!

சி.வி. அவர்கள் படைக்கும் ஊழியர் கதாபாத்திரங்கள் முதல்தரமானவை. நாம், இந்த கதாபாத்திரங்களிடமிருந்து பல வகைப்பட்ட உலகாயத இயல்புகளை அறிகிறோம். இவர்களில் சிலர், ஸ்ரீவ்ஸ் போன்ற ஒப்புவமை காண இயலாத அதிபுத்திசாலிகள். மற்றவர்கள் தந்திரசாலிகள், ஏமாற்றுபவர்கள் என்கிற ரகம். இவர்களைத் தவிர ஒவ்வொரு விஷயத்திலும் தேவையில்லாமல் தலையிடும் அதிகப்பிரசங்கிகள் வேறுசிலர் விசுவாச உணர்வுமிக்கவர்கள். மொழி ஆராய்ச்சியில் நாட்டம் உள்ளவர்களுக்கு, இந்த ஊழியர் கதாபாத்திரங்களின் மேடை வசனங்கள் ஒரு அற்புதமான பொக்கிஷமாகத் திகழும். சி.வி. அவர்கள், பரந்த உலக அனுபவத்தின் அடிப்படையில்,

சிந்தனையைத் தூண்டும் உயர்ந்த நகைச்சுவைக்காக முட்டாள்தனமான, பொருளற்ற இசை மெட்டுக்களையும், நாடோடி இசை மெட்டுக்களையும், கருத்து பேதமிக்க சொற்களையும் உருவாக்குவதில் வல்லவராக விளங்கினார். சுருக்கமாகக் குறிப்பிடுவதெனில், சி.வி. அவர்கள், தன்னுடைய கற்பனை வளமிக்க மூளையில் ஊற்றுப் பெருக்காகப் பிரவாகமெடுக்கும் அனைத்து சிந்தனைகளையும், தமது படைப்பிலக்கியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் எனலாம்.

உண்மையில் பிழைப்பிற்காகவும், ஊதியத்திற்காகவும் நகைச்சுவையை முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்களை விட, சி.வி. அவர்கள், இந்த விஷயத்தில் மகத்தான மனிதராகக் கொண்டாடப்படத் தக்கவர் என்பதில் சந்தேகமே இல்லை. எனினும், வாய்விட்டுச் சிரிக்கவைக்கும் அவரது கதாபாத்திரங்களின் சத்தான உரையாடல்களுக்கு ஒரு தடங்கலாகவும், நெருடலாகவும், புராணக் கதை அம்சங்கள் இடைஞ்சல் செய்கின்றன. அதே சமயத்தில், யதார்த்த நிலைக்குப் பொருந்தும் வகையில் சி.வி. அவர்கள் மனித சமுதாயத்தின் அபிலாஷைகளையும், உள்மன அழுக்காறுகளையும் நகைச்சுவையுடன் சித்திரித்திருப்பது ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் தகுதி நிறைந்ததாக உள்ளதையும் உணரவேண்டும்!

சி.வி. அவர்களின் அனைத்துப் படைப்புகளிலும் இந்த கோணங்கித்தனம் பரவலாக இடம் பெற்றுள்ளது. குறிப்பாக, அவரது நாவல்களில் சிந்தனை சேஷ்டைகள் அதிகம். நாடகங்களோ, 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்கிற கதையாக சமுதாயத்தின் குணபேதங்களையும், குறைபாடுகளையும், அவருக்கே உரிய முறையில் மிகைபடவே நையாண்டி செய்திருக்கிறார்! அவரது நாடகங்கள், நமது மூதாதையர் காலத்தைச் சேர்ந்த நாடகங்களைப் போலவே இருந்தன. நாடக மேடையில் சி.வி. அவர்களின் நாடகங்களை இப்போது நடிக்க விரும்புவர் களுக்கு அசாத்தியமான மன உறுதியும், துணிவும் தேவைப்படும் என்பதில் சந்தேகமே இல்லை!

11
சி.வி. என்கிற மாமனிதர்

சி.வி. ராமன் பிள்ளை அவர்களின் பிரபலமான புகைப்படம், 1918ல் நடைபெற்ற அவரது மணி விழா நாளில் எடுக்கப் பட்டதாகும். இந்த புகைப்படத்தில் அவர், திறந்த மார்புடனும், கத்தரிக்கோல் படாத அடர்ந்த, வெண்ணிற மீசையும் கொண்டவராக காட்சி தருகிறார். அவரது கழுத்தில், கனத்த மலர் மாலைகளுக்கு மத்தியில் ஒரு ருத்திராட்ச மாலையும் காணப்படுகிறது. மலர் மாலைகளுக்கிடையே பருமனான இந்த ருத்திராட்ச மாலை மன்னர் ஸ்ரீமூலம் ராமவர்மா அவர்களின் அன்பளிப்பாகும். விலைமதிப்பற்ற பொக்கிஷமாக சி.வி. அவர்கள், மன்னரின் இந்த அன்பளிப்பைப் போற்றி வந்தார். மேலும், இந்தப் புகைப்படத்தில், அந்த நகரவாசி பரம எளிமையாக தோற்றம் அளித்தார். இதன்மூலம், எவ்விதமான படாடோபமும், பந்தாவும் இல்லாத, நவநாகரிகச் சாயல்களும், போலித்தனங்களும், தீண்டாத உன்னதமான அறிவுஜீவியாக சி.வி. அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது!

ராமன் பிள்ளை என்கிற பெயரில் மூன்று நபர்கள், அவரது காலத்தில் திருவிதாங்கூர் நிர்வாகப் பணியில் இருந்தார்கள். இவர்களில் சி.வி. ராமன் பிள்ளை தவிர மற்ற இருவர் என். ராமன் பிள்ளை மற்றும் கப்பாழம் ராமன் பிள்ளை ஆகியவர்களாவர். மற்ற இருவருடன் ஒப்பு நோக்கும்போது, சி.வி. அவர்கள் அதிக அதிகார

அந்தஸ்து இல்லாத பதவியில், சொற்ப ஊதியம் பெறுபவராகயிருந்ததை அறிய முடியும். ஆனால், அவரது படைப்புகளைப் படித்தறியாதவர்கள் உட்பட, மக்களின் பார்வையிலும் கருத்திலும், பிரகாசமிக்க நட்சத்திரமாக சி.வி. அவர்கள் விளங்கினார்கள். கேரளத்தின் புகழ் வாய்ந்த கவிஞரான மகாகவி குமாரன் ஆசான் அவர்கள், சி.வி. அவர்களைப் பற்றிப் பெருமிதத்துடன், 'சரஸ்வதி தேவியின் வீர மைந்தன்' எனக் குறிப்பிடுவார். இந்த மகாகவி, சி.வி.யின் படைப்புகளில் ஈடுபாடும், பெருமதிப்பும் கொண்டிருந்தார். சி.வி. அவர்கள் நியாயத்திற்குப் புறம்பானவற்றை எதிர்ப்பதில் ஒரு போர் வீரனாகவே செயல்பட்டவர். அதர்ம சக்திகளுடன் எவ்விதமான சமரசத்திற்கும் உட்படாத மன உறுதிமிக்கவர். இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு எந்த அளவுக்குத் தொண்டாற்றி வந்தாரோ, அதே அளவிற்கு சமுதாய மேம்பாட்டிற்கும் இயன்றமட்டும், அந்தரங்க சுத்தியுடன் சிறப்பாகப் பணியாற்றினார். சி.வி. அவர்களின் நீண்டகால நண்பரும், புகழ்பெற்ற இலக்கிய மேதையுமான கே.ஆர். கிருஷ்ண பிள்ளை சி.வி.யைப் பற்றி எழுதியுள்ள விமரிசனம் குறிப்பிடத்தக்கதும் புகழ் பெற்றதுமாகும். 'அரசாங்கத்தில் சி.வி. அவர்கள் வகித்த பதவிகளினால் அவருக்குப் பெருமை சேரவில்லை. மாறாக அந்த பதவிகளுக்குத்தான் சி.வி. அவர்களால் கௌரவம் கிட்டியது. மக்கள் கொண்டிருந்த மரியாதையும், பேரன்பும், சமுதாயத்தில் அவருக்கு அசைக்க முடியாத செல்வாக்கை அளித்திருந்தது. அவருடைய சமகாலத்தைச் சேர்ந்த இலக்கியவாதிகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் இது சி.வி. அவர்களின் மீது ஒருவித பொறாமை உணர்ச்சியை ஏற்படுத்தியது. சமஸ்தானத்தின் திவான் பதவியிலிருந்தவர்களும், அவரிடம் அச்சம் கொண்டிருந்தார்கள். வெளிப்படையாக பெரும் மரியாதை செலுத்தினார்கள். வழக்கத்திற்கு மாறான, இத்தகைய செயல்களுக்கு என்ன காரணம்? சி.வி. அவர்களுடைய நற்பண்புகளும், நன்னடத்தையும், எப்போதும் மனம் தளராத தன்னம்பிக்கையும், எதைக் கண்டும் அஞ்சா இயல்பும், எல்லாவற்றிற்கும் மேலாக, குழந்தை மனமும், கருணை நிறைந்த இதயமும், பரிவுமிக்க சுபாவமும் தான். சொந்தக் காரியங்களுக்காக, அவர் ஒரு போதும், சமூகத்தில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்த முயற்சித்தது இல்லை. மகள்களுக்கு மாப்பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர்கள் நல்ல குடும்பத்தையும், கௌரவமான பரம்பரையையும் சேர்ந்தவர்களாக

இருக்க வேண்டும் என்பதுதான் அவரது நோக்கமாக இருந்தது. மற்றபடி, மாப்பிள்ளை குடும்பத்தாரின் பொருளாதார நிலவரங்கள் குறித்து அவர் ஆராயவே விரும்பவில்லை. இந்த அளவிற்கு சி.வி. அவர்கள் ஒழுக்கத்தில் அதிக அக்கறை காட்டுபவராகவும், எளிமையான போக்கும் கொண்டவராயிருந்தார்.

வி. மாதவன் நாயர் என்பவரால் பதிப்பிக்கப்பட்டு, சென்னையிலிருந்து வெளியாகிய 'கேரளோதயம்' என்கிற சதாஸ்ய திலகம் டி.கே. வேலுப் பிள்ளை என்கிற இளம் எழுத்தாளர் எழுதிய கட்டுரையில், சி.வி. அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'அவர் எங்களைப் போன்ற, எழுத்துலக இளையவர்களுக்கு அனுசரணையாகவும், உதவியாகவும் இருந்தார். வளரும் எழுத்தாளர்களான இளைஞர்களிடம் சி.வி. அவர்கள், சொந்த மகன்களைப் போல் பாசம் காட்டியதுடன், அவர்களுடைய முன்னேற்றத்திற்கான, பல அரிய ஆலோசனைகளையும் கூறி வழிகாட்டினார். தனது வீட்டில் சிறு தவறு நிகழ்ந்ததாகத் தெரிந்தாலும் கொதித்தெழுந்து சீற்றத்துடன் வார்த்தைகளை உதிர்த்து, ஒரு துன்பியல், நாடகக் காட்சியையே ஏற்படுத்திவிடுவார். ஆனால், இவ்வளவும் ஒரு சில நிமிடங்களுக்குத்தான். அதன் பிறகு கோபம் தணிந்து, பழையபடி எல்லோருக்கும் பிரியமான அன்பு மாமா ஆகிவிடுவார்' என்று கூறுகிறார்.

'ஈ.வி. கிருதிகள்' என்கிற தன்னுடைய நூலின் மூன்றாம் பாகத்தில், சி.வி. அவர்களின் மருமகனாகிய, ஈ.வி. கிருஷ்ண பிள்ளை, தன்னுடைய மாமனாரின் பொறுமையான குணத்தைப் பற்றி எழுதியுள்ள விவரம் மிகவும் சுவையானது. 'உற்சாகம் காரணமாக சாரமற்ற குப்பைகளை எழுதிக்குவிக்கும் இளம் எழுத்தாளர்களின் படைப்புகளை அவர் சகித்துக் கொள்வதுபோல், வேறு எந்த அறிவுஜீவியாலும் நிச்சயமாக முடியாது!' என்கிறார்.

சி.வி. அவர்கள், தன்னுடைய முதியவயதில் உடல் சுகவீனம் உள்ளவராகயிருந்தார். அவர் தன்னுடைய படைப்புகளைப் பகலில் எழுதுவதையே சௌகரியமாகக் கருதினார். அவர் சொல்லிக் கொண்டு வருவதை அருகில் உள்ள எவராவது குறிப்பெடுத்து உதவுவார்கள். மாலை நான்கு மணி ஆகி விட்டால் இலக்கியப் படைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஓய்வெடுக்கச் சென்றுவிடுவார். மின்சார வசதியுடன் கூடிய அவரது வீட்டில்,

நண்பர்கள் மற்றும் ரசிகர்களுடன் சி.வி. அவர்கள் மாலைப் பொழுதுகளை உற்சாகமான, நகைச்சுவை மிக்க உரையாடல்களில் கழிப்பது வழக்கம். அவரது வீட்டுச் சமையலறையில் இந்த சமயங்களில் சி.வி. அவர்களின் இலக்கியப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சேர்த்து, அடுப்பு எரியும்!

கீர்த்திமிக்க ராமராஜபகதூர் வரலாற்று நவீனத்தை எழுதிய, இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர், சி.வி. அவர்கள் காலமானார். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அவருடைய பொருளாதார நிலை கணிசமாக அபிவிருத்தியடைந்திருந்தது. அவரது படைப்பிலக்கியங்களும் அபரிமிதமான அளவில் விற்பனையில் முதலிடத்தைப் பெற்றது. கல்விக் கூடங்களில் பாட நூலாக அவரது படைப்புகள் இடம் பெறுவது எளிதாகியது. எனினும் வளர்ச்சியும், புகழும், சி.வி.யின் அடிப்படைக் குணநலன்களில் சிறிதும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எப்போதும் போல் நல்ல மனிதனாகவும் பண்டைய கலாசார மரபுகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராகவும், கலைகளில் ஈடுபாடு கொண்ட ரசிகராகவும் விளங்கினார். மன்னரைச் சார்ந்தவர்கள் மத்தியில் அவர் ஒரு புரட்சியாளராகவும், புரட்சியாளர்களிடையே மன்னரைச் சார்ந்தவராகவும் தோற்றமளித்தார். சமுதாய மக்களின் நம்பிக்கைக்கு உரிய வகையில், நேர்மையான வழிகளில், பொதுமக்களின் நலன்களுக்காகச் செயல்பட்ட உத்தமர் என்கிற நற்பெயரும், பெரும் புகழும் அவருடைய தனித்தன்மைக்கும் நாணயமான போக்கிற்கும் கீர்த்தி மகுடங்களாக அமைந்தன. முறை தவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்யும் மன்னர்களை, சி.வி. அவர்கள் தேவ தூதவர்களாகவே கருதினார். தனது குடிமக்களை ரட்சிக்கும் புரவலர்கள், இறைவனுக்குச் சமமானவர்கள் என அவர் கூறுவார். மக்களுக்கு மன்னரின் பரிவும், பார்வையும், அக்கறையும், ஈடு இணையற்ற மதிப்புடையவையாகும். இந்த வகையில் நல்லாட்சி புரியும் மன்னரின் ஜெயகீர்த்திக்கு நிகரோ, அழிவோ என்றுமில்லை என்பது சி.வி. அவர்களின் நெஞ்சார்ந்த பிரகடனமாகயிருந்தது. சூதும், தந்திரமும், சாமர்த்தியமும் ஜீவநாடியாகக் கொண்டு வாழும் மனிதர்களிடையே, ஒரு வித்தியாசமான மாமனிதராகத் திகழ்ந்தவர் அவர். உண்மையான நாட்டுப் பற்றும், குடிமக்களிடம் அக்கறையும் கொண்ட மன்னர்கள் தரப்பில், சி.வி. அவர்கள், உறுதியாக நின்றதும், விசுவாசமிக்கவராக விளங்கியதும் பொருத்தமே. அவரது

நாவல்களில் அரசர்கள், தீர்க்கதரிசன அறிவு மிகுந்த திரிகால ஞானிகளாகவும், ராஜரிஷிகளாகவும் சித்திரிக்கப்பட்டிருப்பார்கள். இது சி.வி. அவர்களின் உள் மன குணநலன்களின் வெளிப்பாடாகும். 'தர்மராஜா' என்கிற தன்னுடைய நாவலை அப்போதைய மன்னர் ஸ்ரீமூலம் ராமவர்மா அவர்களுக்கு அர்ப்பணித்திருந்தார். மன்னரின் தோற்றக் கவர்ச்சிக்காக அல்லாமல், அவரது மகத்தான மனிதநேய ஆட்சி நிர்வாகச் சிறப்பைப் போற்றும் விதத்தில், சி.வி. அவர்கள் இந்த அர்ப்பணிப்பை செய்தார்.

அனுபந்தம் - I

மார்த்தாண்ட வர்மா

1891 டிசம்பர் 21-ம் தேதி, ஹிந்து நாளிதழில் வெளியான தலையங்கம்:

'மார்த்தாண்ட வர்மா' எனும் இந்த வரலாற்று நவீனம், நமது பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற ஒருவரால் எழுதப்பட்டது. இதில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள், திருவிதாங்கூர் சமஸ்தான வரலாற்றுடன் முக்கியத் தொடர்பு கொண்டவை. வெகு காலத்திற்கு முன்பு நிகழ்ந்தவை என்றாலும், வரலாற்றின் ஒரு முக்கியமான காலகட்டத்தை உணர்த்துவதாகும். எனவே, இதில் அக்கறையும் ஆர்வமும் காட்டுவதின் மூலம், அந்த சமஸ்தானத்தின் மக்களுடைய பழைய வாழ்க்கை நிலவரங்களையும், நிர்வாக நடைமுறைகளையும் அறிந்து கொள்வது எளிதாயிருக்கும். திருவிதாங்கூர் மக்களுடைய வாழ்க்கை, இப்போதுள்ளதைவிட, அந்தக் காலத்தில் சகல விதத்திலும் சாரமற்றும் மதிப்பிழந்தும் போயிருந்தது. மேலும், அறிவின் சிறப்பைவிட, உடல் ரீதியான வலிமையே எல்லாவிடங்களிலும், அதிகார பலத்துடன் கொடிகட்டிப் பறந்தது.

அப்பொழுது திருவிதாங்கூர் புரட்சியின் பயங்கரப் பிடியில் இருந்தது. அரசாண்டு கொண்டிருந்த மன்னர், அபாயகரமான நிலையில், மரணப் படுக்கையில் கிடந்தார். அவரது மருமகனும், பட்டத்திற்கு வாரிசாக விளங்குபவராகவும் இருந்தவர் கொலையாளிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிமுறைகளில் ஈடுபட்டிருந்தார். நாடு முழுவதும் பலம் பெற்ற தலைவர்கள் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் தங்களது எல்லைக்குட்பட்ட பரப்பில் எல்லையற்ற அதிகாரத்தை செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

எட்டு வீட்டுப் பிள்ளைமார்' என்பவர்கள், அரண்மனையின் முக்கிய எதிரிகளாக இருந்தார்கள். இவர்கள், பரம்பரை மன்ன ராட்சியை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற ஆவேசத்தில் இருந்தவர்கள். இதைச் சாதிக்க முடியும் என்கிற அவர்களின் நம்பிக்கை இந்த சமயத்தில் அதிக வலிமை பெற்றுத் திகழ்ந்தது.

இதற்குக் காரணம்,மன்னருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இவ்விருவரில் மூத்தமகன், பட்டத்திற்கு வர ஆவல் கொண்டிருந்தார். சக்திவாய்ந்த தலைவர்கள் அனைவரும் ஆளுக்கொரு பக்கம் சரிந்து கொண்டிருந்தார்கள். இவ்வாறான நிகழ்வுகளின் போக்குகள், பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாயிருந்தன. குறிப்பாக, மன்னரின் குடும்பத்தில் பெரும் கவலை சூழ்ந்தது. மலபார் திருமணச் சட்டத்திற்கு உரிய மதிப்பும் முதன்மையும் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாயிற்று. ஏனெனில், ராஜ குடும்பத்தைப் பொறுத்தவரையில், இந்த சட்டம் முக்கியமானதாக விளங்கியது. மருமகன் கொலை செய்யப் படுவாரானால், மகன் பட்டத்தில் அமர வேண்டும். இது பற்றிய வாதப் பிரதிவாதங்களும், பல்வேறு சந்தேகங்களும் புரட்சியாளர் மத்தியில் நிலவின. நீண்ட காலமாக நீடித்து வரும் பழக்க வழக்கங்கள், அந்தக் காலத்திலேயே, ஒரு பெரிய இடைஞ்சலாயிருந்தது. தாய்மாமனிடமிருந்து மருமகனுக்கு வாரிசு உரிமை மாற்றம் என்கிற வழக்கம், கற்பாறையைப் போல் மிக உறுதியானதாகவும், தொன்மையானதாகவும் நிலவி வருவதாகும். மேலும், மன்னரின் மகன் செல்வாக்கு மிக்கவராகவும் இருந்தார். அவர், விடாப்பிடியான முயற்சிகளை மேற்கொண்டால், மன்னராகும் வாய்ப்பும் இருந்தது. ஆனால், அவரது பதவிமோக வெறியினால், மன்னரின் வெறுப்புக்கு ஆளானதுடன், கீழ்த்தர செயல்களிலும் நாட்டம் கொண்டார். இது எட்டு வீட்டுப் பிள்ளைமாரின், மன்னருக்கு எதிரான வாரிசு மாற்ற உரிமைக்குரலுக்குக் காரணமாகியது. இவ்வாறு, சம்ஸ்தானத்தின் உட்பூசல்களின் உக்கிரம் காரணமாக, அந்நிய சக்திகளின் உதவியைக் கோரவும் நேரிட்டது. இந்த வகையில் திருச்சி மற்றும் மதுரையிலிருந்து உதவி எதிர்பார்க்கப்பட்டது. ஸ்ரீபத்மநாபதம்பி, பாண்டிய மன்னரிடம் தனது பிரச்னைகளைக் குறித்து விவாதித்தார். மன்னரின் மகன் என்கிற அடிப்படையில், வாரிசு உரிமை தனக்கே உரியது எனவும், மார்த்தாண்ட வர்மா மன்னரின் மருமகன் இளவரசராகத் தேர்ந் தெடுக்கப்பட்டது தவறானது. இது அநீதியும், ராஜ நீதிக்குப் புறம்பானதுமாகும், என அவர் வாதிட்டார். எனினும், பாண்டிய மன்னர் ஸ்ரீ பத்மநாபதம்பியின் வாதங்களை, முற்றிலும் நியாயமானவை எனக் கருதவில்லை. எனவே, அவர் ஒரு சிறப்புக்குழுவை நியமித்து, இந்த வாதங்களில் உள்ள சாதக, பாதக அம்சங்களையும், உண்மைகளையும் ஆராயும்படி பணித்தார்.

இதன்படி, புகழின் வளர்ச்சிக் கட்டத்தில் இருந்த ராமய்யர் என்பவர் (இவர் பின்னாளில் தளவாய் பதவியில் பெரும் புகழீட்டியவர்). இளவரசர் மாத்தாண்ட வர்மாவின் சார்பில் சிறப்புக் குழுவினர்முன் ஆஜராகி, மன்னரின் மகன் ஸ்ரீபத்மநாபதம்பியின் குற்றச்சாட்டு களையும், வாதங்களையும் தனக்கே உரிய மதி நுட்பத்துடன் அலசி, எதிர்வாதமும், கேள்விகளும் எழுப்பினார். மன்னரிடமோ, தாய்நாட்டின் மீதோ விசுவாசமோ பற்றுதலோ இல்லாதவர், மன்னரது பகையாளிகளின் கைப்பாவையாகச் செயல்படும் தேசத்துரோகி அவர் என்பதை புலப்படுத்தும் ஆவணங்களையும் குழுவின் முன் தாக்கல் செய்து, ஸ்ரீ பத்மநாபதம்பியின் வாதங்களை முறியடித்தார். இதையடுத்து பாண்டிய மன்னர், ஸ்ரீதம்பிக்கு பல நல்ல அறிவுரைகளைக் கூறினார். குறிப்பாக, புரட்சி நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு, தேசத்தின் பாரம்பரிய மரபுகளின் மீது மரியாதையும், மதிப்பும் வைத்து, செயல்படுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். வரலாற்று நிகழ்ச்சிகள் சங்கிலித் தொடர்போல நீண்டவை. மீண்டும் மீண்டும் நிகழக் கூடியவை. உதாரணமாக, கடந்த நூற்றாண்டின் சம்பவங்கள், இந்த நூற்றாண்டில், பிரிட்டிஷ் அரசின் ஆளுகையின் கீழ் மீண்டும் நிகழ்ந்ததை எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இதுவே வரலாற்றின் இயல்பாகும். இந்த சரித்திர சம்பவங்களே, கதையின் எலும்புக் கூடாகவும், உள்ளுறையாகவும் அமைந்தது. சதை எனும் சத்தான மேல்பூச்சுகள் அனைத்திற்கும் சி.வி. அவர்களின் கூரான சமுதாயப் பார்வையும் கற்பனை வளமும், இவற்றை உரிய முறையில் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவாற்றலும் அடிப்படையாக அமைந்தன. இந்தக் கதை நள்ளிரவில், அடர்ந்த காட்டில் துவங்குகிறது. ஆனால், சந்திர ஒளியின் பிரகாசமான கதிர்களின் வெளிச்சத்திலும் காட்டில் வசிக்கும் குள்ள நரிக் கூட்டங்களின் ஊளைச் சத்தம், பறவைகளின் இனிய கீதம் மற்றும் அவற்றின் சிறகுகள் எழுப்பும் ஒலி ஆகியவற்றின் ரம்மியமான சூழலில் அந்த இரவு நேரம் மிகப் பொருத்தமாக, உயிர்த் துடிப்போடு இயங்குகிறது. அந்த இடத்தில் ஒரு மனிதர் ரத்தவெள்ளத்தில் சாய்ந்து கிடக்கிறார். படுகாய மடைந்து நகர முடியாமல் துன்பப்படும் நிலையிலும், எழுந்து நிற்பதற்குப் பெருமுயற்சி செய்கிறார். பயங்கர வலியும், வேதனையுமாக கர்ணப்படுகிறார். நல்ல உயரமும், கட்டான உடலும் கொண்ட நூதன தோற்றமுடைய ஒரு சில மனிதர்களினால், அவர் எடுத்துச் செல்லப்படுகிறார். எமதர்ம

ராஜாவின் தூதுவர்கள் என ஹிந்து மதத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் கருதும் விதத்தில் , இந்த மனிதர்களின் உடலமைப்பும், செயலும் இருந்தன. கதைத் துவக்கத்திலும், இதையடுத்து வரும் பிற நிகழ்வுகளிலும் வெவ்வேறு காட்சிகளிலும் சி.வி. அவர்களின் ஆழமும், ஆற்றலுமிக்க மதி நுட்பத்தை மிக நன்றாக உணர்கிறோம். சிருங்கார லீலைகள், ரசிப்பதற்குத் திகட்டாமல் இருந்தாலும், மிகைப்படுத்தப்பட்டிருப்பதும் தெளிவு. இளவரசர் மார்த்தாண்ட வர்மாவை, இந்த நாவலில் நல்ல நடத்தை உடையவராகவும், தயாள குணமிக்கவராகவும், பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அக்கறை மிக்கவராகவும், ஓர் உதாரண புருஷராகவும் அறிகிறோம். இத்தகைய நல்ல மனிதருக்கு எதிர்பாராத ஆபத்துகள் சூழ்கின்றன. உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக், அவர் அங்கும் இங்கும் அலைய வேண்டிய துர்ப்பாக்கியமும் நேரிட்டது. இவர் மீது அபாண்டமான பழி மோசமானவர்களாலும், புரட்சியாளர்களாலும் அடுக்கடுக்காகச் சுமத்தப்பட்டது. இதன் மூலம் அவருடைய புகழும், கௌரவமும் களங்கப்படும்; மக்களிடையே மதிப்பிழந்து போவார், இதனால் நிகழும் ஆதாயங்களை அபகரித்துக் கொள்ளலாம் என, தப்புக் கணக்குப் போட்டார்கள். ஆனால், இவை இளவரசர் மார்த்தாண்ட வர்மாவைக் கொஞ்சமும் பாதிக்கவே இல்லை. அவரது உணர்வுகளையோ, இதயத்தையோ தீண்டும் சக்திகூட, தீயவர்களின் செயல்களுக்கு இல்லாமல் போனது. மேலும், அதிர்ஷ்டவசமாக, பரமேஸ்வரன் பிள்ளை மற்றும் ராமய்யர் என்கிற இரண்டு விசுவாசமான அரண்மனை ஊழியர்கள் எப்போதும் இளவரசை அரண்போல் நின்று காத்துவந்தார்கள். பரமேஸ்வரன் பிள்ளை, ராஜ விசுவாசமிக்க, நேர்மையான மனிதர். ராமய்யரோ, விழிப்புணர்வும், எச்சரிக்கையும், மதி நுட்பமும் நிறைந்த அரசியல்வாதியாகவும், போர் வீரராகவும் விளங்கியவர். இவ்விருவருமே இளவரசரின் நிழல் போல் உடனிருந்து அவரைப் பாதுகாத்தனர். ராமய்யர், பின்னாளில் தனது எஜமானருடன் இணைந்து மேற்கொண்ட வீர தீர சாகச செயல்கள், திருவிதாங்கூரின் அரச பாரம்பரியத்தை நிலைபெறச் செய்வதற்கு பெருமளவு உதவியது என்பது வரலாறு. துர்ப்பாக்கியமிக்க, சிக்கலான கால கட்டங்களில், மார்த்தாண்ட வர்மாவின் உயிரைக் காப்பாற்றிய குறுப் என்பவரும், உரிய சமயத்தில், எதிராளிகளின் சதித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை உடனுக்குடன் அளித்து வந்த,

புத்திக் கூர்மை மிக்க இளம் பெண்ணான சுபத்ராவும், இளவரசர் மார்த்தாண்ட வர்மாவின் நல்வினைப் பயனாக, விசுவாசமிக்க ஊழியர்கள் படையில் இருந்ததும், எதற்கும் மனம் கலங்காமல் மார்த்தாண்ட வர்மா நடந்துகொண்டதற்கு காரணம் எனலாம்! தற்செயலான சோக முடிவிலிருந்து இந்த நூலாசிரியரால் சுபத்ராவை காப்பாற்ற இயலாமல் போனது துர்திர்ஷ்ட வசமானதாகும். தன்னுடைய கதாபாத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்ட விதத்தில் நூலாசிரியருக்கு மிகுந்த மன நிறைவும், மகிழ்ச்சியும் கிட்டியிருக்கிறது. வியக்கத்தக்க அவரது கற்பனை வளமும், வீரியமிக்க சொற்பிரயோகங்களும், நமக்கு ஏற்கெனவே நன்கு பரிச்சயப்பட்ட மனிதர்களையும், மகளிரையும் கதா பாத்திரங்களாகப் புனைந்துள்ள நெருக்கமான சூழலும், சம்பவங்களுடன் ஒட்டிச் செல்லும் பொருத்தமான கதாபாத்திர அமைப்புகளும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. அதே சமயம், கதாபாத்திரங்களின் குணாதிசயங்களும், உணர்வுகளும் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாகவும், வித்தியாசமாகவும் அமைந்து, கதையம்சங்களில் ஒரு வேகத்தையும், விறுவிறுப்பையும் ஏற்படுத்துவது குறிப்பிடத் தக்கதாகும். ஸ்ரீபத்மநாபன்தம்பி கதாபாத்திரத்தில், ஒரு மஹாராஜாவின் உண்மையான மகனை அடையாளம் கண்டு அங்கீகரிக்கிறோம். அதே சமயம், துயரச் சாயல் மிக்கவராகவும் அவரைக் காண்கிறோம். அவருக்கு மிகப் பிடித்தமான சுந்தரம் என்கிற கதாபாத்திரம், தற்பெருமை, சுயநலம் மற்றும் தந்திரசாலியாகவும், தனது தலைவரின் நலனுக்காக, புத்திசாலித்தனமாகத் திட்டமிடும் ராஜவிசுவாசியாகவும் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதேபோல், கதாநாயகியான இளமங்கையும், தூய்மையான பெண் துறவியருக்கு உரிய பரிசுத்தத்துடன் வடிவமைக்கப் பட்டிருக்கிறாள். அவள், அனந்தபத்மநாபன் என்கிற, அழகிய இளைஞனிடம் தன்னுடைய இதயத்தை, ஏற்கெனவே பறி கொடுத்து விட்டவள். இந்த இளைஞனை, தனது நாவலின் துவக்கத்திலேயே அறிமுகப்படுத்திவிடுகிறார். இந்த இளைஞன் புத்தி பேதலித்தவனாகவும், கேட்கப்படும் கேள்விகளுக்குப் பழங்கால பாட்டுக்களின் வடிவத்தில் பதிலளிப்பவனாகவும், பின்னாளில் செல்வாக்கு மிக்க ஹகீம் அவர்களுடைய குழுவைச் சேர்ந்த அழகிய ஷம்சுதீனாகவும் வருகிறார். ஆனால், நாவலின் இறுதிப்பகுதிக்கு வரும்வரை, இந்த இளைஞனைப் பற்றிய தகவல்கள் ரகசியமாகவே

வைக்கப்பட்டுள்ளது. இந்த நாவலின் குறிப்பிடத்தக்க கதாபாத்திரமாக இந்த இளைஞன் சித்திரிக்கப்பட்டிருக்கிறான். குடும்பத்திலிருந்து பிரிந்து வெகு தொலைவில் வசிப்பவனாகவும், இவனைப்பற்றிய தகவல்களை அறிய வாய்ப்பில்லாத அவனது குடும்பத்தினரால் முறையற்ற சில செயல்கள் காரணமாக அவன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறான். இந்த நினைப்பின் எதிரொலியாக, சில காலம், பேய் பிசாசுகளினால் அவன் அடித்துக் கொல்லப் பட்டிருக்கலாம், எனப் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால், புரட்சியாளர்கள் இதை நம்ப மறுத்ததுடன், இளவரசர் மார்த்தாண்ட வர்மாவின் சதித்திட்டமே, இந்த இளைஞனின் மரணத்திற்குக் காரணமாகும் என குற்றம் சாட்டினார்கள். மேலும், சமுதாய அந்தஸ்துமிக்க பெண்களும், இந்த இளைஞனின் மரணம், பேய்களினால் நிகழ்ந்திருக்காது என்றனர். கதாநாயகியோ, பெருமைக்குரிய, பண்பட்டவளாக இருந்தாள். அவளுடைய அன்னை, அவளை ஆதாரமாக வைத்து, நூலாசிரியர் நகைச்சுவைமிக்க கேளிக்கைகளை தனது படைப்பில் புகுத்துகிறார். அவை, ரசிப்பதற்குரிய கண்ணியத்துடனும் தரமான ரசனையுடனும் அமைந்திருந்ததுடன், பத்மநாபன்தம்பி தனது மகளுக்காக மேற்கொண்டிருந்த தேவையற்ற வழக்கைத் தூண்டிவிடும் சுறுசுறுப்பான முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மனமாற்றத்தையும் அவளுக்கு ஏற்படுத்தியது. பார்வதி, அவரது ஆலோசனைகளை வெறுத்து ஒதுக்காமல், கண்ணியத்துடனும், கனிவோடும் மறுத்தாள். இந்த இடத்திலும் ஒரு வயோதிக மனிதன் வருகிறான். அவரது குடும்பத்தில் ஓர் ஊழியனாக, வாழ்க்கையைத் துவங்கிய அவர், தனது முதுமை மற்றும் நீண்டகால சேவையின் அடிப்படையில், அரண்மனையின் நம்பகமான ஊழியராக விளங்கினார். இவர் சில நேரங்களில், சுற்றியிருப்பவர்களிடம் கடுமையாக நடந்து கொள்வார். பத்மநாபன்தம்பிக்கு மிகவும் நெருங்கியவரான சுந்தரம் மட்டும் இந்த முதியவரின் கோபதாப குணம் தெரிந்து, பக்குவமாக நடந்து கொண்டார். ஆனால், மற்றவர்கள் இந்த முதியவரின் கடுமையான கோபதாபங்களிலிருந்து சிறிதளவும் தப்பிக்க முடியவில்லை.

இந்த கதையில் வரும் சங்கு ஆசான் என்பவர் மிகச் சிறந்த பாத்திரப் படைப்பாகும். கதையில் இடம் பெற்றுள்ள மற்ற கதாபாத்திரங்களைப் போலவே, சங்கு ஆசானும் வாழ்க்கையின் உண்மைகளையும், நெளிவுசுளிவுகளையும் உணர்ந்து பண்

பட்டவராக விளங்குபவர். அனந்த பத்மநாபனுடைய சாகச நடவடிக்கைகள், உண்மையிலேயே, பிரமிப்பூட்டுவதாகும். ஷாணன் என்கிற பெயரில் மாறுவேடம் பூண்டு, அவர் அரசு வாரிசை அச்சுறுத்திக் கொண்டிருந்த அனைத்து ஆபத்துகளையும் முறியடிக்க ஆயத்த நிலையில் எப்போதும் விழிப்பாகயிருந்தார். அரசு வாரிசுக்கு, அவரது வாழ்க்கையில் ஏகப்பட்ட சோதனைகள் எதிர்ப்பட்டன. நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் ஷாணன், தக்க தருணத்தில் தலையிட்டு அந்த ஆபத்துக்களைத் தடுக்காமல் போயிருந்தால், அரசு வாரிசின் உயிருக்கே பெரும் கேடு சூழ்ந்திருக்கும். இந்த ஷாணன், அடிக்கடி பிடிபட்டு, பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவர் சித்த சுவாதீனமில்லாத பைத்தியக்காரனாக, மிகத் திறமையான நடிப்பை மேற்கொண்டார். இதன் மூலம், அவர் பாதாளச் சிறையின் மரண அவஸ்தைகளின் பாதிப்பால் உயிரிழக்காமல் தப்பினார். ஆனால், பாதாளச் சிறையிலிருந்து ஷாணன் எப்படி தப்பித்து வெளியே வர முடிந்தது என்பது குறிப்பிடப்படவில்லை. மார்த்தாண்ட வர்மாவை ஆபத்து சூழ்ந்த போதெல்லாம் அவர் அருகிலேயே ஒரு பழங்கால மெய்க்காப்பாளராக இருக்க முடிந்தது என்பதற்கு, அவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல. தெய்வாம்சம் பொருந்திய, அசாதாரண ஆற்றல் மிக்க மனிதராகயிருக்க வேண்டும்.

வாசகர்களைத் திகைப்பில் ஆழ்த்தும் நோக்கத்தில், மிக நுட்பமாக, நிகழ்ச்சிகளை வடிவமைப்பதில், கதாசிரியர் கவனத்துடன் செயல்பட்டிருப்பதை உணர முடிகிறது. ஒரு சம்பவத்திலிருந்து மற்றொரு சம்பவத்தை உருவாக்கி, அதில் எதிர்பாராத, திடீர் திருப்பங்களையும், சிக்கல்களையும், எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தி, வாசகர்களின் அத்தனை குழப்பங்களுக்கும் விடுதலை கிடைக்கும் விதத்தில், கதையின் முடிவை அமைப்பதில், கதாசிரியர், வளமான கற்பனைத் திறனை பயன்படுத்தியிருக்கிறார். நாவல் நெடுகிலும், தரமான நகைச்சுவைச் சிதறல்கள் இடம் பெற்றுள்ளதுடன், யதார்த்த உலகின் உண்மையான இயல்பைப் பிரதிபலிக்கும் வகையில் உயிரோட்டமாக அமைந்த நிகழ்ச்சிகளும், வசனங்களும் அமைப்பு முறையும், கதாசிரியரின் உலகியல் கண்ணோட்ட முதிர்ச்சியையும், அவற்றை படைப்பிலக்கியமாக்கும் திறமையையும் தெளிவு படுத்துகின்றன. மனித மூளையின் விசித்திரமான நடவடிக்கை களைக் கதாசிரியர் வியக்கத்தக்க வகையில் வெளிப்படுத்துகிறார்!

உலகம் பலவிதம் என்பது, இதன் மூலம் நன்கு புலனாகிறது. அன்பும், தேசபக்தியும், இணைந்த உயிரோவியங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ள கதாபாத்திரங்கள் பலவும், நீரில் எண்ணெய் படிந்தாற் போன்ற அழுத்தமான, உயர்ந்த உணர்வுகளைக் கொண்டிருக்கின்றன. புரட்சிக் குழுவினர் ஒவ்வொருவராகக் கொல்லப்படுகின்றனர். இளவரசர் மார்த்தாண்ட வர்மா அரியணை ஏறுகிறார். என்றாலும், இறுதியில் தமது குல தெய்வமான ஸ்ரீ பத்மநாப ஸ்வாமிக்கே தேசத்தை அர்ப்பணித்து விட்டுக் கடவுளர் சார்பில் ஆட்சி நிர்வாகப் பொறுப்புகளில் ஈடுபடுகிறார். ஸ்ரீ பரமேஸ்வரன் பிள்ளையை நிர்வாக அ
திகாரி யாகவும் ஸ்ரீராம ஐயரை, முக்கியப் பதவியிலும் மன்னர் மார்த்தாண்ட வர்மா நியமனம் செய்கிறார். தேசம் முழுவதும் மகிழ்ச்சியும், அமைதியும், சுபிட்சமும் நிலவுகிறது. அனந்த பத்மநாபன் கடைசியில், தனது உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்துகிறார். அத்துடன், அவரது லட்சியக் கதாநாயகியையும் திருமணம் செய்து கொள்கிறார். துரதிர்ஷ்டமிக்க சுபத்ராவைத் தவிர, இந்த கதையில் வரும் கதாபாத்திரங்கள் அனைவரும், கதையின் ஜீவனுக்கும், விறுவிறுப்புக்கும், திகில் மிகுந்த திருப்பங்களுக்கும், தரமான நகைச்சுவை ரசனைக்கும் தமது சிறப்பான பங்கை, திறம்பட நிறைவேற்றியிருப்பதுடன், கதை மங்களகரமாக முடிவடைவதற்கும் பக்கபலமாகத் திகழ்கிறார்கள். கதாசிரியர் சி.வி. அவர்கள் இந்த நாவலில், தன்னுடைய மலையாள இலக்கியப் புலமையையும், ஈடு இணையற்ற புதுமையான உக்திகளையும் தாராளமாகவே வெளிப்படுத்துகிறார். எனினும், நாவல் நெடுகிலும் ஏராளமான வடமொழிச் சொற்களின் பிரயோகங்களும், நம்பமுடியாத அளவிற்கு அதீத கற்பனைச் சரடுகளும் இடம் பெற்றுள்ளதாக, முதிர்ச்சி மிக்க வாசகர்கள் கூறும் கருத்திலும் உண்மை உண்டு. இருப்பினும், இந்தக் குறையை பெரிதுபடுத்தவோ, பொருட்படுத்தவோ விரும்புவதில்லை. காரணம், சி.வி.ராமன் பிள்ளை அவர்கள், நவீன மலையாள இலக்கியப் படைப்பாளிகள் அனைவரையும்விட, மிக உயர்ந்தவர். எவராலும் மிஞ்ச முடியாதவர். இதனாலேயே, அவரது படைப்புகள் கல்வித் தகுதிகளும், கலாசாரப் பண்பும் மிக்க அறிவுஜீவி வர்க்கத்தினருக்கு மட்டுமே உரியதாகக் கருதப்படுகிறது. மற்றவர்களால் அவ்வளவு எளிதில், அவரையோ, அவரது படைப்புகளையோ புரிந்து கொண்டுவிட இயலாது என்பது

உண்மையே. மார்த்தாண்ட வர்மா என்கிற அவரது நவீனம், ஆங்கிலத்தில்* மொழியாக்கம் செய்யப்படும் என நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், இந்த நவீனம் எல்லா வகையிலும் ஆங்கிலப் படைப்பிலக்கிய ரசிகர்கள் விரும்பும் அனைத்து அம்சங்களும் நிறைந்ததாகும். மேலும் ஒரு இந்தியப் பட்டதாரியின், படைப்பிலக்கியத் தகுதியையும், கற்பனை வீச்சின் உன்னதமான சாதனைச் சிகரங்களையும் அறிவதற்கும் சி.வி. அவர்களின் மார்த்தாண்ட வர்மா ஓர் அசாதாரண உதாரணமாக விளங்குகிறது!

---

* மார்த்தாண்ட வர்மாவின் ஆங்கில மொழிபெயர்ப்பு சாகித்ய அக்காதெமி வெளியீடாக 1998-ல் வெளியாகியுள்ளது. மொழிபெயர்ப்பாளர்: டி. கே. மேனன் விலை ரூ: 50

அனுபந்தம் - II

சி.வி. ராமன் பிள்ளை

முக்கிய நிகழ்ச்சிகளின் வரிசைப் பட்டியல்

19.5.1858	-	பிறப்பு (ஆயில்ய நட்சத்திரம்)
1869	-	ஆங்கிலக் கல்வி ஆரம்பம்
1876	-	திருவனந்தபுரத்திலுள்ள மகாராஜா கல்லூரியில் சேருதல்
1881	-	பட்டம் பெறுதல்
1882	-	தேசபக்தன்-ஆங்கில ஏடு துவக்குதல்
1884	-	'சந்திரமுகி விலாசம்' நாடகம் எழுதி முடித்தல் (இது அச்சேறவில்லை)
1884	-	திருவிதாங்கூர் உயர்நீதி மன்றத்தில் குமாஸ்தா பணியில் சேருதல்.
1885	-	'மலையாளி' -மாத இதழ் துவக்குதல்
1886	-	உயர்நீதி மன்றத்தின் தலைமை மொழி பெயர்ப்பாளராகவும், தாக்கல் செய்யப்படும் வழக்குகளை தொகுத்து வரிசைப்படுத்தும் அலுவலராகவும் பதவி உயர்வு பெறுதல்.
1886	-	இரண்டாவது திருமணம்
1889	-	சட்டக்கல்லூரியில் சேருதல் (ஆனால், இடையிலேயே நிறுத்திக் கொண்டார்)
1891 ஜனவரி	-	'மலையாளி'கள் அமைப்பில் முக்கியப் பங்கு
1891	-	'மார்த்தாண்ட வர்மா' நவீனத்தை எழுதி முடித்தல்
1896	-	உயர்நீதி மன்றத்தின் மேலாளர்.
1902	-	பி. தாணுப் பிள்ளையின் மரணம்
1904	-	அரசு அச்சகத்தில் தலைமை அதிகாரி பொறுப்பேற்றல்
1904	-	மனைவியின் மரணம்

1904	-	மனைவியின் மூத்தசகோதரி (விதவை)யை மணம் புரிதல்.
1909	-	குறுப்பில்லா களரி (நாடகம்) உருவாக்கம்
1912	-	அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுதல்
1913	-	'தர்மராஜா' உட்பட இரண்டு நாவல்களை எழுதி முடித்தல்
1914	-	பிரேமாமிர்தம்
1918	-	அறுபதாண்டு 'மணிவிழா' காணல்
1918	-	ராமராஜ பகதூர் (பகுதி - 1)
1919	-	ராமராஜ பகதூர் (பகுதி - 2) எழுதி முடித்தல்
1922	-	மரணம்

அனுபந்தம் - III

சி.வி. ராமன் பிள்ளை அவர்களைப் பற்றி வெளியாகியுள்ள நூல்கள்

நூலாசிரியர்	நூல்
1. பி.கே. பரமேஸ்வரன் நாயர்	சி.வி. ராமன் பிள்ளை (வாழ்க்கை வரலாறு - 1948)
2. என். பாலகிருஷ்ணன் நாயர்	சாக்ஷால் சி.வி. (வரலாறு) 1951
3. டாக்டர் கே. பாஸ்கரன் நாயர்	தெய்வ நீதிக்கு தாட்சண்யமில்லா (விமரிசனம்) 1959
4. பேராசிரியர் ஏ. கிருஷ்ணப் பிள்ளை	பிரதிபாத்ரம்பாஷண பேதம் (விமரிசனம்) 1959
5. ஜி. சங்கரப் பிள்ளை	சி.வி. யுடே ஹாஸ்ய சங்கல்பம் (தகவல் குறிப்பேடு) 1987
6. என்.பி. முகம்மது	வீரரசம் சி.வி.யுடே கிருதிகளில் (தகவல் குறிப்பேடு) 1988
7. டாக்டர் லீலாவதி	சிருங்கார ஆவிஷ்கரணம் சி.வி.யுடே நாவல்களில் (தனிமனித வரலாறு) 1989
8. கே.எஸ். கிருஷ்ணன்	சரித்திர கியாதிக்கு உள்ளுடே

சி.வி. ராமன் பிள்ளை (1858-1922): மலையாள மொழியில் முதன் முதலாக சரித்திர நாவலை எழுதி வெளியிட்ட முன்னோடி. 'மார்த்தாண்ட வர்மா' என்ற இந்த நாவல் (1891), மூன்று தொடர்களாக உருவானதாகும். கற்பனை வரலாற்று நவீனங்களை எழுதுவதற்கு இவருக்குப் பின் வந்த எழுத்தாளர்களுக்கு தூண்டுகோலாகவும் இது விளங்கியது. இந்த நவீனத்திற்கு ஒப்பாகவோ மிஞ்சும் வகையிலோ இதுவரை மலையாள இலக்கியத்தில் எந்தவொரு வரலாற்று நாவலும் உருவாகவில்லை என்பதே இதன் சிறப்பைத் தெளிவுபடுத்தும். சி.வி. அவர்களின் தனித்தன்மையான இலக்கிய உத்திகளுக்கும், நடையழகிற்கும், கற்பனை வளத்திற்கும், புதிய சொற்களின் உருவாக்கத்திற்கும் இந்த நாவல் தகுந்த சான்றாகும். இதைத் தவிர, மற்ற இலக்கியப் படைப்புகளான தர்மராஜா (1913), பிரேமாமிர்தம் (1916), ராமராஜபகதூர் (1918-1920) ஆகியவையும், புகழ் பெற்றவையாகும். அரசு ஊழியராயிருந்தும், பத்திரிகைத் துறையிலும், சமூகநல நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டு, சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியவர்.

பேராசிரியர் எஸ். குப்தன் நாயர் (1919): சி.வி. ராமன் பிள்ளை என்கிற இந்த வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவர். புகழ்பெற்ற ஒரு விமரிசகர், கட்டுரையாளர், அத்துடன் மலையாள மொழி அகராதியைத் தயாரித்தவர். கேரள சாகித்ய அக்காதமி மற்றும் மத்திய சாகித்திய அக்காதெமியின் (1967, 1983)விருதுகளைப் பெற்றவர். கேரள சாகித்ய அக்காதமியின் தலைவராகவும் பொறுப்பிலிருந்தவர். பேராசிரியர் நாயர் அவர்கள், இந்தச் சிறிய ஆனால், உண்மையான வரலாற்றுத் தொகுப்பு நூலில், சி.வி. ராமன் பிள்ளை அவர்களைப் பற்றியும், சமூக நலப் பணிகளில் அவரது பங்களிப்பு பற்றியும், மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்டிராத மற்ற மொழிகளைச் சேர்ந்த இலக்கிய வாசகர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்கிற பரந்த நோக்கில் எழுதியிருக்கிறார்.

C.V. Raman Pillai (Tamil)
ISBN 81-260-0634-X

Rs.25/-

22 மொழிகளிலும் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி
உலகிலேயே மிகப்பெரிய வெளியீட்டகம்